
# கல்கி

KALKI
1.7.2001
ரூ. 5.00



## அமீர் அடித்த சிக்ஸர்!




# இமாமி
# நேசுரலி ஃபேர் பேர்ல்ஸ்

## அசல் முத்துக்களுடன் கூடிய சிவப்பழகு க்ரீம்

உத்தரவாதமுள்ள அசல் முத்துக்கள் மற்றும் 11 அரிய மூலிகைகளின் அந்த அற்புத சிவப்பழகு சக்தியை இமாமி ஹெர்பல் சிசர்ச் தனது நாசுரலி ஃபேர் பேர்ல்ஸ் ஃபேர்னெஸ் க்ரீம், டால்க் மற்றும் சோப்புகளில் கொண்டு வந்துள்ளது.

### அசல் முத்துக்களின் ட்ரிப்பிள் ஆக்ஷன் ஃபேர்னெஸ்

**மெலானின் சிதறல் :** ப்ளீச் செய்வதில்லை - சருமத்தை கருக்கச் செய்யும் மெலானின்னை கட்டுப்படுத்துவதுடன் சருமத்திற்கு ஈரப்பசை அளிக்கிறது.

**ஆக்ஸிஜெனேஷன் ஆக்ஷன் :** கெடுதி விளைவிக்கும் UV கதிர்கள் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலை அசுத்தங்களிலிருந்தும் பாதுகாக்கிறது. சருமத்தை சுவாசிக்கச் செய்கிறது.

**ஆண்டி ஸ்ட்ரெஸ் ஆக்ஷன் :** சாதாரண ஃபேர்னெஸ் க்ரீம்களில் உள்ள கடுமையான ரசாயனங்கள் சருமத்திற்கு தீங்கு விளைவிக்கிறது. அசல் முத்துக்களின் அபார சக்தி சருமத்தின் உள்ளிருந்து அதற்கு பாதுகாப்பு வேலியாக அமைகிறது.

பொலிவில்லாத மங்கலான ஜீவனற்ற நிறத்தை அளிக்கும் சாதாரண ஃபேர்னெஸ் க்ரீம்கள் போலின்றி நேசுரலி ஃபேர்ல்ஸ், முத்துக்களின் அந்த ஜொலித்திடும் பிங்க் நிற, களங்கமில்லாத சிவப்பழகை அளிக்கிறது.

### இலவச மாஜிக் ஜெல்

நேசுரலி ஃபேர் பேர்ல்ஸ் க்ரீமுடன் பேர்ல் மாஜிக் ஜெல் இலவசம். அசல் முத்துக்கள் மற்றும் மூலிகைகளின் ஒரு புரட்சி கரமான அடர்ந்த சத்து சிவப்பாக்கும் வேலையை தீவிரமாக்குகிறது.






100 கிராமுக்
ரூ. 33.00




25 மி.லிக்கு ரூ. 30.00




75 கிராமுக்கு ரூ. 10.00

ASCENT/NFP/2001

# வில்லிவாக்கம் வந்த விபரீதம்?



வழக்கமாய் குப்பை மேடாகக் காட்சி தரும் சென்னை நேரு நகரும், அதை ஒட்டியுள்ள ஜெகன்நாதன் நகரும் பளிச்சென்று உஜாலாவுக்கு மாறியிருந்தன! உபயம், துப்புறவு ஊழியர்கள் தூவியிருந்த வெள்ளை நிற குளோரின் பவுடர். 'ஆத்தி! அதிமுக ஆட்சியிலே அசத்துறாங்களே' என்று தேநீர்கடை ஒன்றில் கூட்டமாய் நின்று கொண்டிருந்த லோக்கல்வாசிகளிடம் பேச்சுக் கொடுத்தோம். "அட போங்க சார்! தண்ணீர் ரயிலை வரவேற்க மாண்புமிகு மந்திரிகள் வாராங்களாம்... அவங்க புண்ணியத்துலதான் இன்னிக்கி ஒருநாள் சுத்தமாகி இருக்கு. அவ்வளவு ஏன் சார்... நேரு நகர் ரயில்வே லைனை ஒட்டியிருந்த குடிசைப்பகுதியிலே தீப்பிடிச்சு ஐம்பது வீடு காலி! இதுவரைக்கும் அரசாங்கத்துலேர்ந்து ஒரு நாதி வந்து பார்க்கலே..." என்று ஆதங்கப்பட்டார் மோகன்.

அங்கிருந்து நகர்ந்து தண்ணீர் ரயிலை அடைந்தோம். ரயில் பாதையை ஒட்டி துணிப்பந்தல் போடப்பட்டு, வாழை மரம் கட்டி, அமைச்சர்களை வரவேற்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள் மெட்ரோ வாட்டர் ஊழியர்கள். காவல் துறையும் அங்கே அலை பாய்ந்து கொண்டிருக்க... இதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் கூட்டம் கூட்டமாக வந்து, இராமத்திற்குள் புகுந்த கோவில் யானையைப் பார்ப்பது போல, ஈரோட்டிலிருந்து வந்த, முதல் தண்ணீர் ரயிலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் வில்லிவாக்கம் வாசிகள்.






வில்லிவாக்கம் ரயில் நிலையத்திற்கு நேர் கிழக்கே அமைந்துள்ள மூன்று அகல ரயில்பாதைகளில் வலதுபுறம் நின்று கொண்டிருந்தது 'தண்ணீர் ஸ்பெஷல்'. இடதுபுற டிராக்கில் ஐசிஎஃபில் தயாரிக்கப்பட்ட புது ரயில் பெட்டிகள் நிறுத்தப்பட்டிருக்க.. அவற்றுக்குக் காவலாக அரண் அமைத்தபடி ஐந்து ரயில்வே போலீசார்.

"கோச் ஃபாக்டரியிலே

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



**"உங்க பையன் எல்கேஜி போக பெரிய புத்தகப்பை எடுத்துட்டுப் போறான், சரி; கூடவே நீங்க அதைவிட பெரிய பை எடுத்துட்டுப் போறீங்களே, ஏன்?"**

**"பின்னே, டொனேஷன் கொடுக்கப் பணம் கொண்டு போக வேணாமா?"**

**— வந்தவாசி பா. ஜெயக்குமார்**

தயாரிக்கப்படுகிற புதுப் பெட்டிகளை இங்கேதான் நிறுத்துவாங்க... இப்போ தினசரி இங்கே தண்ணீர் ரயிலும் வரப் போகுது. அதுக்கும் நாங்கதான் இனிமே செக்யூரிட்டின்னு சொல்லிட்டாங்க" என்றார் ஒரு காவலர்.

ஒவ்வொரு டாங்கரின் இணைப்பிலிருந்தும் தூவல் பாசனம் மாதிரி தண்ணீர் கசியத் தொடங்கியது. உடனே ஒவ்வொரு டாங்கராக சரி செய்யத் தொடங்கினார்கள் ஊழியர்கள். இதற்குள் ரயில்வே லைனை ஒட்டியிருந்த வீடுகளிலிருந்து நீருற்றைக் கண்ட சந்தோஷத்தில் பிளாஸ்டிக் குடங்களோடு தண்ணீர் ரயிலை நோக்கி ஓடி வந்தனர் நான்கைந்து சிறுவர்கள். இதைக் கவனித்துவிட்ட குடும்பத் தலைவர் ஒருவரும் அவசர அவசரமாகக் குடத்தோடு ஓடிவந்து கசியும் நீரைச் சிந்தாமல் சிதறாமல் பிடிக்கத் தொடங்கினர்.

"இரண்டு நாளைக்கு ஒருமுறைதான் நேரு நகருக்குத் தண்ணீர் லாரி வருது... அப்படியும் குடத்துக்கு ஐம்பது காசு கொடுக்குறோம். இப்போ குடத்துக்கு ஒரு ரூபா தர்றோம்ன்னு கூட சொல்லிப் பார்த்துட்டோம்... அவங்க இஷ்டத்துக்குதான் நினைச்சப்போ தண்ணீர் விடுறாங்க" என்றபடி நகர்ந்தார்.

தண்ணீரோடு நகர்ந்த அவரைத் தடுத்து நிறுத்தினார், அங்கே வந்த முன்னாள் ரயில்வே ஊழியர் மோகன்ராம்.

"இந்தத் தண்ணீர் காவேரி ஆற்றுப் படுகையிலே எடுத்ததுதான்னாலும், கீழ்ப்பாக்கத்துல சுத்திகரிச்சு குளோரின் போட்ட பிறகுதான் குடிக்கணும், இப்போ குடிக்காதீங்க...." என்றார்.

"அடப் போங்க சார்... கீழ்ப்பாக்கத்துலே எங்கே சார் சுத்திகரிக்கிறாங்க.. பில்டர் செய்து குளோரின் போட்டுக் கொடுக்குறாங்க... காய்ச்சிக் குடிச்சா சரியாப் போயிடும்" என்றபடி நகர்ந்தார் ஆனந்த்.

இதற்குள் மெட்ரோ வாட்டர் குவாலிட்டி அஷ்யூரன்ஸ் பிரிவு வேதியல் ஆய்வாளர்கள், உபகரணங்களோடு அங்கே கூடினார்கள். சாம்பிளுக்குச் சில டாங்கர்களில் இருந்து தண்ணீர் எடுத்து அங்கேயே சோதிக்கத் தொடங்கினார்கள். ஒரு ஆய்வாளரிடம் பேச்சுக் கொடுத்தோம்.

"இங்கேயே இரண்டு ஸ்பாட் டெஸ்ட் செய்யறோம். ஒன்று டிடிஎஸ் (TDS) அதாவது குளோரைடு, மெக்னீசியம், கால்சியம் மாதிரியான இரசாயனங்கள் இருக்கிறதா என்று நிமிஷத்தில் பார்க்க முடியும். அடுத்து டர்பிடிட்டி (Turbidity) அதாவது தண்ணீரில் எவ்வளவு கலங்கல் தன்மை இருக்கு என்பதை டர்பிடிட்டி மீட்டர் மூலம் அளந்து கீழ்ப்பாக்கம் நிலையத்துக்குச் சொல்லி விடுவோம்" என்றபடி பணியில் தீவிரமாக இருந்தனர்.


ஆனால் நம்மிடம் ரகசியமாய் சொன்னார் அங்கு வந்த மெட்ரோவாட்டர் ஊழியர் ஒருவர்:

"தண்ணீரில் பேக்டீரியாக்கள் இருக்கிறதான்னு பார்த்து கிருமிநாசினி போடுவது ப்ரிகுளோரேஷன் டெஸ்ட் (Prechloration) அடுத்து சுண்ணாம்பும், படிகாரமும் போட்டு அழுக்கைச் சுத்தம் செய்வது ஆலம் (Alum) ட்ரீட்மெண்ட். அடுத்து தண்ணீருக்குத் தெளிவு கொடுக்கும் செட்லிங் டாங்க் ட்ரீட்மெண்ட். கடைசியாக ஃபில்டர் செய்து, குளோரின் போடப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டும்... ஆனால் இந்த நான்கு ட்ரீட்மெண்டில் கடைசியாக நான் சொன்னது மட்டும்தான் கீழ்ப்பாக்கத்துல தொடர்ந்து நடக்குது... மற்றவையெல்லாம் தீபாவளி, பொங்கல் மாதிரி. எப்பவாவது செய்து பார்ப்பாங்க."

காவிரி படுகை நீரென்றாலும், கட்டாயச் சுத்திகரிப்பைக் கண்காணிக்க, அரசு தனிக் கவனம் செலுத்தாவிட்டால், வில்லிவாக்கம் வந்தது காவிரியா இல்லை விபரீதமா என்ற வினா எழுந்து விடும்!

**- ஜெயந்தன்**

படங்கள்: ஜாபீஸ்



# நில், கவனி, வெற்றிகொள்!

வீடு, குடும்பம் என்பதெல்லாம் வெறும் செங்கல், சிமெண்ட் விஷயமல்ல. உயிரைத் திரித்து பாச தீபம் ஏற்றும் அன்புக் கோயில். ஆனால் இப்போதுள்ள பரபரப்பான வாழ்க்கைச் சூழலில், எல்லா உறவுகளுமே பொருளாதாரச் சங்கிலியால் பின்னப்பட்டு, இயந்திரத்தனமாகிவிட்டன. விவாகரத்துகளும், முதியோர் இல்லங்களும் பெருகிவிட்டன. விருந்தாளிகள் வரவு குறைந்தேவிட்டது. குழந்தைகள் தனித்தீவுகளில் வசிக்கிறார்கள்.

இந்த நிலையை மாற்ற வேண்டாமா? குடும்பம் சிறந்தால்தானே நாடு உயரும்? சிந்தனை முத்துக்களை சிந்த வருகிறார்கள் இரண்டு பிரமுகர்கள்.

தலைப்பு : அன்பெனும் கூட்டினிலே...

நாள் : 8.7.2001 ஞாயிறு

இடம் : நாரதகான சபா, சென்னை - 18

நேரம் : மாலை 6 மணி

தலைமையுரை : **சுகி.சிவம்**

சிறப்புரை : **சிவசங்கரி**

குடும்பத்தோட வாங்க!
குதூகலமாத் திரும்புங்க!
அனுமதி இலவசம்.

**கல்கி**

**ஸ்ரீ கிருஷ்ண ஸ்வீட்ஸ்®**

இணைந்து வழங்கும் இளைஞர் திருவிழா!

கிரிக்கெட்டை மையமாக வைத்து, கிராமியச் சூழலில், பிரிட்டிஷ் காலத்திய கதையை ஓர் இந்தித் திரைப்படமாக்க முடியுமா? (ஆர்ட் ஃபிலிமெல்லாமில்லை; பூரா கமர்ஷியல்தான்!)

"மும்பையில் இந்தப் பேய் மழை கொட்டும்போதே



இப்படி புத்தி பேதலிக்குமென்றால், வெயில் காலத்தில் எப்படியோ?" என்பதாகத்தானே முறைக்கிறீர்கள்?

அமீர்கானும் இப்படியேதான், நண்பர் அசுதோஷ் காவரிகர் முதன்முதலாக அப்படி ஒரு கதையை அவிழ்த்து விட்டதும், முகம் திருப்பியிருக்கிறார். ஆனால் அசுதோஷ் அத னாலெல்லாம் மனம் வெதும்பி 'பபிள்கம் ரொமான்ஸ்'களுக்கும் 'முக்கோண மசாலா'க்களுக்கும் தாவி விடவில்லை. அதே கதையை விலாவாரியாக எழுதி, முழு திரைக்கதை, வசனத்துடன் மூன்று மாதம் கழித்து, மீண்டும் அமீரிடம் ப(ந)டித்துக் காட்டியிருக்கிறார்.

இம்முறை, அதில் ஏதோ ஒரு தீப்பொறி இருப்பதை உணர்ந்து மீண்டும் மீண்டும் ஸ்கிரிப்டில் மூழ்கிய அமீர், ஒரேயடியாக அமிழ்ந்தே விட்டார்.

'இதில் நடிப்பது மட்டுமில்லை; தயாரிப்பையும் நானே ஏற்கிறேன்; நீ இயக்கு' என அசுதோஷை முடுக்கிவிட்டார்.

இருபத்து ஐந்து கோடிகளைக் கொட்டி, பூகம்பகத்துக்கு முந்தைய 'பூஜ்'ஜில் ஆறு மாதம் தங்கி, 'சம்பானீர்' என்ற கிராமத்தை நிர்மாணித்து, ஆங்கிலேய நடிகர்களை வரவழைத்து, முழு மூச்சுடன் 'லகான்' (வரி)ஐ முடித்தது வீண் போகவில்லை. வெளியான மூன்று மணி நேரத்துக்குள், பிரதான தியேட்டர்களில் ஒரு வார புக்கிங் முடிந்து, ஒரே கலாட்டா! கிரிக்கெட் படுத்துவிட்டாலும், கிரிக்கெட் பற்றிய இந்தப் படத்துக்கு ஏக 'பெட்டிங்!'

ஸன்னி தியோலின் 'கதார் - ஏக் ப்ரேம் கஹானி'யும் அதே நாளில் ரிலீசாவதால், 'லகான்' ஸூப்பர் ஹிட்தான் என்பது சினிமா ஜோசியர்களின் கணிப்பு! (1992ல் தில் - காயல், 96ல் ராஜா ஹிந்துஸ்தானி - காடக் என ஒரே நாளில் இருவரின் படங்களும் வெளியாகி பாக்ஸ் ஆபீஸில் சரித்திரம் படைத்தன) "எனக்கு ஸன்னி ரொம்ப லக்கிதான்" என்கிறார் அமீர்!

போதாக்குறைக்கு 'லகானை'ப் பிரதமர் வேறு பார்த்துவிட்டு, 'பஹுத் கூப்' என்று பாராட்டுப் பத்திரம் வாசித்து விட்டார்.

வீடியோ பைரஸி பற்றி சுஷ்மாஜியிடம்



# அமீர் அடித்த சிக்ஸர்!

புகார் கொடுக்க டில்லிக்குப் போன அமீருக்கு, அட்டல்ஜியும் அத்வானிஜியும் மாட்டியது இரட்டிப்பு அதிர்ஷ்டம். 'அத்வானி பெரிய கிரிட்டிக்காயிற்றே' என உள்ளூர உதறல்; "அவருக்கு ஆடல் பாடல் காட்சிகளெல்லாம் பிடித்துப் போய் யார் கோரியோகிராஃபர் என்றதும் நான் அசந்தே விட்டேன்" என்கிறார் அமீர்.

கேட்க மாட்டாரா என்ன? பாடல்கள் ஜாவேத் அக்தர் (ஷபானா கணவர்) என்றால், இசை நம்ம ரஹ்மானாயிற்றே? ஒரே தேன் மழை! 'மித்வா' அமீருக்கு இனித்ததென்றால் 'மதுபன்மே கன்னையா' எல்லோரையும் மயக்கிவிட்டது. லதாவுக்குத் தவம் கிடந்தல்லவா 'பாலன் ஹாரே'வை பதிவுச் செய்திருக்கிறார்கள்? 'சோரி சோரி'க்குப் பாட்டெழுதும்போது, ஜாவேத் தம் குழந்தைகள் ஃபர்ஹான், ஜோயா இருவரையும் தனித் தனி ரூமில் அடைத்து, இசையைப் போட்டு, தகுந்தார் போல் இங்கிலீஷில் பாட்டெழுதச் சொன்னாராம்; ஆளுக்கொரு 'பாரா' எழுதி, ஜமாய்த்து விட்டார்கள்!

கதைக்கு வருவோம். களம் பூஜ் பகுதியில் சம்பானீர் கிராமம்; காலம் 1893; மகசூலில் ஒரு பகுதியை விவசாயிகளிடமிருந்து வரியாக வசூலித்தது ஆங்கிலேயர் ஆட்சி. வானம் பொய்த்ததனால், கிராமத்தார் வரி செலுத்த முடியாமல் தவிக்க, 'கிரிக்கெட்டில் எங்களை ஜெயித்தால், வரியிலிருந்து மூன்று வருடங்கள் விடுதலை; தோற்றால் மும்மடங்கு வரி வசூல்' என்ற நிபந்தனையை ஆங்கிலேயப் பிரபு (பால் ப்ளாக்தார்ன்) முன் வைப்பது முன்பாதிக் கதை; புவன் (அமீர்) எப்படி, கிரிக்கெட்டின் ஸ்பெல்லிங்கே தெரியாத கிராமத்தார்களைத் திரட்டி, தன் மீது ஒரு கண் வைத்திருக்கும் வில்லனின் தங்கை எலிசபெத் (ரேச்சல் ஷெல்லி) யிடமிருந்து ஆட்டத்தைப் பற்றிய 'டிப்ஸை' கறந்து, விவசாயிகளை ஊக்குவித்து, முடிவில் மோதுகிறார் என்பது பின்பாதி கதை!

கிரிக்கெட் 'த்ரில்'லில் தியேட்டரில் பாதி பேர் ஸீட் நுனியில், மீதி ஸ்க்ரீன் அருகில், காச்மூச் கத்தல், கைதட்டல் எல்லாம் அசல் மாட்சைப் பார்க்கும் பிரமையை ஏற்படுத்துகின்றன. (க்கும்... டிப்ஸ் கொடுத்தது ஸச்சினாயிற்றே!) கடைசி பாலில் அமீர் சிக்ஸர் அடிக்க, அதை எதிரணி காட்ச் பிடிக்க, ஒரு மூச்சுத் திணறல் இருக்கிறதே... அப்பப்பா... கடைசியில்... ஆமாம்... இது கூடத் தெரியாதா?

'சுபம்' போடும்போது மூன்று மணி நாற்பத்து இரண்டு நிமிட நேரம் போனதே தெரியவில்லை.

"ஒரிஜினல் படம் நாலு மணி நேரம்; கஷ்டப்பட்டு குறைத்தோம்; தியேட்டர்களில் ஒரு ஷோ குறையும்; ஆனால் மனம் பொங்கி வழியுமே" என்கிறார் அசுதோஷ்.

"நீளப் படம்; பீரியட் படம்; புதிய முகங்கள், அசுதோஷின் முதல் இரண்டு படங்கள் ஃப்ளாப்... இருந்தாலும் எப்படி ரிஸ்க் எடுத்தீர்கள்?'' என்று அமீரிடம் கேட்டால் "சவால்கள்தான் எனக்குப் பிடிக்கின்றன" என்று சிரிக்கிறார்.

"சுவாரஸ்யமிருந்தால் படத்தின் நீளம் தெரியாது; 'முகலே ஆசம்,' 'க்ளாடியேட்டர்' கூட பீரியட் படங்கள்தான், என்ன போடு போட்டன? அசுதோஷ், படத்தை ஆரம்பிக்கு முன் இந்தியா முழுவதும் டூர் அடித்து, எந்தப் பகுதி மக்கள் எதை ரசிக்கிறார்கள் என்ற ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தார். அவர் மீது எனக்கு முழு நம்பிக்கை இருந்தது'' என்கிறார்.

அமீர், ஆங்கில நடிகர்களுக்காக லண்டனில் டேரா போட்ட போது, ஒரு மியூசியம் ஒரு லைப்ரரி விடாமல் அலைந்து திரிந்து, பிரிட்டிஷ் காலத்திய மண் வாசனையைப் படத்தில் புகுத்த படாத பாடு பட்டிருக்கிறார். எக்கச்சக்க ஸ்க்ரீன் டெஸ்டுக்குப் பின் வடிகட்டப்பட்டவர்களுக்கு, இந்தி ட்யூஷன் எடுக்க, லண்டனில் வசிக்கும் பாகிஸ்தானிய நண்பியான ஸமீனாவை நியமித்திருக்கிறார் அமீர்.

அவர் இந்தி வசனங்களை நன்றாக உருவேற்றி அனுப்பியதில், மும்பையில் கால் பதித்ததும், ஆர்வமீறிய பால், டாக்ஸி ட்ரைவரிடம் "ஹே... தும் குலாம் லோக்" (ஹே அடிமைப்



"மாப்பிள்ளைக்கு ரயில்வேயில உத்யோகம்னு சொன்னதை நம்பி பெண்ணைக் கொடுத்தது தப்பாப் போச்சு!"

"என்ன நடந்தது?"

"ரயிலில் திருடறதுதான் அவர் தொழிலாம்!"

— எஸ். வீமராஜன்

பதர்களா...) என்ற இந்தி டயலாக்கை அவிழ்த்துவிட, நல்லவேளை, நான் பக்கத்தில் இருந்ததால் அடிபடாமல் தப்பினார்" என்று பரிகசிக்கிறார் அமீர்.

'அமானத்' என்ற இந்தி டீ.வி தொடரில் மட்டுமே நடித்திருந்த 'க்ரேஸி ஸிங்'கை (சுத்த பஞ்சாபி இந்துதான்; அத்தையின் ஆங்கில மோகத்தால் இந்தக் 'க்ரேஸி'யான பெயர்!) ஹீரோயினாக்கியது மற்றுமொரு 'ரிஸ்க்!'

"நந்திதாதாஸிலிருந்து ராணி முகர்ஜி வரை எல்லா நடிகைகளையும் இந்தப் பாத்திரத்தில் நுழைத்துப் பார்த்தோம். தேறியது க்ரேஸி ஸிங்தான்" என்று தயங்காமல் சொல்கிறார் ஆமீர். அவரது நம்பிக்கை பொய்க்காமல் காப்பாற்றி விட்டார் க்ரேஸி...

ஒலிப்பதிவிலும் 'ரிஸ்க்' இல்லாமலில்லை; அந்தக் காலத்திய 'ஸின்க்ரொனைஸ்டு ஸவுண்டு' முறையில் (டப்பிங் இல்லாமல்) ஒலியமைக்க நகுல் காம்தே பெரும் பாடு பட்டிருக்கிறார். வீரிடும் காற்று, பக்கத்திலிருந்த ஏர் ஃபோர்ஸ்காரர்களின் மார்ச் பாஸ்ட் சப்தம் - இவற்றிடையே இயற்கையாக ஒலியமைப்பதென்றால்.. சும்மாவா...? அமிதாப்பின் பின்னணிக் குரல் தனி கம்பீரம்!

படமெடுக்கும்போது ஏகப்பட்ட சோதனை. குழுவில் ஒருவர் காலை முறித்துக் கொள்ள, மற்றொருவருக்கு எமர்ஜென்சி அப்பன் டிசைடிஸ் ஆபரேஷன்! ஆக தோஷையே 'ஸ்லிப் டிஸ்க்' தாக்க, ஒரு கட்டிலைப் போட்டுக் கொண்டு, அதில் படுத்தவாறே இயக்கி இருக்கிறார் இயக்குனர்! படத்தை நிமிர்த்தி விட்டாரே... போதாதா?

கண் பனிக்கும் சில நினைவுகளும் உண்டாம். படப்பிடிப்பின் போது ஆங்கில ஜூனியர் ஆர்டிஸ்டுகள் கத்கின் - ஜமை ஜோடிக்கு 'ஸெட்' கோயிலில் உண்மையிலேயே கன்னிகாதானம் செய்து வைத்திருக்கிறார் அமீர். மெஹந்தி விழாவிலிருந்து, சப்தபதி வரை முழுக்க இந்திய ஸ்டைலில்!

பெரியவர்கள் பலருடனும் குழுவினர் நட்புடன் பழகியிருக்கின்றனர். பூகம்பத்துக்குப் பிறகு, இப்போது அங்கே போய் பார்த்தால்... அந்தக் 'கோயில்' அந்தக் குழந்தைகள், அந்தப் பெரியவர்கள்... காணவில்லை.

35 கோடிகள் பூகம்ப நிதி திரட்டிக் கொடுத் திருக்கிறார் ஆமீர்! ஆங்கில ஆர்டிஸ்டுகள் 5000 பவுண்டுகள் வழங்கியுள்ளனர். அங்கே தரை மட்டமாக்கப்பட்ட சரிவுகளை எழுப்ப உதவுகிறாரோ இல்லையோ... இங்கே... தரை மட்டத்துக்குச் சரிந்துவிட்ட இந்தித் திரைப் படங்களின் தரத்தை 'லகான்' மூலம் எழுப்பி நிறுத்த நிச்சயம் உதவியிருக்கிறார்!

— ஜெயஸ்ரீ ராஜ்


# Are you looking for a suitable life partner ?

## Choose from 60,000 Indians / NRIs

Now you can use our unique Worldwide Matrimonial Service to find an ideal bride or groom from more than 60,000 members of all castes, religions and communities in a fast, convenient and economical method.

**CONFIDENTIALITY ASSURED**

**Register Now**
Call 044 - 498 0334 / 0358

the wedding hub

**World Wide Matrimonial Service**


Regional Office: "Aswini", 1st Floor, 3, (Old No. 2), Sriman Srinivasan Road, Alwarpet, Chennai - 600 018.
Tel - 044 - 498 0334 / 0358
E-mail - contact@theweddinghub.com
website: theweddinghub.com

Branches at: **Delhi - 6522687/89 , Kolkata - 4652907/08 , Mumbai - 6914433**



• சுதாகரன்

## காதில் விழுந்தவை!



• ஜெயேந்திரர்


● அக்டோபரில் சைனாவுக்கு பயணம் மேற்கொள்ளும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தொடர்ந்து நவம்பரில் இலங்கை பயணத்தை மேற்கொள்வார் என்று சங்கர மடத்திலிருந்து கசியும் தகவல்கள் சொல்கின்றன. ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டால் ஸ்ரீலங்காவிற்கு ஆபத்து என்று ஒரு பேச்சு இருந்தது. இப்போது ஸ்ரீலங்காவில் அமைதியின்மை தொடர்கதையாகி விட்டது. அதை நிவர்த்தி செய்யும் விதமாக கொழும்புவிற்குப் பதினைந்து கி.மீ தொலைவில் ரங்கநாதர் ஆலயம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்கம் போலவே கட்டப்பட்டு வரும் இந்த ஆலயத்தை கணபதி ஸ்தபதி (வள்ளுவர் சிலை செய்தவரல்ல இவர்) தலைமையில் தமிழகத்திலிருந்து சென்றுள்ள ஸ்தபதிகள் உருவாக்கி வருகிறார்கள். இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகத்துக்குப் போவதுதான் ஸ்ரீ ஜெயேந்திரரின் திட்டம். ஆனால் பயணம் ராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் இருக்குமாம். இடையில் மூன்று குட்டித் தீவுகளில் தங்கிச் செல்வாராம். தலைமன்னாரில் இறங்கி, திருக்கேதீஸ்வரர், திரிகோண ஈஸ்வரர், நல்லூர் முருகன் ஆகிய ஆலயங்களுக்குச் சென்று விட்டு கொழும்புவிற்குச் செல்வார் ஜெயேந்திரர். அப்படிச் செல்லும் போது பிரபாகரனைச் சந்தித்து பேசும் வாய்ப்பும் இருப்பதாகச் சொல்கிறார்கள். இலங்கையில் அமைதி திரும்ப, அந் நாட்டு அரசும் ஜெயேந்திரரின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறது.

## உயிர்த்தோழியின் கணவர் கைது?

● மாஜி வளர்ப்பு மகன் கைதுக்கு 'காரணம்' என்னவென்று இப்போது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அது போலவே உயிர்த்தோழியின் கணவருக்கும் ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்க விரும்புகிறாராம் ஜெ. தேர்தல் முடிவுகள் தெரிந்ததும் 'என் பணி முடிந்துவிட்டது' என்று அறிவிப்பு எழுதி அவர் தமது வீட்டில் தொங்கவிட்டதில் ஜெ.வுக்கு செமை கடுப்பாம். சாதகமற்ற சூழ்நிலையில் இரவும் பகலும் அலைந்து திரிந்து தாம் பெற்ற வெற்றிக்கு அவர் க்ரெடிட் எடுத்துக் கொள்வது போல் செயல்பட்டதற்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைக்கிறாராம். பலமுறை 'அவருக்கும் போயஸ்தோட்டத்துக்கும் சம்பந்தம் இல்லை' என்று அறிக்கை விட்டிருந்தபோதும் பல அதிமுக பிரமுகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இன்னமும் அவருடன் தொடர்பு வைத்திருப்பதைத் தெரிந்தே வைத்திருக்கிறார் ஜெ. வடக்கில் உள்ள தமது மருத்துவ கல்லூரி அட்மிஷனில் பிஸியாக இருக்கும் தோழியின் கணவன் சென்னைக்கு வந்ததும் ஜெ. அதிரடி நடவடிக்கைகள் எடுப்பார் என்கிறார்கள்.

● புதிய சூழலில் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொண்டு ஜெயா தொலைக்காட்சி, ஜெயா நியூஸ், தெலுங்கு சேனல் என்று சிறகுகளை விரிக்க திட்டம் போட்டுச் செயல்படும் இந்தச் சமயத்தில் 'சன்' தொலைக் காட்சி தடுமாறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக 'சன்' செய்தி சேனலுக்கு விளம்பரங்கள் சரியாகக் கிடைக்காததால் அதை நிறுத்தி விட்டால் என்ன என்று யோசிக்கிறதாம் நிர்வாகம். கட்சி சாயம் விழுவதைத் தவிர்க்க, பொதுமக்களிடம் பங்குகள் வாங்கி பப்ளிக் லிமிடெட் கம்பெனியாக 'சன்'னை மாற்றும் திட்டமும் இருக்கிறதாம். ஆனால் கலைஞரின் குடும்பத்தினர் இதை விரும்பவில்லையாம்.


— சஞ்சயன்



உ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ விகனஸ மஹா குருவே நம:



# ஸ்ரீ மஹா சுதர்ஸன ஜெயந்தியை முன்னிட்டு

# ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞ்யம் (ஒரு லக்ஷ்க்ஷம் ஆவர்த்தி)

## (2.8.2001 வியாழன் முதல் 5.8.2001 ஞாயிறு முடிய)

பேரன்புடையீர்,

இப்பவும் நாளது வருஷம் ஆடி மாதம் 17ஆம் தேதி முதல் 20ம் தேதி முடிய 2.8.2001 வியாழன் முதல் 5.8.2001 ஞாயிறு முடிய **ஸ்ரீ மஹா சுதர்ஸன** யாகமும் 5.8.2001 மாலை 4.00 மணி அளவில் ***ஸ்ரீ சுதர்ஸனலக்ஷ்மி ஸ்ரீ சுதர்ஸனமூர்த்தி*** திருகல்யாண உற்சவமும் மிக விமரிசையாக நடைபெறும். பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ சுதர்ஸன லக்ஷ்மி சமேத ஸ்ரீ மஹா சுதர்ஸன மூர்த்தி பரிபூரண திரு அருள் உண்டாகட்டும்.

கட்டணம் ரூ. 100/- ரூ. 250/- ரூ.500/- ரூ. 1000/- ரூ. 2000/- ரூ. 5000/-

**ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞயம் T.V.R. சுப்புசெட்டி வசந்த மண்டபம், நெ.14, மேற்கு சித்திரகுளம் தெரு, மைலாப்பூர், சென்னை – 4. என்ற இடத்தில் நடைபெறும்.**

குறிப்பு: ☞ ரூ. 100/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ சுதர்ஸன காப்பர் டாலர் வழங்கப்படும்.

☞ ரூ. 250/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ சுதர்ஸன வெள்ளி டாலர் வழங்கப்படும்.

☞ ரூ. 500/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ சுதர்ஸன யந்திரம், ஸ்ரீ சுதர்ஸன ரக்ஷைஷ வைத்த வெள்ளி தாயத்து வழங்கப்படும்.

☞ ரூ. 1000/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ சுதர்ஸனயந்திரம், ஸ்ரீ சுதர்ஸன ரக்ஷைஷ வைத்த வெள்ளி தாயத்து மற்றும் திருகல்யாண உற்சவத்திலும் பங்கு கொள்ளலாம்.

☞ ரூ. 2000/- செலுத்தும் பக்தர்களுக்கு யாக சாலையில் உள் விசேஷசங்கல்பம், ஸ்ரீ மஹா சுதர்ஸன யந்திரம், ஸ்ரீ சுதர்ஸன ரக்ஷைஷ வைத்த 1 கிராம் தங்க தாயத்தில் வைத்து கொடுக்கப்படும். திருகல்யாண உற்சவத்திலும் கலந்து கொள்ள.ாம்.

☞ ரூ. 5000/- செலுத்தும் பக்தர்களுக்கு யாக சாலையில் உள் விசேஷசங்கல்பம், ஸ்ரீ மஹா சுதர்ஸன யந்திரம், ஸ்ரீ சுதர்ஸன ரக்ஷைஷ வைத்த 1 கிராம் தங்க தாயத்தும் 5.8.2001 பூர்ணாதி முடிந்தவுடன் ஒரு தம்பதிக்கு கும்பஸ்நானமும், யாகத்தில் வைத்த ஒரு கலசம் (குடம்) கொடுக்கப்படும். திருகல்யாண உற்சவத்திலும், விசேஷசங்கல்பம், மாலை மரியாதை வழங்கப்படும்.

மேற்கண்ட அனைத்தும் ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞய பூஜையில் வைத்து கொடுக்கப்படும். மேலும் கலந்து கொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் தனி தனியாக சங்கல்பம், ரக்ஷாபந்தனம் செய்து, ஸ்ரீ சுதர்ஸனமூர்த்தி படம் வழங்கப்படும்.

---

ஸ்ரீ சுதர்ஸன மஹாயக்ஞ்யம் (1 லக்ஷக்ஷம் ஆவர்த்தி) டிக்கட் கிடைக்கும் இடம்:
S. ஸ்ரீ ரங்கராஜபட்டாசாரியார், பழைய எண்: 5, புதிய எண்: 32, கேசவபெருமாள் சன்னதி தெரு, மைலாப்பூர், சென்னை - 4. ஃபோன்: 4610179. (நேரம்: காலை 11 மணி முதல் இரவு 8 மணி வரை)

---

**M.O/ D.D. அனுப்பும் பக்தர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்**
**(காசோலை ஏற்று கொள்ளபட மாட்டாது)**

ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞ்ய கமிட்டி.
S. ஸ்ரீ ரங்கராஜபட்டாசாரியார், பழைய எண்: 5, புதிய எண்:
32, கேசவபெருமாள் சன்னதி தெரு, மைலாப்பூர்,
சென்னை - 4. ஃபோன்: 4610179



# நூற்றியெட்டாவது யக்ஞம்!

“பெரிய பெரிய யக்ஞங்களையெல்லாம் பண்ணவே வேண்டாம். இந்தக் கலியுகத்தில் அதையெல்லாம் நம்மால் நியமமாகப் பண்ணவும் முடியாது. ஆனால் பகவான் நாமாவைச் சொல்லி, 'நம:' என்று ஆத்ம சமர்ப்பணம் பண்ணிவிட்டால் யக்ஞ யாகாதிகளையெல்லாம் செய்ததற்கு நிகரான பலனை நமக்கு அவன் அருளிவிடுவான்.” - என்று மிக மிகச் சுலபமான வாழ்வியல் பக்தியைப் பிரவசனம்தோறும் பரப்பி வந்தவர் முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்.

அந்த பகவான் திருநாமம் மட்டுமின்றி அவனுடைய அருமை பெருமைகளும் அவருடைய வாக்கில் அமுத தாரையாகப் பெருகி வந்த வண்ணமிருந்தன. ஆனால் பிரேம பக்தியுடன் பிரவசனங்களைப் பொழிவதோடு திருப்தியடைந்து விடவில்லை இந்தப் பெரியவர். பகவான் நாமாவை உச்சரிப்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. கடுமையான நியமங்களைக் கோரும் யக்ஞங்களை நிகழ்த்துவதிலும் உறுதியாயிருந்தார். 108 நரசிம்ஹ யக்ஞங்கள் நடத்திவிடுவது என்று சங்கல்பித்துக் கொண்டு 107 யக்ஞங்களை நடத்தி முடித்துவிட்டார். 108வது யக்ஞத்தை முடிக்கும் முன் ஆசார்யன் திருவடி எய்திவிட்டார்.

குறையொன்றுமில்லாத நிறை வாழ்வை அவர் எய்தியதாக சமாதானம் கொள்ளும் அன்பர்கள்கூட, 108வது யக்ஞத்தை அவர் முடிப்பதற்குள் பகவான் அவரை அழைத்துக் கொண்டானே என்று ஆதங்கப்படவே செய்தார்கள்.

இந்த ஆதங்கத்துக்கும் விடை கொடுத்து, அவர் நினைவை குறையின்றிப் போற்ற வழி காட்டப்பட்டது ஆஸ்திக சமாஜம் (சென்னை – 18) நடத்திய அஞ்சலி கூட்டத்தில்.

இன்றைய முன்னணி பிரவசனகர்த்தர்களை ஒரே மேடையில் ஒருங்கிணைத்த அந்தக் கூட்டத்தில் பேசிய சுகி சிவம், '108ஆவது யக்ஞமாக முக்கூர் தம்மையே தமது இஷ்ட தெய்வமான நரசிம்ஹனுக்கு வழங்கிவிட்டார்' என்று குறிப்பிட்டபோது அதுவரை கலங்கியிருந்த கூட்டத்தினரின் விழிகளெல்லாம் உடைப்பெடுத்துக் கொண்டன!

20 ஜூன் அன்று செய்தித்தாள்களில்கூட அறிவிப்பு வரவில்லை. அப்படியிருந்தும் முக்கூர் அன்பர்கள் ஆஸ்திக சமாஜத்தில் திரண்டிருந்தனர்.

முக்கூரின் பாண்டித்யம், சௌலப்யம், சீலம், ஞானத்தையும் பக்தியையும் அவர் இணைத்த நேர்த்தி, வேத முழக்கத்தில் ஆரம்பித்து, பிரமாணங்களை அனாயாசமாக எடுத்தாண்டு, செவி குளிர, மனம் நிறைய அவர் வழங்கிய உபன்யாசங்களின் உயர்வு என்று வரிசைப்படுத்தி கல்யாணபுரம் ஆராவமுதன், சுந்தர் குமார், வேளுக்குடி கிருஷ்ணன், நாகை முகுந்தன், சுகி சிவம் போன்ற பிரவசன கலைஞர்களும் டி.ஜி.சாரநாதன், கல்கி ராஜேந்திரன் போன்ற முக்கூர் பக்தர்களும் உரையாற்றினர். முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யாரின் திருவுருவப் படமொன்றும் திறந்து வைக்கப்பட்டது. அவர் பணிகளைத் தொடர, அவர் பெயரில் அறக்கட்டளை நிறுவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது.

முக்கூரின் பிரவசனங்களால் எதிரொலித்த நைமிசாரண்ய மண்டபத்திலேயே அவர் நினைவஞ்சலி கூட்டம்...

...வானமும் சேர்ந்து அஞ்சலி செலுத்தியது - கனமழையைப் பொழிந்து!

— அலமு

படம்: பார்த்தசாரதி






2001 ஜூலை 1
விஷு ஆனி 17
மலர் : 59
இதழ் : 48

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



# புண்ணாக்கு அரசியல்!

ரிசர்வ் வங்கி அறிக்கையொன்று, கடந்த தி.மு.க. ஆட்சிக்கு நற்சான்றிதழ் வழங்கும் விதமாக அமைந்திருக்கிறது. 1999 - 2000 நிதியாண்டில் மிக அதிக அளவிலான தொழில் துறை முதலீட்டைப் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடுதான், என்று தெரிவிக்கிறது அவ்வறிக்கை. நாட்டின் மொத்த தொழில்துறை முதலீட்டில் 24.3 சதவீதம் தமிழகத்தில்தான் நடந்திருக்கிறது. இதுவரை இந்த முதலிடத்தை வகித்து வந்த மஹாராஷ்டிரா மாநிலம், இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது (20.5 சதவிகிதம்)

இத்தகவல் மூலம் உணர்த்தப்படும் முக்கியமான விஷயம் என்ன..? கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் அரசு நிர்வாகமும் தொழில் கொள்கையும் சரியான பாதையில்தான் நடந்திருக்கின்றன. அவ்வாறு நடந்திராவிட்டால், 25 சதவிகித முதலீட்டைப் பெறுவதென்பது சாத்தியமேயில்லை.

இந்த உண்மையை, தற்போதைய முதல்வர் ஜெயலலிதா ஏற்றுப் பாராட்ட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது; எதிர்பார்க்கவுமில்லை.

ஆனால், கடந்த ஐந்தாண்டு தி.மு.க. ஆட்சியில் எதுவுமே சரியாக நடைபெறவில்லை என்று அவர் கண்டனம் தெரிவித்து வருவதுதான் பெரும் வேடிக்கையாக இருக்கிறது. பொது விநியோகத் திட்டத்துக்கென வாங்கிய அரிசி புழுத்துப் போயிருப்பதாகவும்





குழந்தைகள், தாய்மார்களுக்கான சத்துணவு மாவில் சோயா தூளுக்குப் பதில் கடலைப் புண்ணாக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் முதல்வர் தனிப்பட்ட முறையில் தி.மு.க. அரசு பேரில் குற்றம் சாட்டி ஆதாரங்களைத் திரட்டச் செய்து சமர்ப்பித்து வருகிறார். இந்தப் புகார்களே தி.மு.க. அரசு பேரிலான பிரும்மாண்டமான லஞ்ச - ஊழல் குற்றச்சாட்டாக உருமாற்றப்பட்டு வருகின்றன.

தி.மு.க. ஆட்சியில் முறைகேடுகளே நடைபெறவில்லை என்றோ, ஊழலே இல்லை என்றோ யாரும் கூறவில்லை. ஆனால் லஞ்ச ஊழலும் முறைகேடுகளும் தலைவிரித்தாடியிருந்தால் ஆர்.பி.ஐ.யின் அறிக்கையில் தமிழகத்துக்கு ஒரு சிறப்பிடம் நிச்சயமாகக் கிடைத்திருக்காது.

சத்துணவு, ரேஷன் வினியோகம் போன்றவை மக்கள் நலப் பணித் திட்டங்கள், இத்தகைய நலப்பணிகள் உலகில் எங்கே நடந்தாலும் முறை கேடுகளின்றி நூறு சதவிகிதம் கச்சிதமாக நடைபெறுவதேயில்லை. இதற்கு முக்கியமான காரணம், இவை அரசு வழங்கும் சலுகை மற்றும் இலவச திட்டங்கள் என்பதுதான். அதனால்தான் நவீன பொருளாதார கொள்கையில் நலப் பணிகளுக்கான ஒதுக்கீடு, மான்யங்கள் போன்றவற்றைக் குறைக்கும்படி வலியுறுத்தப்படுகிறது. வேலை வாய்ப்புகள் பெருகி வாழ்க்கைத் தரம் உயரும்போது சலுகை, இலவசங்களுக்கு அவசியமிராது என்பது எதிர்பார்ப்பு.

ஈர நெல்லை விவசாயியிடமிருந்து கொள்முதல் செய்து அப்படியே கிடங்குகளில் போட்டு வைத்தால் காளான் படிந்து புழுக்கவே செய்யும். அந்த நெல்லை அரிசியாக்கி வினியோகிக்கும் காலகட்டம் வரை பல பிரச்னைகள், சவால்கள் இருக்கும். இவற்றைச் சமாளிப்பதில் குறைபாடு இருப்பின் அது நிர்வாகச் சீர்கேடு ஆகும். அதேபோல், சத்துணவுக் கூடம் ஒவ்வொன்றிலும் வழங்கப்படும் ஒவ்வொரு கவளமும் சுவையும் ஊட்டச் சத்தும் பொருந்தியதாக இருக்கிறதா என்று அமைச்சர்களும் முதல்வரும்




சரிபார்ப்பது சாத்தியமில்லை. இதுவும் நிர்வாகப் பிரச்னை. தமிழகத்தின் சில இடங்களில் இதுபோன்ற குறைகள் இருந்திருக்கலாம் என்றாலும் அவை குற்றங்கள் அல்ல.

நலப் பணிகளில் நேரும் சிறிய / பெரிய முறைகேடுகளுக்கும் அரசாங்க பதவியில் இருப்போர் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனிப்பட்ட முறையில், முறைகேடான வழிகளில் கொள்ளையடிப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது.

இன்றைய முதல்வர் ஜெயலலிதா பேரிலான வழக்குகள் இத்தகைய தனிப்பட்ட முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் தொடர்பானவை. டான்ஸி வழக்கு, அரசு நிலத்தை அரசு ஊழியரே வாங்கிய முறைகேடு; பிளசன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்கு, கட்டட விதிகளை மீறிய முறைகேடு; நிலக்கரி இறக்குமதி வழக்கு, கூடுதல் விலை கொடுத்து மின் நிலையத்துக்குத் தரக் குறைவான நிலக்கரி வாங்கிய முறைகேடு... இவற்றில் உள்நோக்கங்கள் உண்டு. விஜிலன்ஸ் இயக்ககம் தொடுத்துள்ள வழக்கோ அந்நியச் செலாவணி மோசடி வழக்கு. அப்படிச் செய்த மோசடியில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஹோட்டல்கள், முறைகேடாக வாங்கி - விற்கப்பட்டு லாபம் சம்பாதிக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு.

இப்பேர்ப்பட்ட பெரிய பெரிய குற்றச்சாட்டுகள் பேரில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வலுவிழக்கச் செய்ய இன்று திட்டமிட்டு இயங்கி வருகிறார் ஜெ. விசாரணை அதிகாரிகள், அரசு தரப்பு வக்கீல்கள் பணி மாற்றம்; பல அரசு தரப்பு சாட்சிகளின் அவசர பல்டி என்று தினம் தினம் செய்திகள் வெளியாகின்றன.

அதே சமயம், புழுத்துப் போன அரிசியுடனும் கூறு போடப்பட்ட சத்துமாவுடனும் முதல்வர் தொலைக்காட்சியில் தோன்றி, 'தி.மு.க. ஆட்சி லஞ்ச - ஊழல்களின் உறைவிடம்' என்பதாகப் பிரசாரம் செய்து வருகிறார்.

தேர்தல் துஷ்பிரசாரத்தின் நீட்டிப்புதான் ஜெயலலிதா நடத்தும் இந்தப் புண்ணாக்கு அரசியல். வாக்களித்து ஏமாந்துபோன மக்கள் இனியேனும் விழிப்போடு இருக்க வேண்டும். ○

# நடப்பாரா சரிகா?

ரமானி – குட்டியூண்டு பெயர்; விஸிட்டிங் கார்டில் தம்மாத் தூண்டு இடத்தைப் பிடித்திருக்கிறது; அதன் கீழே இடது கோடியிலிருந்து வலது கோடி வரை பட்டங்கள் – எம்.எஸ்.ஸி, சி.ஆர்.சி.எஸ். நியூரோ (லண்டன்), எம்.எஸ் நியூரோ (இங்கிலாந்து), எஃப்ஏசிஎஸ் அண்ட் எஃப் ஐ சி எஸ் (யு.எஸ்.ஏ) எஃப்.என்ஏ, எம்.எஸ், டி.எஸ்ஸி... ஹும்மா! 64 வயதில் 46ன் தோற்றம், 26ன் சுறுசுறுப்பு! இந்த வீக் எண்ட் ஜப்பானில் என்றால், அடுத்த வாரம் அமெரிக்கா; அதற்கடுத்து ஆஸ்திரேலியா; அப்புறம் ஸ்ரீலங்கா... என்று சுற்றிக் கொண்டே இருக்கிறார். ஜாலியாக அல்ல; கையில் கத்தியுடன்தான்! அதனால்தானோ என்னவோ, ஷார்ஜாவின் அரசர், தம் சகோதரனைக் காப்பாற்றியதற்காக, மாணிக்கமும் மரகதமும் பதித்த தங்க உறையிட்ட அசல் கத்தியையே இவருக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறார். இவர் பிறந்த மண்ணான கோவா, ஒரு தெருவுக்கே இவர் பெயரைச் சூட்டி, இவர் சேவையைக் கௌரவித்திருக்கிறது!





• டாக்டர் ரமானி

யாரிந்த ரமானி? 'ஏர் இந்தியா', 'சுச்ருஷா' 'லீலாவதி' போன்றவற்றிற்கு கன்ஸல்டண்ட்.... யூகித்திருப்பீர்களே? சரிகா கமல்ஹாசனுக்கு ஆபரேஷன் செய்த மும்பை லீலாவதி மருத்துவமனை டாக்டர்.

பலர் நினைப்பது போல, ரமானி ஆர்த்தோபீடிக் சர்ஜனில்லை. நியூரோ சர்ஜன். இந்தியாவில் முதுகுத் தண்டு அறுவை சிகிச்சையைப் பிரபலப் படுத்தியவர். 2500க்குக் குறையாமல் சர்ஜன்களை உருவாக்கியுள்ளார். 31 மருத்துவப் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

''ஏற்கெனவே ஒருமுறை சரிகாவுக்கு ஸ்லிப் டிஸ்க் ஆபரேஷன் செய்திருக்கிறேன். மீண்டும் முதுகில் அடி என்று செய்தி வந்தபோது கவலையாக இருந்தது. ஆனால், சென்னை டாக்டர்கள் நல்ல முறையில் கவனித்துக் கொண்டிருந்ததால், சரிகா நினைவிழக்காமலிருந்தார். மிகப் பெரிய ஆபரேஷன் என்பதால், முதலிலேயே இரண்டு கட்டங்களில் செய்வதென்று முடிவாயிற்று. முதல் கட்டத்தில் முதுகுத் தண்டை நிமிர்த்தவும் இரண்டாம் கட்டத்தில் உடைந்த பகுதிகளை இணைக்கவும் சிகிச்சை தரப்பட்டது. ஈரெட்டு மணி நேர அறுவை சிகிச்சைக்குப் பிறகு, சரிகாவின் உடல்நிலை ரொம்பவே முன்னேறியுள்ளது. உணவெல்லாம் நார்மல். இதே ரீதியில் முன்னேறினால், இரண்டே வாரத்தில் டிஸ்சார்ஜ் ஆகிவிடுவார். அப்புறம் மூணு வாரம் ஓய்வு எடுத்தால் போதும். பூரண குணமாகிவிடுவார்'' என்றார் ரமானி.

''கமல் மிகவும் அப்செட் ஆகி விட்டாராமே!''

''உண்மைதான்... என்னைப் பார்த்த பின்னர்தான், அவர் முகத்தில் முறுவலே அரும்பியது. குழந்தைகள் ஸ்ருதி, அக்ஷரா இருவருமே தவித்துப் போய் விட்டார்கள். பள்ளிக்கூடம் திறந்து விட்டதால், இருவருமே சென்னை திரும்பி விட்டார்கள். கிளம்புவதற்கு முன் என்னைச் சந்திக்க முடியவில்லை என்று அழகான கடிதம் எழுதி வைத்துப் போயிருக்கிறாள் ஸ்ருதி'' என்று ஸ்ருதியின் நன்றி நவிலலைக் காட்டினார் ரமானி.

வெரி டச்சிங்!

மும்பையிலிருந்து: **ஜெய்ஸ்ரீ ராஜ்**



# "கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

## 40 மணி நேரத்தில் நீங்கள் சரளமாக இங்கிலீஷ் பேசலாம்

**New Batches commencing on 6.7.2001 & 11.7.2001**

11.7.2001க்குள் பெயரை
முன்பதிவு செய்து ஒரு
Word Power Book இலவசமாக
பெற்றுக் கொள்ளுங்கள்.
இங்கிலீஷ் எழுத, பேச

# VIVEKANANDA INSTITUTE

134/4, R.H. ROAD,
LUZ, MYLAPORE. Ph: 4987303

**50000 JOBS IN GARMENT INDUSTRY**



Your Passport to the High profile, High paying world of High fashion.

## DESIGN YOUR CAREER IN GARMENT INDUSTRY

**START YOUR OWN BOUTIQUE - BE A FASHION DESIGNER**

### DIPLOMA IN FASHION DESIGNING AND MANAGEMENT

| | |
|---|---|
| *TEXTILES* | : FIBRE, YARN, FABRIC, PRINTING, DYES, WEAVES |
| *FASHION DESIGNING* | : TRENDS, COLOURS, EMBROIDERY, STITCHES, PAINTING |
| *SKETCHING* | : BLOCK DRAWING, FREE HAND SKETCHING, HAIR STYLES, PHOTO ANALYSIS. |
| *PATTERN MAKING* | : SPECIFICATION CHART, BODY FITTING, DRAFTING CUTTING. |
| *COMPUTER AIDED DESIGNING* | : COREL DRAW, PAGEMAKER AND LECTRA (CAD / CAM) MS OFFICE (WORD / EXCEL, POWER POINT) |
| *MERCHANDISING* | : PRODUCT DEVELOPMENT, FASHION BUSINESS, PREPOST BUYING. |
| *MANAGEMENT* | : PERSONNEL FINANCE, MARKETING AND INTRODUCTION TO MANAGEMENT |
| *SKILL DEVELOPMENT* | : COMMUNICATION DECISION MAKING, CONVINCING SKILLS, INDUSTRIAL VISIT, DESIGNER SHOWS, SEMINARS AND 100% |

*If you have passed 10, +2, Or Graduation, But confused Not Knowing what to do next, yet looking for a rewarding Career, then come to us, we will make your dream come true*

**ROYAL SCHOOL OF *Fashion***

(Old No. 69/1)103 A, Peters Road,
Royapettah,
Chennai - 14. Ph: 8207135 / 36

* Bangalore * Calicat * Cochin * Thiruvananthapuram

www.royalschooloffashion.com

சித்திரம்

"படிக்கிற வயதில் ஏற்படும் இனக் கவர்ச்சியைக் காதல் என்று கற்பித்துக் கொண்டால், கர்ப்பத்தில் முடிந்து விடும். பிறகு குழந்தைகளே (?) குழந்தைகளைச் சுமக்க வேண்டிய கொடுமை, நேரும்' என்கிற



துணிச்சலான கதையைத் தூக்கிப் பிடித்திருக்கிறார் தெலுங்குப்பட இயக்குனர் தேஜா.

அமெரிக்க ரிட்டர்னாக வரும் டீன்ஏஜ் ரீமா சென் மீது சக கல்லூரித் தோழன் உதய்க்கு, பார்த்த மாத்திரத்தில் பருவக்காதல். ரீமாவும் பாய்–ஃபிரெண்டின் ஸ்பரிசங்களில் கிரங்கிப் போய் எதிர்பாராத தருணமொன்றில் கர்ப்பமாகி விடுகிறார். விஷயம் வீட்டாருக்குத் தெரிந்தவுடன் இருவருக்கும் (பொம்மைக்) கல்யாணம் செய்து வைக்கிறார்கள். குழந்தை பிறந்த பிறகு அந்த வீட்டில் தம்பதிகளுக்குள் 'பிக் பாட்டில்.' இறுதியில் இது வியாபார சினிமா என்பதை நினைவு படுத்தும் விதமாக இயல்பை மறைத்துவிட்டு சுபம் போடுகிறார்கள்.

காதல் நோய்க்கு ஆளாகி அசல் பேக்கு மாதிரி அசத்தியிருக்கிறார் புதுமுகம் உதய்கிரண். சின்னப் பெண் ரீமா.... கர்ப்பத்தைக் கலைக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கும்போது துடுக்குத் தனத்தையும், அதற்கொரு உளவியல் காரணம் சொல்லி அழும்போது பரிதாபத்தையும் வெளிப்படுத்தி அப்ளாஸ்களை அள்ளிக் கொள்கிறார்.

மணிவண்ணன், கல்பனா ஜோடியின் புடவைக் காமெடியை ரசிக்கலாம் என்றாலும், மகன் ஒரு குழந்தைக்கு அப்பாவாகி விட்டான் என்று தெரிந்ததும், அதிர்ச்சியை வெளிப்படுத்தாமல் கூலாக இருப்பது நமக்கு அதிர்ச்சியைத் தருகிறது.

குழந்தையைக் கவனிக்கவில்லை என்ற கோபத்தில் பரீட்சை ஹாலில், கணவன் முன் குழந்தையைப் போட்டுவிட்டு ரீமா ஓடும் காட்சி 'பச்சக்' என்று நெஞ்சில் ஒட்டிக் கொள்கிறது. ஆனால் குழந்தை பிறந்த பின் இந்த ஹைகூ தம்பதிகளுக்குள் எதிர்படும் இடர்களையும், எரிச்சலையும் மேலோட்டமாகக் காட்டுவதால் இடைவேளைக்குப் பிறகு எரிச்சலூட்டுகிறது படம்.

படம் பார்த்துவிட்டு வெளியே வந்த பின்... டீன்ஏஜ் கர்ப்பம், குழந்தை, குடும்பம் எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற உணர்வு வருவதை இயக்குனர் தவிர்த்திருந்தால், படம் நிஜப் படிப்பினையாக இருந்திருக்கும்.

— விஷுவல்தாசன்

• ஆவரெஜ்

# MERIT 2001

## Upto 75% Scholarship (On Total Fee)

| Your MARKS | SCHOLARSHIP |
|---|---|
| Above 90% | 75% |
| 75% to 90% | 60% |
| 60% to 74% | 50% |
| 50% to 59% | 40% |

**மதிப்பெண் சான்றிதழுடன் வாருங்கள்!**

**ஸ்காலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள்**

You can use the best of Your

**10th | 12th | Dip. | UG | PG**

**Marksheet**




- 6000-க்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர்கள்
- 50,000 மாணவர்கள் பயிற்சியில் உள்ளனர்
- வரையறையற்ற கம்ப்யூட்டர் பயிற்சி நேரம்
- வேலைவாய்ப்பு உதவி

**CSC®**

**COMPUTER EDUCATION**

**BOON FOR MIDDLE CLASS**





* For One year course

**NOW ALSO AT COLOMBO Ph. 451090**


# அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்

## பக்கவாத நோய் பனிச்சென்று தீர்ந்தது!



பல ஆண்டுகளாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு செயலற்று இருந்த நான் ரப்பானி வைத்யசாலா **டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்** அவர்களிடம் சிகிச்சை பெற்றபின் இரண்டே மாதங்களில் பூரண குணமடைந்தேன் என்று காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் தெருவில் வசிக்கும் திரு கே. கட்சீஸ்வரன் தெரிவிக்கிறார்.

## மலட்டுத் தன்மை என்பதே இல்லாமல் போச்சு!



குழந்தை இல்லை என்று நாங்கள் ஏறாத ஆஸ்பத்திரி வாசல்கள் இல்லை. பிறகு பலரின் ஆலோசனையைக் கேட்டு ரப்பானி வைத்தியசாலாவிற்கு வந்து தொடர்ந்து மருந்து சாப்பிட்டதில் குழந்தை பெற்று தனது மன மகிழ்ச்சியை அனைவருக்கும் தெரிவிக்கின்றனர். சென்னை தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஜெயசங்கர்–மாரியம்மாள் தம்பதி.

## மருந்தில்லை என்ற சோரியாஸிஸ் மாயமாய் மறைந்து போச்சு!



நான் கடந்த சில வருடங்களாக உடம்பில் அரிப்பு ஏற்பட்டு சோரியாசிஸ் என்ற நோயாலும், கடுமையான மூட்டு வலியாலும் பாதிக்கப்பட்டேன். பல சிகிச்சைகளும் எனக்கு பலன் தராமல் ரப்பானி வைத்தியசாலாவில் காண்பித்தேன். தொடர்ச்சியாக சில மாதங்கள் அங்கு பெற்ற சிகிச்சையின் பலனாக என் பிரச்சனைகள் அனைத்தும் தீர்ந்தது தெரிவிக்கிறார் திருமதி பத்மா ஸ்வாமிநாதன், ரெய்ன் ரீச் அபார்ட்மெண்ட்ஸ், மௌனசாமி மடம் தெரு, வெங்கடபுரம், சென்னை – 53.

## கர்ப்பப்பை ஆபரேஷன் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாச்சு!



வயிற்று வலிக்காக சென்னையில் உள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் 3 ஆண்டு வைத்தியம் பார்த்தபின் கர்ப்பப்பையை எடுத்துவிடச் சொன்னார்கள். ரப்பானி வைத்தியசாலாவில் 3 மாதம் மருந்து சாப்பிட்டதில் சரியாப் போச்சு. கர்ப்பப்பையை எடுக்க தேவையில்லை என்று அதே ஆஸ்பத்திரியில் சொல்லிவிட்டார்கள் என்கிறார் போரூர், அண்ணாசாலையைச் சேர்ந்த கோவிந்தராஜின் மனைவி **G.** செல்வி.

## அறுவை சிகிச்சை இல்லாமலேயே இதய நோய் குணமான அதிசயம்!



**முக்திரியாபேகம், அந்தோனி பிள்ளை தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை – 59.**

எனக்கு இதயத்தில் அடைப்பும் வலியும் அடிக்கடி வந்ததால் நான் சில ஆண்டுகளாக மயக்கம் மற்றும் உடல்பலவீனத்தால் அவதியுற்றேன். இதனால் சென்னையில் உள்ள ஒரு பிரபல மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். ஆனால் அங்கு என்னை சோதனை செய்து என் இதயத்தில் ஒரு மேஜர் ஆ∴பரேசன் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்கள். இதனால் என் மனம் மிகவும் வேதனைப்பட்டு சில நண்பர்கள் மூலம் ரப்பானி **வைத்யசாலா** சென்றேன். இங்கு எனக்கு நல்ல சிகிச்சை கிடைத்ததின் மூலம் என் நோய் படிப்படியாக இப்போது குறைந்துவிட்டது. நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

**மேலும் கை கால் வாதம், மூளை வளர்ச்சி குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.)**

மாதந்தோறும்
Dr. சையத் சத்தாரின்
யுனானி மருத்துவ மாத
இதழ் கடைகளில் கேட்டு
வாங்குங்கள்

**டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்**
**ரப்பானி வைத்ய சாலா**

**73/1, டாக்டர் பெசன்ட் ரோடு,**
**மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,**
**இராயப்பேட்டை, சென்னை – 600 014.**
**போன்: 8510969, 8410874**



# 'பான்' கடையில் இலக்கியவாதி!

"ஒரு இலக்கியவாதின்னா இப்படித்தான் இருக்கணும்னு ஏதாவது விதியிருக்கிறதா?" என்கிறார் டெல்லி கந்தர்வ கல்லூரியின் பின்புறம் தம்மாத்துண்டு இடத்தில் 'பான்' கடை வைத்திருக்கும் லக்ஷ்மண் ராவ்.

பாதி நரைத்த தலை, மீசையுடன் மிக எளிமையாகக் காட்சித் தரும் இந்த லக்ஷ்மண் ராவ், ஏழு நாவல்கள், இரண்டு நாடகங்கள், சில விமர்சனப் புத்தகங்களை எழுதியிருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா?


"மகாராஷ்ட்ரா மாநிலம் 'தடேகாவ் தஷாகர்' என்ற குக்கிராமம் என் சொந்த ஊர். சிறுவயதில் என் நண்பன் ராமதாஸுடன் சுற்றுவேன். குறும்புத்தனம் செய்வேன் ஏழாவது படித்துக் கொண்டிருந்தபோது ராமதாஸ் இறந்தான். இந்த இறப்பு என்னைப் பாதித்தது. நிறைய சிந்திக்க வைத்தது. போர்டு தேர்வுகளில் இரண்டு முறை ஃபெயிலாகியிருக்கிறேன். கொஞ்சம் வளர்ந்த பின் என் நண்பன் ராமதாஸின் நினைவுகளில் மூழ்கி ஒரு நாவல் எழுதினேன். அதற்கு அவன் பெயரையே வைத்தேன். நல்ல வரவேற்பு இருந்தது. பிறகு தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன்" என்று சொல்லும் ராவ், தமது ஆரம்ப காலத்தில் வறுமையே வாழ்க்கையாக வாழ்ந்திருக்கிறார்!

மஹாராஷ்ட்ராவிலிருந்து டெல்லிக்கு ஓடி வந்து கல் சுமக்கும் கூலி வேலையிலிருந்து ஹோட்டல் வேலை வரை ஏகப்பட்ட வேலைகளைப் பார்த்து வயிற்றைக் கழுவியிருக்கிறார். தங்குவது தூங்குவதெல்லாம் ப்ளாட்பாரத்தில். இத்தனைக்கிடையில் மனிதர் படிப்பதை மட்டும் நிறுத்தவில்லை. தெருவோரக் கடைகளில் கிடைக்கும் பழைய புத்தகங்களைச் சில சமயம் காசு கொடுத்தும் சில சமயம் ஓசியிலும் வாங்கிப் படிப்பாராம் முப்பத்தெட்டு வயதாகும் இந்த ராவ்.

"போராட்டமில்லாமல் வாழ்க்கையில்லை. என் வாழ்க்கையைச் சந்தோஷமாக அனுபவித்திருக்கிறேன். ஒருமுறை டெல்லி தீன்மூர்த்தி பவனில் இந்திராகாந்தியைச் சந்தித்தேன். பிறகு 'பிரதம மந்திரி' என்றொரு நாடகத்தை எழுதினேன். இதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது" என்று சொல்லும் ராவ், பல இலக்கிய விருதுகளையும் பெற்றிருக்கிறார். இவரது அடுத்த நாவலான 'நர்மதா' விரைவில் வர இருக்கிறதாம்.

நன்றி: வனிதா (இந்தி)
— சித்ரகலா ஸ்ரீதரன்

• ஒரு விழாவில் விருது பெறும் லக்ஷ்மண் ராவ்



# தேன் கூடு



## கல்தா!

நாகப்பட்டினத்தில் கலெக்டர் அலுவலகத்தில் சுவாரஸ்யமான நிகழ்ச்சி நடந்தது. ஆட்சி மாறியவுடன்! முதல்வர் மாறினதும் வழக்கமாக முந்தைய முதல்வர் படத்தை மட்டும்தானே மாற்றுவார்கள்; ஆனால், அங்கு மாட்டப்பட்டிருந்த திருவள்ளுவர் படத்தையும் அகற்றி விட்டார்களாம்!

அந்தப் படம் முந்தைய முதல்வரால் தேர்ந்தெடுக்கப்பட்ட படம். அதனால்தான் மாற்றி விட்டனராம்!

— பத்மா, நெய்வேலி

## வாரே வா!

ஜூன் 4ம் தேதி, உலக சுற்றுச் சூழல் தினம்! அன்று இந்தியாவின் முதல் மின்சாரக் கார், ரேவா அறிமுகமானது. இரண்டு பெரியவர்கள், இரண்டு சிறுவர்கள் இக்காரில் உட்காரலாம். விலை ரூ 2,49,500.

சுற்றுச் சூழலுக்குக் கெடுதி ஏற்படுத்தாத இந்த மின்சாரக் காருக்கு பிரேக்கும், ஆக்ஸிலேட்டரும்தான் உள்ளன. க்ளச், கார்பொரேட்டர், ரேடியேட்டர் முதலியவை தேவையில்லை. கையால் பிரேக்கை நீக்கி, ஸ்விட்சைத் தட்டி ஆக்ஸிலேட்டரை மிதித்தால் அதிகபட்சம் ஒரு மணி நேரத்தில் 65 கி.மீட்டர் வேகத்தில் செல்லும். நிறுத்துவதற்கு சிவப்பு பட்டன் உள்ளது. ரேவா காரில் 8 பாட்டரிகள் பொருத்தப்படுகின்றன.

— ஜி. இந்திரா, பெங்களூர்.

## மினி சைக்கிள்!

லண்டன், பாரீஸ், பெர்லின் நகரங்களில் கிறிஸ்துமஸ் பரிசு கொடுப்பதற்காக அதிக அளவில் விற்பனையான "மினிரோலர்" சைக்கிள்'கள்தான் இவை. பூங்கா மற்றும் வீதிகளில் ஒரு காலால் தேய்த்துவிட்டு இதன் மீது நின்று கொள்ள வேண்டியதுதான்!



போக்குவரத்து நெரிசலிலிருந்துத் தப்பித்து உரிய நேரத்தில் போய்ச் சேருவதுடன் உடற்பயிற்சி செய்தது போலவும் ஆகும்.

— பாரீஸ் பார்த்தசாரதி

## கமகம இன்டர்நெட்

இன்டர்நெட்டின் சமீபத்திய தொழில்நுட்ப சாதனை. வாசனையுடன் கூடிய இணையத் தளங்கள். இதற்கு 'டிஜிசென்ட்' எனப் பெயர். இதற்காக இங்க் காட்ரிஜைப் போல வாசனைக்கென உள்ள காட்ரிஜைப் பொருத்த வேண்டும். இதில் 128 வகையான அடிப்படை வாசனைகள் உள்ளன. ஒவ்வொரு வாசத்திற்கும் ஒரு தகவல் எண் உள்ளது. உதாரணமாக, ரோஜா மலர்களின் படம் 'கொண்ட




தளத்தை, நாம் பார்க்கும்போது, அதற்குரிய தகவல் எண்

இயங்கி, smell personal scent synthesiser என்கிற கருவியிலிருந்து ரோஜா மணம் கமழுகிறது!

— எம். விக்னேஷ், மதுரை-9.

## போகப் போக....

தாஜ்மஹாலின் சுவர்களில் திருக்குரானை செதுக்கியுள்ளனர். இதன் தனிச் சிறப்பு என்னவென்றால், உயரத்தில் காணப்படும் எழுத்துக்கள் அருகில் காணப்படும் எழுத்துக்களைப் போலவே பெரிதாகத் தெரிகின்றன. கீழே நின்றபடி படிப்பதற்கு வசதியாக மேலே போகப் போக பெரிய எழுத்துக்களாக செதுக்கி உள்ளனர்.



— பி. ருக்மணி, சிதம்பரம் – 1.

## காதல் மொழி!

வேட்டையும், காதலும் தொடங்கத் தெரியும், எங்கு முடிப்பது எனத் தெரியாது.

– ஜெர்மனி

காதலால் வீரமானோர் அதிகம்; ஆனால் மூடரானோர் அதை விட அதிகம்.

– சுவீடன்

காதலையும், இருமலையும் கஸ்தூரி மணத்தையும் அடக்க முடியாது.

– இந்தியா.

உண்மையான காதல் சுயநலத்தை அழிக்கும். – ஷெல்லி

காதலின் குரலுக்கு எல்லா உணர்ச்சிகளும் தலை வணங்குகின்றன.

– லாங்ஃபெல்லோ

காதல் நோயின் வைத்தியசாலை திருமணம். – ஜெர்மனி

காதல் இல்லாத வாழ்க்கை, வாளியில்லாத கிணறு.

– பல்கேரியா

தொகுப்பு: ஆனந்த் குமார்

## வயலூர் முருகனும் திருச்சி ஜோசப்பும்

திருச்சி வயலூர் முருகன் கோவிலுக்கு ஏராளமான நிலம் இருந்தது. இந்த நிலங்கள் ஒரு கால் கட்டத்தில் தனியார் பெயருக்கு ரகசியமாக பட்டா போட்டுத் தரப்பட்டன. இதனால் கோவிலுக்கு வருமானம் குறைந்தபோது, கோவில் ஊழியர்கள் இருவர், இது குறித்து குளித்தலை கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இதன் விளைவாக, ஒரு போக, இரு போக நிலங்களை வைத்திருப்பவர்கள், அதற்கேற்ப இவ்வளவு நெல் கண்டிப்பாக கோவிலுக்கு அளக்க வேண்டும் என நிர்ணயித்து, இந்த நிலங்களை, கிரயம் செய்வதோ, விற்பனை செய்வதோ இந்த ஏற்பாட்டின் படியே இனி செய்ய வேண்டும் எனவும் தீர்ப்பாகியது.

திருச்சி புனித ஜோசப் கல்லூரிக்கு, வயலூர் கிராமத்தில் நிலம் உள்ளது. வழக்கு தீர்ப்புப்படி இந்தக் கல்லூரி நிர்வாகம் இன்றும் வயலூர் முருகன் கோவிலுக்கு ஆண்டொன்றுக்கு 60 கலம் நெல் அளந்து வருகிறது.



ஆதாரம்: தினத்தந்தி

ராஜிராதா, திருச்சி – 14

## விளம்பரப் புலி!

கோல்ப் ஆட்டத்தில் புலியான டைகர் வுட்ஸ்தான் உலகிலேயே விளம்பரம் மூலம் மிக அதிகமாய்ச் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்.



சென்ற ஆண்டு பல்வேறு பொருட்களுக்கு விளம்பர மாடலாக இருந்ததன் மூலம் 53 மில்லியன் டாலர் சம்பாதித்தார். இந்த வருடமோ அவரது தொடர்ந்த வெற்றிகள் காரணமாக இந்த வருவாய் மேலும் அதிகரித்துள்ளது.

— திலீப்

# வாங்கிவிட்டீர்களா...?

ஓம்

**சரவணபவ**

மாதமிருமுறை வரும்
ஒரே பக்தி பத்திரிகை





# இலவசம்!

## பணம் கொட்டோ கொட்டென கொட்டும் லட்சுமி - குபேர யந்திரம்!

+

## ஸ்ரீலட்சுமி-குபேர பூஜைக்கான அபூர்வ வண்ணப்படம்

தவத்திரு குன்றக்குடி
**பொன்னம்பல அடிகளார்**
எழுத்துச் சித்தர்
**பாலகுமாரன்**
சீன வாஸ்து நிபுணர்
**சுரேந்திரன்**
எழுதும் தொடர்கள்!

+

## இறைமணம் கமழும் பக்திச் செய்திகள்!

**இறைஜோதிடம்** மாத இதழ்

கௌரவ ஆசிரியர் : விருட்ச சாஸ்த்திர வித்வான்

**ஸ்வாமி கண்ணன் பட்டாச்சாரியா**




# கல்கி சந்தா செலுத்தினால் கோகுலம்/GOKULAM இலவசம்!

* உங்கள் குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

* கோகுலம் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கச் செய்யுங்கள்.

* கல்கி வார இதழுக்கு ஓராண்டு சந்தா ரூ.275/- செலுத்தினால் போதும்; ரூ.36/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஆறு மாதங்களுக்கு (ஆறு இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக வந்து சேரும்.

* கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ.550/- செலுத்தினால் ரூ.72/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஓராண்டுக்கு (12 இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

* ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவரும் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு பயன்பெறலாம். சந்தா முடிவு தேதி நீடிக்கப்படும்.

* கல்கி என்ற பெயருக்கு மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பவும். வெளியூர் காசோலைகள் ஏற்பதற்கில்லை.

டி.டி. அல்லது எம்.ஓ. அனுப்ப முகவரி :
மானேஜர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என் பெயர் : ..................................................

என் மகன் / மகள் பெயர் : ..................................

..................................................................

விலாசம் : ..................................................

..................................................................

..................................................................

..................................................................

கல்கி வார இதழுக்கு ஓராண்டு / இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ. ............ அனுப்பியுள்ளேன். என் மகன் / மகள் பெயருக்கு கோகுலம் தமிழ் / ஆங்கிலம் 6/12 இதழ்கள் * அன்பளிப்பாக அனுப்பவும்.

* தேவையற்றதை அடித்து விடவும்.

கையொப்பம் : ..................................................

**ஜூலை இறுதி வரை மட்டுமே இந்தச் சலுகை! முந்துங்கள்!**



முன்பெல்லாம் ஹோட்டலுக்குப் போவது திருவிழா விசேஷம்... அப்படியே அபூர்வமாகப் போனாலும் மசால் தோசை, ஐஸ்க்ரீம் தான் அதிகபட்ச விருப்பங்கள். இப்போது...? சைனீஸ், இத்தாலியன் என்று மெகாவில் ஆரம்பித்து, தாலி, தாபா, தந்தூரி என்ற மைக்ரோவரை ஏகப்பட்ட வெரைட்டி... தேடித் தேடிச் சென்று சுவைக்கிறார்கள்.



சென்னையிலிருக்கும் சில ஃபாஸ்ட் புட் கடைகளில் எட்டிப் பார்த்து, "அப்படி என்ன ஸ்பெஷாலிட்டி? ஏன் உங்க கடையில் மட்டும் கூட்டம்?'' என்று விவரங்களைச் சேகரித்தபோது, கிடைத்த ருசிகரத் தகவல்கள்.

# டேஸ்டில்

**நு**ங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் ரோடு சிக்னலைத் தாண்டி, ஜி.ஜி. பிளாஸாவைக் கடக்கும்போது, இடது பக்கமாக பார்த்தால், ஒரு பெரிய்ய க்யூ! கல்லூரி மாணவிகள், ரிக்ஷாக்காரர், சேட்டம்மா, டை அணிந்த எக்ஸிக்யூடிவ்கள் என்று கதம்பமாக நின்றிருந்தார்கள்.

எட்டிப் பார்த்தால், அவர்கள் நுழைந்து கொண்டிருந்தது 'நூடுல் கிங்' நவீன ஃபாஸ்ட்புட் ஹோட்டலுக்குள்.

'க்யூ ப்ளீஸ்' என்ற அறிவிப்புப் பலகையைத் தாண்டி உள்ளே நுழைந்தால், உற்சாகமாக வரவேற்றார் ஸ்ரீதர். நூடுல்கிங்கின் உரிமையாளர்களுள் ஒருவர்.

"கடை ஆரம்பிச்சு ஒரு வருஷம் தான் ஆச்சு... வெஜ்லே ஆறு, நான்வெஜ்லே ஆறு வகைன்னு ரொம்ப லிமிட்டாதான் போடறோம். எல்லாமே சைனீஸ் அயிட்டம்ஸ்தான்... சீப்பாவும் சுவையாவும் இருக்கறதாலே, கூட்டம் அம்புது.. வாரத்துல ஒருநாள் லீவு கூட விட முடியறதில்லை" என்றார்.

"மிதமான காரம். அளவான மசாலா... நான் தினமும் மத்தியானம் இங்கே தான் சாப்பிடறேன்" என்கிறார் மெடிக்கல் டிரான்ஸ்கிரைபராகப் பணிபுரியும் மிஸ் மமதி.



"ஃப்ரைடு ரைஸ் 18 ரூபாய், சில்லி வெஜிடபிள்ஸ் 12 ரூபாய்னு





விலையெல்லாம் கட்டுப்படியாகற அளவிலே இருக்கும்'' என்கிறார் ரோகிணி சிங்.

ஏசி எல்லாம் போட்டு, பந்தா காட்டினால் நடுத்தர மக்கள் உள்ளே வருவதற்குத் தயங்குவார்கள் என்பதால் கடையைச் சின்னதாகவே வைத்திருக்கிறார்களாம்.

நாடுல் ஙிங்கில் 'க்யூ' என்றால் ஹாட்சிப்ஸில் கும்பல். பாண்டி பஜார் போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டியதும், மாயா ப்ளாஸா அருகில், கரண்டியும் தட்டுமாக சுவைஞர்கள் குவிகிறார்கள்.

இட்லி, தோசை, சாம்பார் போரடிப்பதால், 'சாட்டு'க்குக் கட்சி மாறியவர்கள்.

'பாவ் பாஜி, சன்னா மசாலா, பேல் பூரி, தஹி பூரி, ஆலு பூரி, சேவ்பூரி, பாப்டி சாட், தஹி பாப்டி சாட்' என்று வடக்குக்கு மரியாதை செய்கிறார்கள்.

''ஹாட்சிப்ஸின் ஸ்பெஷாலிடிகளுள் ஒன்று இந்த சாட் ஐட்டம்ஸ்... அதன் ரகசியம் என்ன தெரியுமா? கல்கத்தாவிலிருந்தே சமையல்காரர்களை வரவழைத்துத் தயாரிக்கிறோம். மொத்தம் 22 ஆட்கள் வேலை செய்கிறார்கள். சமோஸா, கட்லெட் என்று மத்தியானம் பன்னிரண்டு மணியிலிருந்து நள்ளிரவு பன்னிரண்டு வரை மசாலா மணக்கிறது'' என்றார் மேனேஜர் அபிமன்யூ.

''ஷாப்பிங் செய்துவிட்டு இங்கு சாப்பிட வருகிறீர்களா? இல்லை சாப்பிடுவதற்காகவே ஷாப்பிங் செய்கிறீர்களா?'' என்று கேட்க சிலரை அணுகினால், யாரா

# சிக்கிட்டாங்க!



• கலைச்செல்வி



• சன்னா தயார்!



ஹலோ! இட்லி ரெடி

வது விழுங்கி விட்டுப் பேசினால்தானே! அவரவர் வேலை...



நூடுல்ஸ்

தி.நகரில் மரங்கள் சூழ்ந்த டாக்டர் நடேசன் பூங்கா அருகிலிருக்கும் கண்ணதாசன் சாலையில் உள்ள பங்களா. சின்ன கார் ஷெட்டில் படு ஜரூராக வியாபாரம் நடந்து கொண்டிருந்த 'பாலாஜி பாஸ்ட் ஃபுட்' டில் விளம்பரப் பலகைகூட காணோம்.

"ஹலோ, தவலை வடை ரெடியா?" என்று ஃபோனில் தகவல் தெரிந்து கொண்டு, காரில் வந்து வாங்கிச் செல்லும் வாடிக்கையாளர்கள் அதிகம். காரணம் இங்கே காரைக்குடி உணவு வகைகள் மிகப் பிரசித்தம்.

இலங்தோசை, குழிப்பணியாரம், காரப் பணியாரம், தாளிச்ச இடியாப்பம், ஸ்வீட் இடியாப்பம், மசாலா சிய்யம், கல் தோசை, கருப்பட்டி ஆப்பம், கந்தரப்பம் என ஆச்சியின் கைப்பக்குவம் ஆஹா!

முக்தா ஸ்ரீனிவாஸன், மனோரமா, சாருஹாசன், டாக்டர் கமலி ஸ்ரீபால், குணசேகரன் நர்ஸிங்ஹோம் டாக்டர் லக்ஷ்மி என்று பல விஐபிகள் நிரந்தர வாடிக்கையாளர்களாம்.

"சின்ன வயசுலேயிருந்தே சமைக்கிறதுன்னா ரொம்ப பிடிக்கும். 'ராணி' பத்திரிகையில வர்ற சமையல் குறிப்பைப் படிச்சுப் பார்த்து, சமைப்பேன். எங்க ஊரு சமையல் நுணுக்கம் கத்துக்கிட்டேன். என்னோட கணவர் சொக்கலிங்கம் ஏதாவது வியாபாரம் பண்ணலாம்னு நினைச்சப்போ, தெரிஞ்ச கலையையே செய்யலாமேன்னு ஐடியா கொடுத்தேன். செட்டிநாடு அயிட்டம்ஸ்லே இறங்கிட்டோம். தி.நகர் ஏரியாவுலே பெரிய பெரிய ஹோட்டல் எல்லாம் இருக்கறப்போ நம்ம கடைக்கு வரவேற்பு இருக்குமான்னு நினைச்சோம். ஆனா இப்ப வர்ற கூட்டத்தைச் சமாளிக்க முடியாம, ஒரு நாளுக்கு ஒரு ஸ்பெஷல் ஐட்டம் - அதுவும் குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டும்தான் விற்பனைன்னு நாங்களே நேரத்தை லிமிட்டா வெச்சுட்டோம்'' என்கிறார் உரிமையாளர் திருமதி கலைச்செல்வி.

'உங்கக் கடை இட்லி மட்டும் பஞ்சு மாதிரி இருக்கே. நீங்க வைக்கிற சாம்பார் ரொம்ப வாசனையா இருக்கே' என்று குடும்பத் தலைவிகள் செய்முறை குறிப்புகள் கேட்டு வாங்கிப் போகிறார்களாம்.

"இட்லிக்கு, இடியாப்பத்துக்கு, புட்டுக்கு என தனித்தனி அரிசி வாங்குவோம். இட்லிக்கு எப்பவுமே ஐஆர் 36 அரிசிதான். கிலோ பதினேழு ரூபாய். சின்ன வெங்காயம்தான் உபயோகிக்கிறோம். உரிக்க சிரமமாக இருந்தாலும் அந்த டேஸ்ட், பெரிய வெங்காயத்துல வராது. தூள் பெருங்காயத்தை விட, கட்டிப் பெருங்காயம் ரொம்ப மணமா இருக்கும்... சோடாமாவு, செயற்கை நிறம் போன்ற எதையுமே சேர்ப்பதில்லை'' என்று சில தொழில் ரகசியத் தகவல்கள் சொன்னார்.

"எங்க அப்பச்சிக்கு செட்டி நாட்டுப் பல காரம்னா ரொம்ப விருப்பம். மாவுருண்டை, மனோகரம்னு ஆசையா சாப்பிடுவாரு. ஆனா நான் வளர்ந்து நல்லா சமைக்கிற நிலையிலே அவரு இறந்துட்டாரு. நல்ல ரசிகரான அவருக்கு, என் கையாலே சமைச்சுப் போட்டு, அவர் சாப்பிடற அழகைப் பார்க்க முடியாமே போயிடுச்சு'' என்று வருந்துகிறார் கலைச்செல்வி.

அப்பா?

கவிஞர் கண்ணதாசன்!

— அனு


படங்கள்: யோகா

# FRANCHISE OF THE MILLENNIUM

கீழ்க்கண்ட அனைத்து அல்லது நீங்கள் விருப்பப்படும் நுழைவு பயிற்சிகளை நடத்த தென்னிந்தியா முழுவதும் எல்லா மாவட்ட தலைமையகங்கள், தாலுகா தலைமையகங்கள், எல்லா நகரங்களிலும், சென்னையில் அரும்பாக்கம், அடையார், ஆதம்பாக்கம், அண்ணாசாலை, அரக்கோணம், ஆவடி, அயனாவரம், பெசன்ட்நகர், குரோம்பேட், எழும்பூர், எண்ணூர், கூடுவாஞ்சேரி, குன்றத்தூர், கடம்பத்தூர், கல்பாக்கம், மாங்காடு, மறைமலைநகர், மணலி, மீஞ்சூர், முகப்பேர், நுங்கம்பாக்கம், பட்டாபிராம், பல்லாவரம், பாரிமுனை, பெரம்பூர், போரூர், பூந்தமல்லி, புரசைவாக்கம், பம்மல். செங்குன்றம், சாந்தோம், செவ்வாப்பேட்டை, தாம்பரம், திருநின்றவூர், திருவான்மியூர், வடபழனி, வேளச்சேரி, வில்லிவாக்கம், வண்ணாரப்பேட்டை, வியாசர்பாடி மற்றும் உங்கள் வீட்டிற்கு அருகில் இருக்கும் இதர பகுதிகளிலும் பிரான்ச்சைசி தேவை. உங்கள் வெற்றி நிச்சயம். இல்லையேல் பிரான்ச்சைசி பீஸ் வாபஸ். **Prospectus Free**

**BE, MBBS, B.L., M.B.A., M.C.A., GMAT, GRE, TOEFL, TNPSC, SSC, RRB, BANK, IAS, IPS, IFS, IES, UGC, B.Ed., SPOKEN ENGLISH.**

Use our Brand Name, Fame, Marketing, 45 years of Experience & Success Technology. ஒருமுறை Rs.20000 முதலீடு செய்யுங்கள். வாழ்நாள்முழுவதும் வருடத்திற்கு குறைந்தது ரூ.3 லட்சம் சம்பாதியுங்கள். நாங்களே பயிற்சி செய்த ஆசிரியர்கள், பாடங்கள்& மாணவர்களை தருகிறோம்.




அண்ணாநகர், மைலாப்பூர், ராயபுரம், திருவொற்றியூர், தேனாம்பேட்டை, திருவல்லிக்கேணி, அம்பத்தூர், நங்கநல்லூர், திருவள்ளூர், கே.கே.நகர், வளசரவாக்கம், பொன்னேரி, சேலையூர், வேலூர், திருச்சி, காஞ்சிபுரம், புத்தூர், மாயூரம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் பிரான்ச்சைஸி நியமித்தாகிவிட்டது.

உங்களுடைய ஒரே வேலை குறைந்தது 200சதுர.அடி இடம் ஏற்பாடு செய்து கட்டணம் வசூல் செய்வது. உங்களுக்கும் இலவச வியாபாரப் பயிற்சி தருகிறோம். உங்களுக்கு முன்னறிவு, அனுபவம் இருக்க அவசியம் இல்லை. நீங்கள்முதலீடு செய்யும் பணத்தை இரண்டே மாதங்களில் சம்பாதித்துவிடலாம். விவரம் இலவசம். **GREATEST OPPORTUNITY!**

**தங்கச்சுரங்கத்தை நழுவ விடாதீர்கள்!**

**NETAJI IAS ACADEMY,** ESTD:1980

56, Rameswaram Road, Chennai - 17. Phone : 434 8560.

# மனம், மனமறிய ஆவல்... 12

"இங்கேதானே வச்சிருந்தேன். காணோமே. அனு, நீ எடுத்தியா?"

தன் கேள்விக்குப் பதிலளிக்காமல் புத்தகங்களைப் பள்ளிப்பையில், அனு வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் மாமிக்குக் கோபம் வந்தது. ஒரே வார்த்தையில் பதிலளிக்கக் கூடிய எளிதான கேள்வி. அதற்குக் கூட பதில் வரவில்லையென்றால் அது அலட்சியம்.

"அனு, பதில் சொல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்?"

கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த சிவப்ரியா புன்னகை செய்தாள். "அவ எப்படி மாமி பதில் சொல்லுவா? நீங்க எதைத் தேடறீங்கன்னு அவகிட்டே சொல்லலியே. அவளுக்கு ஞானதிருஷ்டியா இருக்கு, நீங்க பென்சிலைத் தேடறீங்கன்னு புரிஞ்சிக்க?" பேசியபடியே கண்களை, அந்தக் கூடத்தின் எல்லா இடங்களிலும் அலைபாயவிட்ட சிவப்ரியா, புடைத்துக் கொண்டிருந்த ஒரு நாவலை உருவினாள். அதன் நடுவே அவள் எதிர்பார்த்தது போலவே அந்தச் சின்ன பென்சில் இருந்தது.

மாமியின் முகத்தில் அசட்டுக்களை தென்பட்டது.

"படிச்ச அடையாளத்துக்காக நேத்து இதிலே வச்சேன். நினைவில்லே."

"ப்ரியா, எனக்கு ஒண்ணு தெரிஞ்சாகணும். அனுவுக்கு ஞானதிருஷ்டி இருக்கான்னு கேட்டியே, உனக்கு இருக்கா? பின்னே எப்படி நான் தேடுவது பென்சிலைத்தான்னு தெரிஞ்சது?"

சிவப்ரியா தனக்குக் கிடைத்த க்ளுக்களை மீண்டும் பார்த்தாள். மாமியின் கையிலிருந்த அம்புலிமாமா, கோகுலம், சுட்டி இதழ்கள். குழந்தைகள் பத்திரிகைகள் கைக்கு வந்தாலே மாமியின் கைகள் துறுதுறுக்கும். 'காரட்டை அடைய முயலுக்கு வழிகாட்டுங்கள்' என்கிற மாதிரி ஏதாவது விளையாட்டுப் புதிரை அதில் கண்டால் மேலும் உற்சாகமடைவாள். உடனே பென்சிலை எடுத்துக் கொண்டு சிக்கலான கட்டங்களில் தடையில்லாது வழிகண்டு பிடிப்பதில் இறங்கிவிடுவாள். பலமுறை ராம்ஷேகர், இது குறித்துக் கிண்டல் செய்ததுண்டு. அப்போதெல்லாம் சிவப்ரியாதான் மாமிக்கு ஆதரவாகப் பேசுவாள். "சிறுபிள்ளைத்தனமாகத்தான் இருக்கக் கூடாது. குழந்தைத்தனம் என்பது ரசிக்க வேண்டிய விஷயம் டாக்டர். இந்தக் காலத்துக் குழந்தைகள்கிட்டேயே அது தொலைஞ்சு போய்க்கிட்டிருக்கே."

"உனக்கும் இந்த மாதிரிப் புதிர்களிலே ஈடுபாடு உண்டா?" மாமி ஆர்வமாகக் கேட்க, "இல்லேன்னாலும் அந்த ஆர்வத்தை வளர்த்துக்கோ ப்ரியா. அப்போதான் முக்கியமான சர்ஜரி எதையாவது செய்யும் போது நடுநடுவில் இப்படி முயலுக்கு வழி காட்டலாம்" என்று தொடர்ந்தது ராம்ஷேகரின் கிண்டல்.

"நல்ல ஐடியா டாக்டர், உங்க யோசனையை நான் எப்பவுமே ஏத்துக்கிறவளாச்சே" என்ற சிவப்ரியா அடுத்து மாமியின் கேள்விக்குப் பதிலளித்தாள். "எனக்கு இப்போ இதிலே ஆர்வம் இல்லேன்னாலும் சின்ன வயசிலே இது மாதிரி நிறையப் போட்டிருக்கேன். ஆனா ஒண்ணு, நான் கேரட்டிலிருந்து முயலுக்குப் போவேன். அது சுலபமாக இருக்கும்."



தனது வாழ்க்கை இலட்சியத்திலும் அவள் அதே கோட்பாட்டைத்தான் பின்பற்றினாள்.

அவளைப் பொறுத்தவரை, 'கேரட்' என்பது மருத்துவசேவை. 'முயல்' என்பது அதற்கான முயற்சிகள். மருத்துவத்தை மட்டுமே தன் ஒரே இலக்காகக் கொண்டுதான் தன் வாழ்க்கைப் பாதையைத் தீர்மானித்துக் கொண்டாள். அவளைத் துரத்தித் துரத்தி வந்த இரண்டே விதிவிலக்குகளுக்கு, அவள் வழிவிட வேண்டியதாயிற்று. ஆனந்த், திரைப்பட வாய்ப்பு.

''மாமி ஒரு போன் பண்ணிக்கறேன்'' என்றபடி, தான் புத்தகத்திலிருந்து உருவிய பென்சிலைக் கொடுத்தாள் சிவப்ரியா.

அதை வாங்கிக்கொண்டபடி மாமி முணுமுணுத்தாள். ''யாருக்கு ஃபோன்

# அருண் சரண்யா

பண்ணப்போறே? இவருக்குதானே? காரியரிலே மிச்சம் வைக்காமல் சாப்பிடச் சொல்லு.''

தான், டாக்டர் ராம்ஷேகருக்கு ஃபோன் செய்யப்போவது மாமிக்கு நேற்றே தெரியும். ''க்ளினிக்குக்குப் போனால் இவருக்கு எதுவுமே நினைவிருக்காது. நீ என்ன பேசணும்னு நினைக்கிறயோ அதைக் காலையிலேயே பேசிடு. ஏழு மணிக்கே வீட்டிலிருந்து அவர் கிளம்பிவிடுவார்னுதான் உனக்குத் தெரியுமே. ஆறு அல்லது ஆறரைக்கு வந்து பேச்சைத் தொடங்கு.''

மறுப்பதுபோல் சிவப்ரியா தலையசைக்க, அதை மாமி வேறுவிதமாக எடுத்துக் கொண்டாள்.

''சமையற்கட்டிலே நான் இருக்கப் போறேன். நீங்க பேசுவது எதுவும் என் காதில் விழாது. வேணும்னா, உன் போர்ஷனுக்கு அவரை வரச் சொல்றேன்.''

''எங்கள் பேச்சை நீங்க தாராளமா





"உங்க இலாகாவில் முதல்வர் சின்ன மாற்றம் செய்துட்டார் தலைவரே..."

"என்னவாம்?"

"மின்துறைக்குப் பதிலா, மீன்துறை."

– எஸ். மோகன்

கேட்கலாம் மாமி. ஆனா அது இல்லே பிரச்னை. நான் டாக்டர்கிட்டே பேசப் போவதெல்லாம் ரொம்ப சென்ஸிடிவான விஷயங்கள். இதனாலே அவர் மனசிலே நிம்மதி இல்லாம போச்சுன்னா, அது க்ளினிக்கிலேயும், காலேஜிலேயும் அவரைப் பாதிக்கும். அதனாலேதான் யோசிக்கிறேன். அவர் க்ளினிக் போனப்புறமே நான் அவரிடம் பேசுகிறேன். ராத்திரி அவர் வீட்டுக்கு வந்ததும் இதைப் பற்றிப் பேசலாமான்னு கேக்கணும்."

க்ளினிக்குக்கு சிவப்ரியா போகத் தயங்குவதன் காரணம், மாமிக்கு நன்றாகவே விளங்கியதால், அவள்மீது அனுதாபம் பொங்கியது. தவிர தன் கணவர் அவளை சொந்தப் பெண்ணாகவே நினைத்தாலும் அதைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளாமல், எல்லை மீறாது பாசம் செலுத்துவதில் மாமிக்குக் கூடுதல் நிறைவு. "உனக்கு எது சரின்னு படறதோ அதைச் செய்" என்றபடி நகர்ந்தாள்.

"டாக்டர், நான் என் வருங்காலத்தைப் பற்றி உங்ககிட்டே பேசணும். பத்து நிமிஷமாவது நீங்க ஒதுக்கணும். நைட் பத்து மணிக்கு க்ளினிக்குக்கு வந்துடறேன்." ராம்ஷேகர் ஃபோனை வைத்து விட்டார்.

அன்றைக்கென்று சில எமர்ஜென்ஸி கேஸ்கள் பின்னிரவில் வர, அவற்றையெல்லாம் கவனித்து முடிப்பதற்குள் இரவு பதினொன்றரை தாண்டிவிட்டது.

கைகளை சோப் கரைசலில் நன்கு கழுவி, துவாலையில் துடைத்துக் கொண்டபின் க்ளினிக்கில் தன்னுடைய அறையில் உட்கார்ந்து கொண்ட டாக்டர் ராம்ஷேகர், தன்னெதிரே இருந்த சிவப்ரியாவைப் பார்த்து "அப்புறம்?" என்றார்.

இன்னும் பேசவே தொடங்கவில்லை. அதற்குள் "அப்புறம்!"

"எனக்கு உங்க ஆலோசனை தேவை."

ராம்ஷேகர் பதில் கூறவில்லை. பார்வையைத் திருப்பினார். ஷோகேஸில் இருந்த வெகு நீளமான கழுத்து கொண்ட இரண்டு கொக்கு போன்ற பறவைகள் மாறி மாறி அவற்றிற்கு நடுவே உள்ள சிவப்பு வண்ண நீரைக் குடிக்கக் குனிந்து நிமிர்ந்தன. ஒன்று குனியும்போது மற்றது நிமிர்வது ஒரு லயத்துடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

"சொல்லு" என்றார்.

தான் தோன்றாத ஒரு காட்சியை, திரையில் வக்கிரமாக வெட்டி ஒட்டி, காட்சியாக உருவாக்கிய வேணுவின் அடாவடித்தனத்தை அவள் விளக்கினாள்.

அதைக் கேட்கும்போது மனத்தில் படபடப்பு ஏற்பட்டாலும் அதையும் மீறி வியப்பு ஏற்பட்டது ராம்ஷேகருக்கு. 'இது போன்ற நிலையில் வேறொருத்தியாக இருந்தால் கண்களில் நீர் முட்டும். குரல் கம்மிப் போகும். தலை தானாகக் குனியும். ஆனால் இவற்றில் எந்தச் செயல்பாட்டையும் எதிரொலிக்காமல் ஒரு தார்மிகக் கோபத்துடன் நியாயம் கேட்கிறாள் இந்தப் பெண்.'

"என்ன முடிவெடுத்தே?"

"அதை அப்படியே விட்டுடலாம்னு."

"ஏன்?" என்று கேட்டபோது ராம்ஷேகரின் குரலில் அதிர்ச்சி தெரிந்தது. அவர் தனக்குத் தெரிந்த வழக்கறிஞரின் தொலைபேசி எண்ணை ஏற்கெனவே மனத்தில் ஓடவிட்டிருந்தார். உடனடியாக அவரைத் தொடர்பு கொண்டு அந்த வேணுவுக்கு எதிராக வழக்கு தொடுக்க வேண்டுமே!

"அந்தக் காட்சியை வெட்டிடறதா பகிரங்கமாக வேணு அறிக்கை கொடுத்துட்டான். இந்த நிலையிலே கோர்ட் கேஸ்னு போனா எனக்குதான் காலவிரயம். இனிமே எனக்கு நேரம் ரொம்ப ரொம்ப முக்கியம் டாக்டர்."

# KALKI SHOPPING PAGE


## அமரர் கல்கி அவர்களின் புகழ்பெற்ற எழுத்தோவியங்கள்

| | | |
|---|---|---|
| சிவகாமியின் சபதம் | (புதிப்பதிப்பு) | 240–00 |
| பொன்னியின் செல்வன் | 1–ம் பாகம் | 135–00 |
| பொன்னியின் செல்வன் | 2–ம் பாகம் | 147–00 |
| பொன்னியின் செல்வன் | 3–ம் பாகம் | 130–00 |
| பொன்னியின் செல்வன் | 4–ம் பாகம் | 120–00 |
| பொன்னியின் செல்வன் | 5–ம் பாகம் | 260–00 |

தரமான அச்சு மற்றும் அழகான வண்ண அட்டை பைண்டிங்.

**சிறப்பு தள்ளுபடி ரூ. 232/–**

ஜூன் 1 முதல் ஜூன் 30 வரை

6 நூல்களும் ஒரே நேரத்தில் வாங்குங்கள்
சிறப்பு தள்ளுபடி கழித்து
ரூபாய் 800/–
மட்டும் அனுப்புக

தபால் செலவு தனி.


**பூம்புகார் பதிப்பகம்**
புதிய எண். 36, M.S. கோவில் தெரு,
சென்னை – 600 013.
தொலைபேசி : 5952694.

## ஞான வாபி

ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் அருளாசியுடன் சென்னை தாம்பரத்தை அடுத்த மாடம்பாக்கத்தில் ஹிந்துக்களின் அபரகாரியங்களுக்காக **"ஜனார்த்தனம்"** என்ற பெயரில் ஞானவாபி ஏற்படுத்திட இடம் வாங்கப்பட்டுள்ளது. நவீன வசதிகளுடன் கட்டடங்கள் எழுப்பிட ரூ.25/- லட்சம் வரை தேவைப்படுகிறது. அனைத்து ஹிந்து பெருமக்களும் தங்களது நன்கொடைகளை "தாம்பரம் ஹிந்து தர்ம பரிபாலன டிரஸ்ட்" பெயரில் DD/Chequeயினை ஸ்ரீ A.J. பாலசுப்பிரமணியம், B-4, U.S. அபார்ட்மென்ட்ஸ், 262, வேளச்சேரி சாலை, சென்னை – 59க்கு (போன் 2378258) அனுப்பி உதவிடலாம். இதற்கு 80G வருமானவரி விலக்கு பெறப்பட்டுள்ளது.

குருவருட்பணியில்:
ராம்ராம் ஸகோதரர்கள்,
மாடம்பாக்கம்

## காந்த சிகிச்சை



நாட்பட்ட எல்லா நோய்களுக்கும் காந்த சிகிச்சைக் கருவிகளின் மூலம் குறைந்த செலவில் மிக எளிய முறையில் நீங்களாகவே சிகிச்சை செய்து கொள்ளலாம். தமிழகத்தில் 15 ஆண்டுகளுக்கு முன்பாக முதன் முதலில் அறிமுகம் செய்த டாக்டர் M.G. அண்ணாதுரை அவர்களின் தயாரிப்பான காந்த சிகிச்சைக் கருவிகளின் மூலம் ஆயிரக் கணக்கானோர் பயன்பெற்றுள்ளனர். இந்த சிகிச்சையினால் பின் விளைவுகள், பக்க விளைவுகள் எதுவும் இல்லை.

அனைத்து நோய்களுக்கும், காந்த நீர் தயாரிக்க உதவும் உயர் சக்தி காந்தம் விலை ரூ.400/-

தலைவலி, மன இறுக்கம், மூளைக் கோளாறுகளை நீக்கும் தலைவலிப் பட்டை விலை ரூ.60/-

கழுத்துவலி, கழுத்து எலும்புத் தேய்வு, டான்சில், தைராய்டுக் கோளாறுகளை நீக்க உதவும் தொண்டை - கழுத்து பட்டை விலை ரூ.60/-

பருத்த வயிற்றை குறைக்கவும், இடுப்பு வலி மாதவிடாய், கருப்பை, சினைப்பை கோளாறுகளை நீக்கி மகளிரை அழகுறச் செய்யும் காந்த வயிற்றுப் பட்டை விலை ரூ.200/-

மூட்டுவலி, மூட்டு வீக்கம், மூட்டு எலும்புத் தேய்வு, முதலிய கோளாறுகளை நீக்கும் மூட்டுவலிப் பட்டை விலை ரூ.80/-

கருவிகளின் விலையுடன் பதிவுத் தபால் மூலம் பெற ரூ.40/- சேர்த்து அனுப்பவும். இலவச கடித ஆலோசனைக்கு சுயவிலாசமிட்ட ஆறு ரூபாய்த் தபால் தலை ஒட்டிய கவர் அனுப்பவும்.

AIRMAIL மூலம் பெற கருவியின் விலையில் நான்கு மடங்கு அனுப்பவும்.

**இலவசம்** இந்த விளம்பரத்தைக் கத்தரித்து 31.7.2001க்குள் ரூ.500க்கு மேல் கருவிகள் வாங்குபவர்களுக்கு அழகை அதிகரிக்கவும், மார்புவலி, மூச்சுத் திணறல், மார்புச்சளி, இருதயக் கோளாறுகளை சரிபடுத்த உதவும் காந்தமணி மாலை இலவசம்.

**ஹீலிங் மேக்னெட்ஸ் & கிறிஸ்டல்ஸ்**
புதிய எண். 10, கோபால கிருஷ்ண அய்யர் தெரு,
பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை - 600 017.
போன் : 8218268/5735207/8224465
e-mail : magnets@vsnl.net
website : www.healingmagnetscrystal.com

"மேக்கப்பை எப்ப கலைக்கப்போறே?" என்றார் ராம்ஷேகர் திடுமென்று.

"கலைச்சாச்சு."

"நான் இன்றைய மேக்கப்பைச் சொல்லலே."

"தெரியுது டாக்டர். இனிமே ஷூட்டிங் வெளிச்சம் என்மேலே படாது. இந்தக் க்ளினிக்கிலே என்னை வேலை செய்ய நீங்க அனுமதிக்கணும்."

கண்களை மூடிக் கொண்டு அவர் யோசித்த அந்த அறுபது நொடிகள் அவளுக் குப் பெரும் வேதனையை அளித்தன. "ப்ரியா, கோர்ஸை முடிச்சதும் நீ என் க்ளினிக்கிலேதான் ஜாயின் பண்றே. உன்னை ஒரு முழுமையான டாக்டராக்கின பிறகுதான் மீதியெல்லாம்" என்று பல முறை கூறிய உதடுகள்தான் இப்போது அதை உறுதி செய்யத் தயங்குகின்றன.

கண்களைத் திறந்த கணமே திட்டவட்டமான வார்த்தைகள் அவரிடமிருந்து வெளிப்பட்டன. "உன்னை இங்கே சேர்த்துக்கிட்டால், இங்கே உள்ள டாக்டர்களின் எண்ணிக்கையில் ஒன்று கூடுமே தவிர, அதே எண்ணிக்கையில் இருக்கும்னு நீ எதிர்பார்க்கக் கூடாது."

சிவப்ரியா உடனடியாகப் புரிந்து கொண்டாள். காலையில் மாமிக்கு அனுதாபத்தைப் பொங்கச் செய்த அதே விஷயத்தைதான் இப்போது டாக்டர் குறிப்பிடுகிறார்.

"என்னை இங்கே சேர்த்துக்கிறதுனாலே ஆனந்தை... டாக்டர் ஆனந்தை நீங்க வெளியேற்றணும்னு நான் எதிர்பார்க்கலே."

"ஒரே இடத்திலே நீங்க ரெண்டு பேரும் வேலை செய்தால் மனம் சஞ்சலமடையலாம். இதனாலே இங்குள்ள மருத்துவ சேவை பாதிப்படையக் கூடாது." கரிசனத்தோடு கண்டிப்பும் சரிவிகிதத்தில் வெளிப்பட்டது அவர் குரலில்.

"அதுக்கெல்லாம் நான் கேரண்டி டாக்டர்."

"எப்போ ஜாயின் பண்றே?"

"நாளைக்கு. முடிஞ்சா இன்னிக்கே" என்றாள் சிவப்ரியா உற்சாகத்துடன்.

(தொடரும்)

## திடீர்ப் பரிசுப் போட்டி – 10 முடிவு!

சென்னையில் தண்ணீர்க் கஷ்டம் குடமெடுத்தாடுகிறது. இதற்கு ஆறுதல் சொல்வது மாதிரி 'நறுக்' வாசகங்களை எழுதுங்கள் என்று கேட்டிருந்தோம். 'தண்ணிச்'சையாக, தண்ணீர்ப் பட்ட பாட்டை எழுதிக் குவித்து விட்டார்கள் வாசகர்கள்.

கிருஷ்ணரையே உதவிக்கு அழைத்து கோரிக்கை வைத்த 'பிட்நியூஸர்' ரூ. 100 பரிசு பெறுகிறார்:



**"கிருஷ்ணா நீ வர வேண்டும்!**
**கோவர்த்தன கிரியைப் பிடிக்க வேண்டும்.**
**மெட்ரோ லாரிகள், பீரங்கிகள் போல்**
**மியூசியத்தில் காட்சிப் பொருளாக வேண்டும்.**

*பிட்நியூஸர்,*
*15, வி.எஸ்.முதலி தெரு,*
*ஜி–2, சண்முகா ஃபிளாட்ஸ்,*
*சைதாப்பேட்டை, சென்னை – 600 015.*

# அழைத்துக் கொண்டது அமெரிக்கா!

## கல்கி – டயானா வொர்ல்ட் ட்ராவல் இணைந்து வழங்கிய குவிஸ் போட்டி விடைகள்:

*சென்ற வார தொடர்ச்சி*

### போட்டி–13

1. உகாண்டாவின் கொடுங்கோலன் இடி அமீன் இப்போது எந்த நாட்டில் வசிக்கிறார்? – *சௌதி அரேபியா*
2. ஜாலியன்வாலாபாக் படுகொலைகளுக்குக் காரணமான பிரிட்டிஷ் ராணுவத் தளபதியின் பெயர் என்ன? – *டயர்*
3. 'ஸ்டெபியின் ரசிகர்' என்று தன்னை அறிவித்துக் கொண்ட ஒருவனால் முதுகில் கத்தியால் குத்தப்பட்ட பிரபல டென்னிஸ் வீராங்கனை யார்? – *மோனிகா செலஸ்*
4. ராஜீவ் காந்தி படுகொலையில் மனித வெடி குண்டாகச் செயல்பட்ட பெண்ணின் பெயர் என்ன? – *தணு*
5. ஸ்பீல்பெர்க் இயக்கிய 'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்' படத்தில் எந்த சர்வாதிகாரியின் கொடூரங்கள் விவரிக்கப்படுகின்றன? – *ஹிட்லர்*
6. சுமார் ஒரு வருடத்திற்கு முன் ஒரிஸாவில் 'வேனோடு' எரிக்கப்பட்ட கிறிஸ்தவ மத போதகரின் பெயர் என்ன? – *ஃபாதர் ஸ்டெயின்ஸ்*

### போட்டி–14

1. ஸ்டாக்ஹோமைத் தலைநகராகக் கொண்ட நாடு எது? – *ஸ்வீடன்*
2. எல்லா மருத்துவர்களிடமும் இருக்கக் கூடிய, ரெனே லென்னெக் என்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்ட கருவி எது? – *ஸ்டெதெஸ்கோப்*
3. இரு உலகப் போர்களிலும் பங்கேற்காத ஐரோப்பிய நாடு எது? – *ஸ்விட்சர்லாந்து*
4. நுணுக்கம் அறியாதவர்கள் பில்லியர்ட்ஸை யும் இந்த விளையாட்டையும் ஒன்று போலவே எண்ணக்கூடும்? – *ஸ்னூக்கர்*
5. வருமானவரி ஏய்ப்பில் மாட்டிக் கொண்டுள்ள பிரபல ஜெர்மானிய டென்னிஸ் வீராங்கனை யார்? – *ஸ்டெபி கிராஃப்*
6. ஒலிம்பிக்ஸ் நடைபெற்ற பார்சிலோனா இருப்பது எந்த நாட்டில்? – *ஸ்பெயின்*

### போட்டி–15

1. பரதத்திலும் கதக்கிலும் தேர்ச்சி பெற்ற டோனா காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பிரபல கிரிக்கெட் வீரர் யார்? – *சௌரவ் கங்குலி*
2. 'காதலுக்கோர் கலங்கரை விளக்கம்' என்று பாராட்டப்பட்ட தேவதாஸ் திரைப்படத்தின் மூலக்கதையை எழுதியவர் யார்? – *சரத் சந்திரர்*
3. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" எனத் தொடங்கும் பதிகத்தை இயற்றிய 'நால்வரில் ஒருவர்' யார்? – *திருஞானசம்பந்தர்*
4. அமைச்சர் மேனகா காந்தியினுடையதும் காதல் திருமணம்தான். அவரது கணவரின் பெயர் என்ன? – *சஞ்சய் காந்தி*
5. 'ஆதலினால் காதல் செய்வீர்' என்ற பாரதியின் கவிதை வரியைத் தலைப்பாகக் கொண்டு தொடர்கதை எழுதிய எழுத்தாளர் யார்? – *சுஜாதா*
6. 'மன்மத லீலை' திரைப்பட இயக்குனர் யார்? – *கே. பாலசந்தர்*

### போட்டி–16

1. காமரூபம் என்று அழைக்கப்பட்ட பகுதி இன்று இந்தியாவின் எந்த மாநிலமாக விளங்குகிறது? – *அஸ்ஸாம்*
2. அன்றைய பாடலிபுத்ரம் இன்று வேறொரு பெயரில் ஒரு மாநிலத் தலைநகராக விளங்குகிறது. அந்த நகரின் புதிய பெயர் என்ன? – *பாட்னா*
3. அக்பராபாத் என்று அழைக்கப்பட்ட ஒரு இடம் இன்று வெளிநாட்டு பயணிகளையும் கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறது. அதன் தற்போதைய பெயர் என்ன? – *ஆக்ரா*
4. வட ரொடீஷியா என்ற நாட்டின் தற்போதைய பெயர் என்ன? – *ஜாம்பியா*
5. அன்று பெர்ஷியா (பாரசீகம்) என்று குறிப்பிடப்பட்ட பகுதி இன்று எந்த நாடாக விளங்குகிறது? – *ஈரான்*
6. சீனத் தலைநகரின் முந்தைய பெயர் பீகிங். அதன் தற்போதைய பெயர் என்ன? – *பெய்ஜிங்*

## போட்டி—17

1. 'வாஷிங்டனில் திருமணம்' என்ற பிரபல நாவலை எழுதியவர் யார்? — *சாவி*
2. திரைப்படமாகவும் வெளிவந்த 'ரங்கோன் ராதா'வின் கதாசிரியர் யார்? — *அறிஞர் அண்ணா*
3. 'ட்ரெயின் டு பாகிஸ்தான்' என்ற நூலை எழுதிய பிரபல எழுத்தாளர் யார்? — *குஷ்வந்த் சிங்*
4. 'கன்யாகுமரி', 'விஷ்ணுபுரம்' போன்ற புதினங்களை எழுதியவர் யார்? — *ஜெயமோகன்*
5. பாம்பே ஜெயஸ்ரீ பின்னணி பாடிய முதல் தமிழ்த் திரைப்படம் எது? — *வியட்நாம் காலனி*
6. 'பாக்தாத் பேரழகி' திரைப்படத்தில் 'பேரழகி'யாக நடித்தவர் யார்? — *ஜெயலலிதா*

## போட்டி—18

1. அவ்வை சண்முகி திரைப்படத்தில் பெண்ணாக வேடமிட்ட கதாநாயகன் யார்? — *கமல்ஹாசன்*
2. ஷேக்ஸ்பியர் எழுதிய 'மர்ச்சண்ட் ஆஃப் வெனிஸ்' என்ற நாடகத்தில் ஆண் வழக்கறிஞராக வேடமிட்டு வாதாடி ஷைலக்கை வென்றவள் யார்? — *போர்ஷியா*
3. 'பார்த்திபன் கனவு' என்ற சரித்திரப் புதினத்தில் சிவனடியாராக வேடமிட்டு வந்த கதாபாத்திரம் யார்? — *நரசிம்ம பல்லவர்*
4. பிட்டுக்காக மண் சுமக்கத் தயாரான தொழிலாளியாக வேடம் புனைந்தது யார்? — *சோமசுந்தரபெருமான்*
5. எந்த வேடத்தில் மாரீசன் தோன்றி சீதையை ராவணன் அபகரிக்க உதவினான்? — *மான்*
6. நவராத்திரி திரைப்படம் இந்தியில் உருவானபோது அதில் ஒன்பது வேடங்களைத் தாங்கிய நடிகர் யார்? — *சஞ்ஜீவ் குமார்*

## போட்டி—19

1. வால்மீகி, காளிதாசர் ஆகியோர் எந்த மொழியில் எழுதிப் புகழ் பெற்றனர்? — *சமஸ்கிருதம்*
2. கமலா தாஸ், குஷ்வந்த் சிங் ஆகியோர் எந்த மொழியில் எழுதிப் பிரபலமடைந்தனர்? — *ஆங்கிலம்*
3. எந்த மொழி இலக்கியத்தில் கபீர், முன்ஷி பிரேம் சந்த் ஆகியோர் வெகு பிரபலம்? — *இந்தி*
4. புட்டப்பா, காரந்த் ஆகியோர் எந்த மொழியில் தங்களது படைப்புக்களை வெளியிட்டார்கள்? — *கன்னடம்*
5. சங்கரன் குருப், தகழி ஆகியோர் எந்த மொழியில் எழுதி இலக்கிய அங்கீகாரம் பெற்றனர்? — *மலையாளம்*
6. காண்டேகர், ஹரிநாராயண ஆப்தே போன்றவர்கள் தங்கள் படைப்புகளை எழுதியது எந்த மொழியில்? — *மராத்தி*

## போட்டி—20

1. ரத்தத்தில் மிக அதிகம் உள்ளது சிவப்பு அணுக்களா அல்லது வெள்ளை அணுக்களா? — *சிவப்பு அணுக்கள்*
2. 'போபால் விஷவாயு' என்பது எது — மீதையல் ஐஸோசயனேட்டா அல்லது பொட்டாஷியம் ஐஸோசையனைடா? — *மீதைல் ஐஸோசயனேட்*
3. எவர்சில்வரில் உள்ள ஒரு உலோகம் குரோமியமா அல்லது நிக்கலா? — *குரோமியம்/நிக்கல். கேள்வி வடிவமைப்பில் தவறு நேர்ந்துவிட்டது. வருந்துகிறோம். இருவிடைகளுமே சரி. இரண்டும் ஏற்கப்பட்டுள்ளன.*
4. காற்றில் அதிகம் கலந்திருப்பது ஆக்ஸிஜனா அல்லது நைட்ரஜனா? — *நைட்ரஜன்*
5. எது கலக்கப்பட்ட உப்பு பரிந்துரைக்கப்படுகிறது— அயோடினா அல்லது புளூரைடா? — *அயோடின்*
6. ஓசோன் என்பது அடிப்படையில் என்ன ஆக்ஸிஜனா அல்லது ஹைட்ரஜனா? — *ஆக்ஸிஜன்*

## போட்டி—21

1. மார்க்கோ போலோ 'ஜாவா மைனர்' என்று குறிப்பிட்ட தீவு எது? — *சுமத்ரா*
2. பெரிய தீவான கிரீன்லாந்து ஒரு தனி நாடா? இல்லையேல் அது எந்த நாட்டைச் சேர்ந்தது? — *டென்மார்க்*
3. இலங்கைத் தீவுக்குப் பாலமமைக்க உதவ முன்வந்ததற்காக இந்த விலங்கின் முதுகில் ராமபிரான் அன்புடன் தடவியதுதான் மூன்று கோடுகளாகப் பதிந்து விட்டதாம். அது எந்த உயிரினம்? — *அணில்*
4. போர்ட் ப்ளேர் எந்தத் தீவுகளின் தலைநகரம்? — *அந்தமான் நிக்கோபார்*
5. 'காதலெனும் தீவினிலே' என்ற நூலை எழுதியவர் ஒரு பிரபல பத்திரிகையாசிரியர். அவர் யார்? — *எஸ்.ஏ.பி.*
6. நாற்புறமும் சூழப்பட்ட ஏரியொன்றின் நடுவில்தான் ஹைதராபாதில் மிக உயர்ந்த புத்தர் சிலை உள்ளது. அந்த ஏரியின் பெயர் என்ன? — *உசேன் சாகர்*

## போட்டி—22

1. பெரியபுராணம் என்பதும் திருவிளையாடற் புராணம் என்பதும் ஒரே நூலைத்தான் குறிக்கின்றன. — *தவறு*

2. புன்னகை, புன்னகை மன்னன் ஆகிய இரு திரைப்படங்களையும் இயக்கியவர் ஒருவரே — *சரி*
3. ஸ்டீபன் ஃபெளமிங் (நியூசிலாந்து) மற்றும் ஸ்டீவ் வாக் (ஆஸ்திரேலியா) ஆகிய இருவருமே வலக்கை பேட்ஸ்மேன்கள் — *தவறு*
4. யுனைடெட் கிங்டம் என்பதும் இங்கிலாந்து என்பதும் ஒன்றே — *தவறு*
5. பிரபல ஹாலிவுட் நடிகைகளான எலிசபெத் டெய்லர் மற்றும் சோபியா லாரன் ஆகிய இருவரும் அமெரிக்கர்கள் — *தவறு*
6. 'உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்ற வரியும், 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா' என்ற வரியும் பாரதியின் ஒரே பாடலில் இடம் பெறுபவைதான் — *சரி*

## போட்டி—23

1. ஒடிஸி என்ற பிரபல கிரேக்க காவியத்தை எழுதியவர் யார்? —*ஹோமர்*
2. ஒடிஸி என்ற நடன வகை எந்த மாநிலத்தில் உருவானது? — *ஒரிஸா*
3. நடிகை பாரதி மணந்து கொண்ட நடிகரின் பெயர் என்ன? — *விஷ்ணுவர்த்தன்*
4. கவிஞர் பாரதி பிறந்தது எந்த ஊரில்? — *எட்டயபுரம்*
5. ஜேம்ஸ் பாண்ட் பாத்திரத்தை உருவாக்கிய கதாசிரியர் யார்? — *இயான் ஃப்ளெமிங்*
6. ஜேம்ஸ் காமரூன் இயக்கிய, எக்கச்சக்கமான ஆஸ்கர் விருது பெற்ற, திரைப்படம் எது? — *டைட்டானிக்*

## போட்டி—24

1. விபத்தில் தமது ஒரு காலை இழந்த பிறகும் ஒரு செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு நடன மணியாகவும், பிறகு நடிகையாகவும் திகழ்பவர் யார்? — *சுதா சந்திரன்*
2. துரோணர் குருதட்சணையாக கட்டை விரலைக் கேட்டது யாரிடம்? — *ஏகலைவன்*
3. மைக் டைசன் ஒரு குத்துச் சண்டைப் போட்டியின்போது யாருடைய காதைக் கடித்துத் துப்பினார்? — *ஹோலிபீல்ட்*
4. சிவலிங்கத்தின் கண்களிலிருந்து ரத்தம் பெருகுவதைக் கண்டதும் தனது இரு கண்களையும் அடுத்தடுத்து அவருக்குப் பொருத்த முற்பட்ட பக்தனின் பெயர் என்ன? — *கண்ணப்பன் (திண்ணப்பன் என்ற விடையும் ஏற்கப்பட்டது)*
5. எந்தத் திரைப்படத்திற்காக நடிகை ஷபானா ஆஸ்மி தனது தலையை மொட்டை அடித்துக் கொண்டார் — *வாட்டர்*
6. ஒன்றரை வயதிலேயே தனது பார்க்கும் மற்றும் கேட்கும் சக்தியை இழந்த இந்த அமெரிக்க சமூக சேவகி தனது விடா முயற்சியால் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்தார். யார் இவர்? — *ஹெலன் கெல்லர்*

## போட்டி—25

1. 'ஏர் இந்தியா'வின் பிரபல சின்னம் யார்? — *மகாராஜா*
2. தனது முதல் போயிங் விமானத்தை (போயிங்–707) ஏர் இந்தியா நிறுவனம் வாங்கி இயக்கத் தொடங்கியது எந்த வருடத்தில்? — *1960*
3. ஏர் இந்தியாவின் முதல் சர்வதேசப் பயணம் 8.6.1948 அன்று தொடங்கியது. மும்பையிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் எந்த நகரத்துக்குச் சென்றது? — *லண்டன்*
4. அந்த மும்பை விமான நிலையத்தின் அப்போதைய பெயர் சான்டா க்ரூஸ் விமான நிலையம். அதன் இப்போதைய பெயர் என்ன? — *சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையம்.*
5. ஏர் இந்தியா நிறுவனத்தின் முதல் தலைவர் (சேர்மேன்) யார்? — *J.R.D.டாட்டா*
6. இந்த ஆண்டு மார்ச் நான்காம் தேதியிலிருந்து வாரத்திற்கு ஏழு கூடுதல் ஃப்ளைட்களை விடத் தொடங்கியிருக்கிறது ஏர் இந்தியா. எந்தப் பகுதிக்கு? — *வளைகுடா நாடுகளுக்கு (Gulf)*

## போட்டி—26

1. 'ஆயிரம் பொற்காசு' என்றவுடன் நினைவுக்கு வரும் நாகேஷ் ஏற்ற பாத்திரத்தின் பெயர் என்ன? — *தருமி*
2. செஸ் விளையாட்டில் பெண் கிராண்ட் மாஸ்டர் என்ற பட்டத்தைப் பெற்ற முதல் இந்தியர் யார்? — *விஜயலட்சுமி*
3. அமெரிக்க நீதிமன்றத்திலேயே மிக அதிக நேரடி நஷ்டஈடான 33.3 கோடி டாலரை வென்ற பெண்மணியின் பெயர் என்ன? — *எரின் ப்ரூகோவிச்*
4. பாட்மின்டன் விளையாட்டில் 'ஆல் இங்கிலாந்து' கோப்பையைச் சமீபத்தில் வென்ற இந்தியர் யார்? — *கோபிசந்த்*
5. 1526ல் யாரை வென்று இந்தியாவில் முகலாயப் பேரரசை பாபர் நிறுவினார்? — *இப்ராஹீம் லோடி*
6. அமிதாப் நடத்தும் குரோர்பதி நிகழ்ச்சியில் முதலில் கோடீஸ்வரனானவரின் பெயர் என்ன? — *ஹர்ஷவர்த்தன்*

# குட்டை... சித்தி!

''ஏதோ, 'வாழ்க்கை'க்கு முன்னாடி வருகிறதேனு டைம் பாஸுக்குப் பார்க்கிறேன்'' என்று சொல்லும் ஜெயா கிருஷ்ணனிலிருந்து ''ஏய்... 'சித்தி' பார்கல்லேன்னா எனக்குத் தூக்கமே வராது... கேட்டியா?'' என்று 'சித்தியோ மேனியா'வால் தவிக்கும் லக்ஷ்மி சுப்ரமண்யம் வரை, நாட்டின் பல நகரங்களில் ஏகப்பட்ட, மாறுபட்ட, வேறுபட்ட சித்திப் பிரியர்களிடம் எடுக்கப்பட்ட 'ஒபீனியன் போலி'லிருந்து...

'' 'சித்தி' என்றாலே வில்லியாகவே பார்த்துப் பழகிவிட்ட நமக்கு வித்தியாசமான சித்தியை, சாரதாவில் கண்டபோது பரபரப்பான எதிர்பார்ப்பு, தொற்றிக் கொண்டது. சொந்த மகளான ஸ்வேதாவிடம் காட்டிய பரிவைவிட பன்மடங்கு அதிகமாக மூத்தாளின் மகள் காவேரியிடம் கடைசி வரை என்றும் மாறாத அன்பு செலுத்தி வரும் சாரதா, நம் சமூகத்தில் 'சித்தி' எனும் உறவின் மீதுள்ள கறைகளைக் கழுவிவிட்டு உயர்ந்து நிற்கிறாள். பிரபாவதியையும், வேலுமணியையும் கூட மன்னித்து விடலாம். பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள குடும்பக் கூட்டிலிருந்துப் பறந்து செல்லும் ராமுவை மன்னிக்கவே முடியாது. தொடரை நீட்டிக் கொண்டே போகும் சமயத்தில் சில இடங்களில் தொய்வுகள் ஏற்பட்ட போதும் கடைசியாக என்ன தான் நடக்கும், இது எப்படித்







தான் முடியப் போகிறதோ என்கிற ஆவலில் தினந்தோறும் தொடர்ந்து பார்க்கத் தூண்டுகிறாள் 'சித்தி!'" என்கிறார் அழகுக் கலை நிபுணரான லலிதா பாலகிருஷ்ணன்.

"கடந்த பல மாதங்களாகவே எங்கள் இரவுப் பொழுதின் இனிய ஸ்நேகிதியாகிவிட்டாள் சித்தி. பிரச்னைகளைக் கண்டு துவண்டு போகும் பலவீனமான உள்ளம் கொண்ட பெரும்பாலான பெண்களுக்கு, நேர்மையும் எளிமையும் அதே சமயத்தில் அதிதமான மனோ திடத்துடனும் கூடிய 'சாரதா' கதாபாத்திரம் இந்தத் தொடரின் உயிர்நாடி. புதிது புதிதாய்



பல இடங்களில் மசாலா நெடி அடித்தாலும் மறுநாள் காட்சி எதிர்பார்ப்பில் அந்தக் குறைகளை மறந்து போகிறோம். இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பாக, ஓர் அன்பான தோழியுடன் பேசிவிட்டுச் செல்வது போல ஒரு நிம்மதி. சித்தி நிறைவடையப் போகிறது என்கிற நினைப்பே வருத்தத்தைத் தருகின்றது. இதையடுத்து இதைவிடச் சிறந்த ஒரு தொடரைத் தர வேண்டும்" என்று நிபந்தனை விதிக்கிறார் அனுபிரசன்னா.

"முதல் எபிசோடி லிருந்து சித்தி பார்த்து வருகிறேன். சாரதா எதிர்கொள்ளும் பிரச்னைகள், அவற்றைச் சமாளிக்கும் விதம் அனைத்தும் பெண்களுக்கு நம்பிக்கையளிப்பதாக அமைந்துள்ளது. ஆனால், மக்கள் விரும்பிப் பார்க்கிறார்கள் என்ற காரணத்திற்காகத் தேவையில்லாத கதாபாத்திரங்களைப் புகுத்திக் கதையை ஜவ்வாக இழுத்துச் செல்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது. இந்தத் தொடர் முடியப் போகிறது என்பது வருத்தமாகத்தான் இருக்கின்றது. கதையை நல்லவிதமாக முடித்து வைக்க வேண்டும் என்பதே என் விருப்பம். இந்தத் தொடர் முடிந்த பின்னர் இதைவிடச் சிறந்த தொடரை சாரதாவால் ஸாரி... ராதிகாவால் தர முடியும்" என்று நம்பிக்கையோடுச் சொல்கிறார் வி. நிர்மலா.

"ஒன்பதரை மணி ஆச்சுன்னா போதும். சர்வம் சித்திமயம்தான். யோசிச்சுப் பார்த்தா மகா இழுவையாகத் தோணும். ஆனா எல்லாத்தையும் (என்னையும் சேர்த்துத்தான்!) கட்டிப் போட்டு வெச்சிருக்கே சித்தி! அதுதான் எப்படின்னு தெரியலை. சாரதா கதாபாத்திரத்தோட இமேஜ், இமயம் போல உயர்ந்து நிற்கிறது. யோகி, காவேரி, பிரபாவதி, வேலுமணி இந்த நாலு கேரக்டரும் செதுக்கி வெச்ச சிற்பம் போல மனசுல நிற்கிறதும் வெற்றிக்கு ஒரு காரணம்.








ஒரே சோகம், ஒரே அழுகைன்னு எப்பவும் இல்லாம தடைகளைத் தாண்டி எதிர்ப்புகளைத் தகர்த்தெறியும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக காட்சித் தருகிறாள் சாரதா. என் கண்ணின் மணி, இனி சித்தி தான்!" என்று 'சித்தி' புகழ் பாடும் ஆஷா தேவி, எம்.எல். மாணவி.

நம்ம ஊர்ல கதை ஆரம்பிக்குதேன்னு 'சித்தி' பார்க்க ஆரம்பிச்சேன். அவ்வளவுதான்; முதல் எபிசோடிலிருந்து ஒரு காட்சி விடாம பார்த்துட்டு வர்றேன். சினிமாவுல வில்லனா நடிக்கிற அஜய் ரத்னத்தை எப்பவுமே எனக்குப் பிடிக்காது. ஆனா இந்தத் தொடர்ல, யோகி நடிப்பு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. மௌனப் புன்னகையா, லேசா பட்டும் படாம ஒரு சிரிப்புச் சிரிப்பார் பாருங்க. மனுசன் பலே கில்லாடிங்க. மற்றபடி ராமு, ஸ்வேதா கதாபாத்திரம் எனக்குப் பிடிக்கலை. சாரதா, காவேரி, யோகி, பிரபாவதி, வேலுமணி இவங்களோட ஆதிக்கத்துலதான், மத்த தொடர்கள்லேருந்து 'சித்தி' தனிச்சு நிக்குது. தொடர் முடியப் போகுதுன்னு ஒரே கவலையா இருக்கு. அந்த அரை மணி நேரத்தை எந்தத் தொடர் வந்து நிரப்பப் போகுதுன்னு எனக்குத் தெரியலை. கடைசி நான் பரீட்சை எழுதிட்டு வெளியே வரும்போது பள்ளிக் கூடத்தை, ஏக்கத்தோட பார்க்குற மாணவி போலத்தான் நான் இருக்கேன்!" என்கிறார் பத்தாம் வகுப்பு மாணவி ஆர். சரண்யா.

"பக்கத்துத் தெருவில், அண்டை வீட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களை நம் கண்ணெதிரே காண்பதுபோல் இருக்கின்றது. முடியறப்போ சுபமா முடியும்ங்கற நம்பிக்கை இருக்கு. மத்த தொடர்களைக் காட்டிலும் 'சித்தி' எல்லாரையும் கட்டிப் போட்டு வெச்சிருக்கு. முடிஞ்சதுக்கப்புறம் இந்த வெற்றிடத்தை நிரப்ப ராதிகாவாலதான் முடியும்ங்கறது என்னோட எதிர்பார்ப்பு" என்கிறார் குடும்பத் தலைவியான ஆர். அமுதா.

"அதென்னவோ தெரியலை, இரவு 9.30 மணியானால் என்ன வேலை இருந்தாலும் 'சித்தி' பார்க்கறதுக்கு டி.வி. முன் உட்கார்ந்து விடுவேன். ராதிகாவின் மகனாக வரும் சீனு அமைதியாக நடித்திருக்கிறார். தமது கவிதைத் தொகுப்புகளை விற்று சித்தியிடம் பணத்தைக் கொண்டு போய்க் கொடுக்கும் இடத்தில் நெகிழச் செய்து விட்டார்" இது கருணா.

"என் வோட்டு வேலுமணி மற்றும் மாதவன் இவர்களுக்குத்தான். வேலுமணியைப் பார்த்தாலே சிரிப்பு வந்து விடுகிறது. அதிலும் அந்த போலீஸ்காரன் சல்யூட் அடிப்பது. இப்போ நினைச்சாலும் சிரிப்பு வருது" சிரிக்கிறார் சித்ரா.

"வேலுமணியைப் போல நிஜத்தில் யாராவது இருந்தால், நிச்சயம் அடித்தே கொன்று விடுவார்கள். அந்த அளவுக்கு எங்களையெல்லாம் டென்ஷன் செய்கிறார்" என்கிறார் ரம்யா.

"இது 'உமன்பவர்'ஐக் காட்டும் கதை என்பதே சந்தோஷமாக இருக்கிறது" என ஆரம்பித்தார் அபர்ணா. எப்போது பார்த்தாலும் அடிபட்டு, மிதிபட்டு, உதைபட்டு கண்ணீர் விடும் தாய்க்குலத்தைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போய், என்னால் முடியும் என்று சிலிர்த்துக் கொண்டு எழும் ராதிகாவின் 'சித்தி' கதை ரொம்ப இன்ஸ்பைரிங்காக இருக்கிறது" என்கிறார்.

"கைக்குட்டை இல்லாமல் பார்க்க முடிகிற ஒரே சீரியல்" என்பது

• சி.ஜே. பாஸ்கர்



• சக்தி சரவணன்








குருமூர்த்தியின் கருத்து.

"அடுத்து என்ன நடக்கும் என்பதை அவ்வளவாக ஊகிக்க முடியாமல் புதிய திருப்பு முனைகள் அமைந்த கதை" என்பது ஜானாவின் கணிப்பு.

"இது என் கதை, நான் கலெக்டர் இல்லை. ஆனால் அத்தனை கஷ்டங்களைப் பட்டிருக்கிறேன்" என்று உணர்ச்சிவசப்படுகிறார் சிவகாமி!

"யதார்த்தமான பாத்திரப் படைப்பு" என்பது, விஜி, லக்ஷ்மி, ஜெயாவின் கருத்து.

"ஆரம்பம் முதலே 'எஸ்கேபிஸ்ட்டாக' சிவகுமார் அழகாக சித்திரிக்கப்பட்டிருக்கிறார். நடுநிலை தவறாத நேர்மையாளராக 'சித்தி'யின் காரெக்டர் அருமை. பிள்ளையானாலும் தந்தையானாலும் நீதிக்கு முன் பாசம் ஒன்றுமேயில்லை என்பதை நிலை நாட்டி விட்டாரே! அத்தனை கஷ்டங்களையும் பொறுமையாக எதிர்கொள்கிறாரே" என்கிறார்கள்.

"இரத்த சம்பந்தமான குழந்தைகள் உருப்படி இல்லாமலிருப்பதும், (பிரசாத், ஸ்ரீ, ஸ்வேதா) சித்திக்குப் பிறக்காதவர்கள் உத்தமர்களாயிருப்பதும் (சீனு, காவேரி, பிருந்தா) எத்தனை தத்ரூபமான, இயற்கையான தத்துவம்" என்று வியக்கிறார் சரண்.

'பயந்தாங் கொள்ளியான வைதேகி திடீரென்று வீராங்கனையாக மாறுவது, அதுவும் ஃபாக்டரி நிர்வாகத்தில் தலையிடுவதுதான் கொஞ்சம் நம்ப முடியவில்லை. இருந்தாலும் சகுனித்தனமான ஓர் அம்மா காரெக்டரைப் புகுத்தி ஒப்பேற்றிவிட்டார்கள்" என்கிறார் திருமதி கிருஷ்ணன்.

"சாரதாவின் அப்பா பாத்திரத்தின் தடுமாற்றமும் படு இயற்கை" என்கிறார் ரவி.

"இத்தனை பாத்திரங்களை வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித் தன்மையை படைத்திருப்பது கத்திமேல் நடக்கும் விஷயம்! ஜமாய்த்து விட்டார்கள்"– இது லக்ஷ்மி.

"ராதிகா, வசனமே பேச வேண்டாம்; அந்தக் கண் அசைப்பு, அந்தச் சிரிப்பு, ஒரு நடை, ஒரு கோபப் பார்வை, அந்தக் கை நொடிப்பு, ஒரு தலை அசைவு... அடடா... பாடி லாங்குவேஜ் பிரமாதம்" என்று கோரஸ் பாடுகிறார்கள் அனைவரும்.

"வேலுமணியைக் கண்டாலே அவர் குரல் வளையை நெறிக்க வேண்டும் என்ற ஆத்திரம் ஏற்படுகிறதே அதுவே அவருக்கு பெரிய வெற்றிதான்" என்கிறார் குருமூர்த்தி! இவருடன் விஜி, லக்ஷ்மி, கல்யாணி அனைவரும் சேர்ந்து 'ஜே' போடுவது யோகியாக வரும் அஜய் ரத்னத்துக்கு.

"அடக்கி வாசிக்கிறார்; ஆனால் அழுத்தி வாசிக்கிறார். மேடத்திடம் பவ்யமான அன்பு, பெண்ணிடம் ரோஷமுள்ள பாசம் என அசத்துகிறார்" என்றனர்.

"ஷூட்டிங் ஸ்பாட்டுகளிலிருந்து, காமிரா கோணம் வரை எல்லாமே கச்சிதம்" என்கிறார் ரவி. 'ஆடியோ வீடியோ இரண்டுமே பொருத்தமாக அமைந்துவிட்டது. அந்த டைட்டில் சாங் ஒன்று போதுமே... அள்ளிக் கொண்டு போவதற்கு... பின்னணிக் காட்சிகளும் கதைக்கேற்ப மாறுவது. கோயில், ஹாஸ்பிடல், திருவிழா போன்ற காட்சிகளின் தத்ரூபம், பங்களா–சாரதா வீடு இவற்றின் பின்னணி அலங்காரம் எல்லாமே பார்த்துப் பார்த்து அமைத்திருக்கிறார்கள். ஹாட்ஸ் ஆஃப்!" என்கின்றனர் சரணும் ரவியும்.



— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு,
குமார், ஜெயஸ்ரீ ராஜ்

படங்கள்: பாவை. ஜி.டி. ரமேஷ் குமார்

## "5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)**இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டிஸ், ஸ்பாண்டிலைட்டிஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க.
தொலைபேசி
**0413-346683**

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

**MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்**
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சூன் பேக்கரி எதிரில்)
**Fax : 91 - 0413 - 346683**



# S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

## முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

**S.V. HOME FOR AGED**
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356; 475 5799
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org




### எண்பத்து எட்டாம் அத்தியாயம்

## பட்டாபிஷேகம்

அருள்மொழிவர்மர் தொடர்ந்து புலவரைப் பார்த்துக் கூறினார்: "ஐயா! தங்களை இன்னும் ஒன்று கேட்கிறேன். சிபிச் சக்கரவர்த்தி முதல் சிவஞான கண்டராதித்தர் வரையில் எங்கள் சோழ குலத்து மன்னர்களின் புகழைத் தாங்கள் விரித்துரைத்தீர்கள். அவையெல்லாம் இந்தப் புராதன குலத்தில் பிறக்கும் பாக்கியம் பெற்ற எனக்கு எவ்வளவு பொருத்தமோ, அவ்வளவு என் சிறிய தந்தையும் மகான் கண்டராதித்த சோழரின் உத்தமத் திருப் புதல்வருமான மதுராந்தகத் தேவருக்கும் பொருத்தமாகுமல்லவா?"


புலவர் "ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். சபையிலிருந்தவர்கள் அத்தனை பேரின் கண்களும் சுந்தர சோழரின் மறுபக்கத்தில் அடக்க ஒடுக்கத்துடன் அமர்ந்திருந்த மதுராந்தகத் தேவரின் மீது திரும்பின. இப்போதுதான் புதிதாகப் பார்ப்பது போல் மதுராந்தகரைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள். முன்னமே மிக்க கூச்சத்துடன் அமர்ந்திருந்த மதுராந்தகர் இப்போது மேலும் சங்கோசம் அடைந்தவராகிப் பூமாதேவியைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு குனிந்த தலை நிமிரா

**அமரர் கல்கி**

மலிருந்தார்.

இதற்கிடையில் மாறுவேடம் பூண்டிருந்த ஆழ்வார்க்கடியான் மண்டபத்தின் ஒரு மூலைக்கு அ வ னை





அழைத்துச் சென்ற சின்னப் பழுவேட்டரையரிடம் கவலை தரும் ஒரு செய்தியைக் கூறினான். பாண்டியநாட்டு ஆபத்து உதவிகளைச் சேர்ந்தவனும் படகோட்டி முருகய்யனின் மனைவியுமான ராக்கம்மாள் என்பவளை மகுடாபிஷேக வைபவத்துக்காக வந்து கூடியிருந்த ஜனத்திரளிடையே அவன் கண்டான். எதற்காக இங்கே அவள் வந்திருக்கிறாள் என்பதை அறியும் பொருட்டுப் பின்தொடர்ந்து சென்றான். சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்கு அருகில் ஜனக்கூட்டத்தில் அவள் மறைந்து விட்டாள். ஆழ்வார்க்கடியான் அங்கேயே நின்று அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்த போது அவள் மறுபடியும் காணப்பட்டாள். அவளுடன் இன்னொரு பெண் இடுப்பில் ஒரு குழந்தையுடன் சென்றாள். அந்த இன்னொரு பெண் சின்னப் பழுவேட்டரையரின் மகளைப் போல் தோன்றவே ஆழ்வார்க்கடியான் இன்னது செய்வது என்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்தான். சின்னப் பழுவேட்டரையரின் மகள்தான் என்று நிச்சயமாகச் சொல்லவும் முடியவில்லை. கொஞ்ச தூரம் அவர்களுடன் போய் உறுதிசெய்து கொள்ளலாம் என்று போனான். கூட்டத்தில் அவர்களைப் பின்தொடர்ந்து போவது எளிய காரியமாக இல்லை. அவன் பின்தொடர்ந்து வருகிறான் என்பதை ராக்கம்மாளும் கவனித்திருக்க வேண்டும். அவள் திடீரென்று கூட்டத்துக்கு மத்தியில், ''ஐயையோ! இந்த ஆள் எங்களைத் தொந்தரவு செய்கிறான். பெண்களைத் தொடர்ந்து வந்து தொல்லை கொடுக்கிறான்!'' என்று கூச்சலிட்டாள். உடனே அங்கு நின்ற ஜனங்களில் பலர் ஆழ்வார்க்கடியானைச் சூழ்ந்து கொண்டு அவனைக் கண்டிக்கத் தலைப்பட்டார்கள். அவர்களிடம் ஆழ்வார்க்கடியான் அப்படியொன்றும் தான் செய்யவில்லையென்றும், அவர்கள் எல்லாரையும் போல் தானும் மகுடாபிஷேகக் காட்சிகளைப் பார்க்க வந்தவன் என்றும் சத்தியம் செய்து கூறினான். அவனைச் சூழ்ந்து கொண்ட ஜனத் திரளைச் சமாதானப்படுத்தி விட்டு அவன் வெளியேறுவதற்குள் ராக்கம்மாளும் இடுப்பில் குழந்தையோடு கூடிய மற்றொரு பெண்ணும் மறைந்து விட்டார்கள். ஆழ்வார்க்கடியான் கோட்டை வாசல் வரையில் அவர்களைத் தேடிக் கொண்டு சென்றான். கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு மூடு பல்லக்கில் குழந்தையுடன் கூடிய பெண் ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டான். பல்லக்கைச் சூழ்ந்து நாலு குதிரை வீரர்கள் நின்றார்கள். பல்லக்கில் அப் பெண் ஏறியதும், பல்லக்கும் குதிரைகளும் விரைந்து போகத் தொடங்கின. மேலும் அவர்களைத் தொடர்ந்து போகலாமா என்று யோசிப்பதற்குள் மகுடாபிஷேகத்தைப் பார்ப்பதற்காக வந்து கொண்டிருந்த ஒரு பெரிய ஜனக்கும்பல் ஆழ்வார்க்கடியானை இடித்துத் தள்ளிக் கொண்டு வந்து வெகு தூரம் கோட்டைக்குள்ளே கொண்டு வந்து சேர்த்து விட்டது. அந்தச் செய்தியைக் கோட்டைத் தளபதியிடம் உடனே தெரிவிப்பது முக்கியமானது என்று கருதி ஆழ்வார்க்கடியான் பட்டாபிஷேக மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். அருள்மொழிவர்மரின் கட்டளையின் பேரிலேயேதான் இவ்வாறு மாறுவேடம் பூண்டிருப்பதாயும், ஜனக் கூட்டத்தில் அங்குமிங்கும் திரிந்து ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிந்து வந்து தம்மிடம் சொல்லும்படி பொன்னியின் செல்வர் பணித்ததாயும், அந்தக் கடமையை நிறைவேற்றி வரும் சமயத்திலேயே மேற்சொன்ன நிகழ்ச்சியைத்தான் காணும்படி நேர்ந்ததென்றும் ஆழ்வார்க்கடியான் விளக்கிய பிறகு, சின்னப் பழுவேட்டரையர் அவனுடைய வார்த்தைகளில் பூரண நம்பிக்கை கொண்டார். தம்முடைய மகளாகிய பழைய மதுராந்தகன், மனைவியைப் பற்றி அவருக்கு முன்னமே கவலை இருந்து வந்தது. திருமலை கூறிய செய்தி அவருக்குத் திகிலை விளைவித்து மனக் குழப்பத்தையும் உண்டாக்கி விட்டது. தாம் தம் அரண்மனைக்குச் சென்று உண்மையை

அறிந்து வருவதாகவும், தாம் அவசரமாகப் போக நேர்ந்ததைப் பற்றி முதன் மந்திரி அநிருத்தர் மூலம் சுந்தர சோழருக்கும் பொன்னியின் செல்வருக்கும் அறிவிக்கும்படியும் பணித்து விட்டுச் சின்னப் பழுவேட்டரையர் அந்த மண்டபத்தில் இருந்து வெகுவேகமாக வெளியேறினார்.

ஆழ்வார்க்கடியான் வந்து பொன்னியின் செல்வரிடம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. தமிழ்ப் புலவர் நல்லன் சாத்தனாரிடம் பேசிக் கொண்டிருந்தபோதே இளவரசர் சின்னப் பழுவேட்டரையர் மீதும் கவனம் செலுத்தி வந்தார். அவர் மண்டபத்தை விட்டு அகன்றவுடன் பொன்னியின் செல்வருடைய திருமுகம் முன்னைக் காட்டிலும் ஒளி பொருந்தியதாயிற்று. சக்கரவர்த்தியின் பக்கம் திரும்பி நின்று அவர் கம்பீரமான குரலில் கூறலுற்றார் :-

"தந்தையே! நம் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையர் ஏதோ மிக அவசர காரியமாக வெளியே செல்லுகிறார். அது காரணமாக இந்த மகுடாபிஷேக வைபவம் தடைப்பட வேண்டியதில்லை. இந்தச் சபையில் இன்னும் பல பெரியோர்கள் இருக்கிறார்கள். வீர மறக்குலத்து முதல்வர்கள் இருக்கிறார்கள். வேலும் வாளும் ஏந்தி எத்தனையோ போர்க்களங்களில் போர் செய்து விழுப்புண் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரேனும் தங்கள் வீரத் திருக்கரத்தினால் இந்தப் புராதன சோழ குலத்தின் மணிமகுடத்தை எடுத்துச் சூட்டலாம். அவ்வளவு பேரும் இந்தப் பொற் கிரீடத்தையும் உடைவாளையும் செங்கோலையும் தங்கள் ஆய்வந்த கரத்தினால் தொட்டு ஆசி கூறியிருக்கிறார்கள். ஆகையால் இனி என் கரத்தினால் நானே எடுத்து இம் மணிமகுடத்தைச் சூடிக் கொண்டாலும், தவறு ஒன்றுமில்லை. ஆனால், அப்படிச் செய்வதற்கு முன்னால், தந்தையே! தங்களிடத்தும் இங்கே விஜயம் செய்திருக்கும் பெரியோர்களுக்கும் மறக்குலத்தவர்களுக்கும் விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ள விரும்புகிறேன். புறாவின் உயிரைக் காப்பதற்காகச் சதையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவன் நான். அதனால் நம் குலத்தவர் அனைவரையும் போல் 'செம்பியன்' என்ற குலப் பெயர் பெற்றிருக்கிறேன். கன்றுக்குட்டியை இழந்த பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டு மகனுக்கு மரண தண்டனை விதித்த மனுநீதிச் சோழரின் வம்சத்திலே வந்தவன் நான். நம் குலத்து முன்னோர்கள் அனைவரும் போர்க்களத்தில் புறமுதுகிடாத வீரர்கள் என்ற புகழ் பெற்றது போலவே, நீதி நெறியிலிருந்து அணுவளவும் தவறாதவர்கள் என்ற புகழையும் அடைந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வழியில் வந்தவனாகிய நான் நீதிநெறிக்கு மாறாக நடக்கலாகுமா? இன்னொருவருக்கு நியாயமாக உரிய பொருளையோ, பதவியையோ அபகரிக்கலாமா? நம் ஆஸ்தானப் புலவர் நம் குல முன்னோர்களைப் பற்றி அழகான சந்தக் கவியில் பாடி வந்த போது அவர்கள் அனைவரும் என் மனக் கண் முன்னால் வந்து தரிசனம் அளித்தார்கள். இராஜ கேசரிகளும் பர கேசரிகளும் வரிசை வரிசையாக நின்று காட்சி தந்தார்கள். நலங்கிள்ளியும் கோச்செங்கணாரும் என்னைக் கருணை ததும்பும் கண்களால் நோக்கி 'எங்கள் குலத்தில் உதித்த மகனே!' இந்தச் சிங்காதனம் உனக்கு உரியதா என்று சற்று சிந்தித்துப் பார்!' என்றார்கள். விஜயாலயரும் ஆதித்தரும் பராந்தகரும் இராஜாதித்தரும் என்னை வீரத் திரு விழிகளால் பார்த்து, 'குமாரா! நீ இந்தச் சிங்காதனத்தில் ஏறுவதற்கு உரியவனாக என்ன வீரச் செயல் புரிந்தாய்? சொல்!' என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு மறுமொழி சொல்லத் தயங்கினேன். பின்னர் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவர்களை கைகூப்பி வணங்கி விண்ணப்பித்துக் கொண்டேன். 'சோழ குலத்து முதல்வர்களே! நீங்கள் செய்த அரும்பெரும் செயல்களில் ஆயிரத்தில் ஒன்று கூட நான்

செய்யவில்லை. ஆனால் உங்கள் ஆசியுடன் இனி மேல்தான் அத்தகைய காரியங்களைச் செய்யப் போகிறேன். நீங்கள் நிலைநாட்டிய சோழ குலத்துப் புகழ் மேலும் வளர்ந்தோங்கி நீடூழி நிலைத்திருக்கும்படியான காரியங் களைச் செய்யப் போகிறேன். செயற்கரிய செயல்களைச் செய்யப் போகிறேன். உல கம் வியக்கும் வீரர் களாகிய நீங்களே



பார்த்து மெச்சும்படியான தீரச் செயல்களைப் புரிந்து உங்கள் எல்லாருடைய வாழ்த்துக்களையும் பெறப் போகிறேன்!' என்று இவ்விதம் என்னுடைய குலத்து முன்னோர்களிடம் நான் தெரிவித்தேன். அவர்களும் முகமலர்ந்து எனக்கு அன்புடன் ஆசி கூறினார்கள்..."

ஆவேச உணர்ச்சி ததும்புமாறு பொன்னியின் செல்வர் கூறி வந்த சொற்களைக் கேட்டுக் கொண்டு இருந்த அச் சபையில் உள்ளோர் எல்லாரும் ரோமாஞ்சனம் அடைந்தார்கள். அவர்களில் ஒருவர் "வீர வேல்! வெற்றி வேல்!" என்று முழங்கினார். உடனே சபையில் இருந்த அத்தனை பேரும் சேர்ந்து "வீர வேல்! வெற்றி வேல்!" என்று முழங்கிய ஒலி பட்டாபிஷேக மண்டபத்துக்கு வெளியிலும் கேட்டது. அங்கே கூடியிருந்த மக்களிடையே பெருங் கிளர்ச்சியை உண்டாக்கிற்று.

பொன்னியின் செல்வர் எல்லாருடனும் சேர்ந்து தாமும் "வெற்றிவேல்! வீர வேல்!" என்று முழங்கினார். முழக்கம் அடங்கியதும் கூறினார் : "தந்தையே! சோழ நாட்டு வீரர்களுக்குரிய இந்த முழக்கம் ஒரு சமயம், தங்கள் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில், வட பெண்ணைக்கு அப்பால் துங்கபத்திரை - கிருஷ்ணா நதி வரைக்கும் கேட்டது. அந்த நதிகளுக்கு அப்பாலுள்ள வேங்கி நாட்டாரும் கலிங்க நாட்டாரும் கல்யாண புரத்தாரும் மானிய கேடத்தாரும் அந்த முழக்கத்தைக் கேட்டு நடுநடுங்கினார்கள். இன்னும் மேற்குத் திசையிலும் நூறு நூறு மரக்கலங்களில் ஆயிரம் பதினாயிரம் சோழ நாட்டு வீரர்கள் சென்று இந்த நாட்டு வர்த்தகத்தைக் காப்பாற்றி வந்தார்கள். தந்தையே! தாங்கள் நோய் வாய்ப்பட்டுப் படுத்த நாளிலிருந்து சோழ நாட்டு வீர முழக்கத்தின் தொனி குறைந்திருக்கிறது. நாலாபுறமும் பகைவர்கள் தலையெடுத்து வருகிறார்கள். வேங்கியும் கலிங்கமும் கல்யாணபுரமும் மானிய கேடமும் நம்மை வலுச் சண்டைக்கு அழைக்கின்றன. வடக்கே இமய மலைக்கு அப்பாலிருந்து இந்த பழம்பெரும் பாரத தேசத்துக்கு வந்து கொண்டிருக்கும் பகைவர்களின் பேராபத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. சோழ நாட்டின் வளத்தைப் பார்த்துப் பொறாமைப்பட்டுப் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் மகிந்தன் இன்னமும் படை திரட்டிச் சேர்த்துக் கொண்டிருக்கிறான். வீர பாண்டியன் இறந்து விட்டாலும் அவனுடைய குலத்தைச் சேர்ந்தவன் என்று யார் தலையிலாவது பாண்டிய நாட்டு மணிமகுடத்தைச் சூட்டிக் கலகம் உண்டாக்க முயன்று கொண்டிருக்கிறான். மகிந்தனும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளும் சேர்ந்து சதி செய்து, வீரத் திலே அபிமன்யுவையும் அரவானையும் நிகர்த்த என் அருமைத் தமையனார் ஆதித்த கரிகாலரின் உயிருக்கு இறுதி தேடி விட்டார்கள். மேற்கே சேர மன்னன் பெரியதோர் யானைப் படையையும் மரக்கலப் படையையும் சேகரித்துக் கொண்டிருக்கிறான். சேரனுக்கு மரக்கலப் படையைத் தயாரித்துக் கொடுப்பதில் மேற்குத் திசையிலிருந்து புதிதாகக் கிளம்பியிருக்கும் ஒரு முரட்டுக் கூட்டத்தார் உதவி செய்கிறார்கள். சோழ நாட்டைச் சூழ்ந்திருக்கும் புதிய பேராபயம் இது. தந்தையே! நெடுங் காலமாக அரபு தேசத்தவர்கள் கப்பல் தொழிலில் சிறந்து விளங்குகிறார்கள். சீன தேசம் வரையில் சென்று வர்த்தகம் நடத்தி வருகிறார்கள். நமது நாட்டுத் துறைமுகங்களுக்கும் அவர்கள் அடிக்கடி வந்து செல்வதுண்டு. நாகரிகத்தில் சிறந்த அந்தப் பழைய அராபியர்களை அடக்கி ஒடுக்கி விட்டு, புதிய அராபியர் கூட்டம் ஒன்று இப்போது கிளம்பியிருக்கிறது. அவர்கள் அராபியர்கள்தானா அல்லது அக்கம் பக்கத்து நாட்டவர்களோ, நாம் அறியோம். ஆனால் மூர்க்கத்தனத்தில் அவர்களை மிஞ்சியவர்களை எங்கும் காண முடியாது. நானே அவர்களுடைய செயல்களை நேரில் பார்க்கும்படி நேரிட்டது. என்னைச் சிறைப்படுத்தி அழைத்துக் கொண்டு வருவதற்காகத் தான் தங்கள் கட்டளையின் பேரில் நம் கோட்டைத் தலைவர் சின்னப்

பழுவேட்டரையர் இரண்டு கப்பல்களில் வீரர்களை அனுப்பி வைத்திருந்தார்...."

சுந்தர சோழர் இந்தச் சமயம் குறுக்கிட்டுத் தழுதழுத்த குரலில், "மகனே! அப்படி நான் அனுப்பிய காரணத்தை நீ அறியாயா?" என்று கேட்டார்.

"தந்தையே! அதை நான் நன்கு அறிந்துள்ளேன். இங்கே அரசியல் உரிமை பற்றிக் குழப்பம் நேர்ந்திருந்தது; பாண்டிய நாட்டு ஆபத்து உதவிகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தீர்கள்; ஆகையால் என்னைப் பத்திரமாகத் தங்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகவே சிறைப்படுத்திக் கொண்டு வரச் சொன்னீர்கள். என் மீது தங்களுடைய அளவில்லாத அன்பும் பரிவுந்தான் அத்தகைய கட்டளை இடும்படி செய்தது. எல்லாருக்கும் அது நன்கு தெரியட்டும் என்றுதான் இங்கே சொல்கிறேன். அப்படி என்னைச் சிறைப்படுத்த வந்த நம் வீரர்கள் நூற்றுக்கணக்கானவர்கள், ஈழநாட்டுக் கடற்கரையில் உடைந்த கப்பலிலிருந்து வந்து ஒதுங்கியிருந்த அராபியர்களோ பத்துப் பேருக்கு மேலிருக்க மாட்டார்கள். நம் வீரர்களில் எத்தனை பேரை அவர்கள் திடீரென்று தாக்கிக் கொன்று விட்டார்கள் என்பதைப் பார்த்த நான் அடைந்த வேதனை இன்னமும் என் மனத்தை விட்டு அகலவில்லை. அந்தப் புதிய அராபிய சாதியார் சேர மன்னனுக்குக் கப்பல் கட்டுவதில் உதவி செய்கிறார்கள். அது மட்டுமல்ல; கலிங்க நாட்டாருடனும் தொடர்பு கொண்டு இருக்கிறார்கள். மூன்று நாட்டாரும் சேர்ந்து சோழ நாட்டுக் கடல் வாணிபத்தை அடியோடு அழித்து விடத் தீர்மானித்திருக்கிறார்கள். கடல் கொள்ளைக்காரர்கள் அரபுநாட்டாராயிருந்தால்தானென்ன, அல்லது நம்முடன் எத்தனையோ விதத்தில் தொடர்பு கொண்ட சேர தேசத்தாராயிருந்தால்தானென்ன? நம் கடல் வாணிகத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், நமது கடற்படையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். ஆயிரமாயிரம் புதிய மரக்கலங்களைக் கட்ட வேண்டும். புதிய புதிய மாலுமிகளைப் பழக்க வேண்டும். கப்பலில் இருந்து கொள்ளைக்காரர்களுடன் போரிடக்கூடிய வீரர்களைச் சேர்க்க வேண்டும். கீழைக்கடலில் உள்ள தீவுகளில் எல்லாம் புலிக்கொடியை நாட்டி, ஆங்காங்கே நம் வீரர்களை நிறுத்தி வைக்க வேண்டும். தந்தையே! இந்தக் காரியங்களையெல்லாம் செய்வதாக நம் குலத்து முன்னோர்களுக்கு நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். அதை நிறைவேற்றுவதற்குத் தங்களுடைய அனுமதி வேண்டும். இந்தச் சபையிலுள்ள பெரியோர்களின் சம்மதியும் வேண்டும்!"

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறி நிறுத்தியவுடன் சுந்தர சோழர், "மகனே! சோழ குலத்து வீரப் புகழை நீ வளர்ப்பதற்கு நான் தடை செய்வேனா? சோழ நாட்டுக் கடல் வாணிபத்தைப் பாதுகாப்பதற்கு இந்தச் சபையில் உள்ளவர்கள் தான் தடைசொல்லப் போகிறார்களா?" என்றதும், மீண்டும் அச் சபையில் "வீரவேல்! வெற்றிவேல்!" என்ற முழக்கம் எழுந்தது.

"தந்தையே! தாங்களும் இச் சபையோரும் தடைசொல்ல மாட்டீர்கள். நான் ஏற்கும் காரியங்களில் வெற்றியடைய வேண்டும் என்று ஆசி கூறியும் அனுப்புவீர்கள். தங்கள் ஆசி நிறைவேறி நான் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்க வேண்டும் என்றால், முதலில் என் உள்ளத்தில் நிம்மதி ஏற்பட வேண்டும். நேர்மையற்ற காரியம் எதையும் நான் செய்யவில்லை. என் குலத்து முன்னோர்கள் அங்கீகரிக்க முடியாத செயல் எதுவும் நான் புரியவில்லை. பிறருக்கு உரியதை நான் ஆசையினால் அபகரித்துக் கொண்டு விடவில்லை என்ற உறுதியை நான் அடைய வேண்டும். குல தர்மத்துக்கு ஒவ்வாத காரியத்தை இங்கே நான் செய்து விட்டுப் புறப்பட்டேனானால், என் உள்ளம் என்னை வருத்திக் கொண்டேயிருக்கும். பகைவர்களிடம் போரிட்டு எப்படி



வெற்றி கொள்வேன்? தர்மத்தை நிலை நாட்டப் போராடுகிறோம் என்ற நம்பிக்கை என் மனத்தில் எப்படி ஏற்படும்? முன்னொரு தடவை இலங்கைச் சிங்காதனத்தை நான் கவர்ந்து கொள்ள ஆசைப்பட்டதாக ஒரு பெரும் வதந்தி ஏற்பட்டது..."

"குழந்தாய்! அதை யாருமே நம்பவில்லை. நீ அத்தகைய குற்றத்தைச் செய்யக்கூடியவன் என்று எண்ணியதில்லை" என்றார் சக்கரவர்த்தி.

"தாங்கள் நம்பியிருக்க மாட்டீர்கள், தந்தையே! ஆனால் அத்தகைய பேச்சு என் காதில் விழுந்ததும் என் மனம் எவ்வளவோ வேதனைப்பட்டது. ஈழநாட்டுப் பிக்ஷுக்கள் எனக்கு அளித்த மணி மகுடத்தை நான் வேண்டாம் என்று மறுதளித்ததை என் நண்பர்கள் இருவர் அறிவார்கள். அவர்கள் அப்போது என் அருகிலேயே இருந்தார்கள்..."

சபையில் இருந்த புத்த பிக்ஷுக்களின் தலைவர், "ஆம், ஆம்! நாங்களும் அதை அறிவோம்" என்று சொன்னார்.

"ஒரு பொய்யான அவதூறு என் உள்ளத்தில் அவ்வளவு வேதனையை உண்டாக்கியது. அதைத் தாங்கள் நம்பவில்லையென்றால், நம்பியவர்கள் சிலரும் இருந்தார்கள். உண்மையாகவே நான் இப்போது இன்னொருவருக்கு உரிமையாக வேண்டிய சிங்காதனத்தை அபகரித்துக் கொண்டேனென்றால், அதனால் இந்தக் குலத்துக்கு எத்தனை அபகீர்த்தி உண்டாகும்? என் வாழ்நாளெல்லாம் அதைப் பற்றி வேதனைப்பட்டுக் கொண்டிருப்பேன். வேறு எந்தப் பெரிய காரியத்திலும் மனத்தைச் செலுத்த முடியாது; உற்சாகமாகச் செய்யவும் முடியாது..."

வெகு நேரம் குனிந்த தலை நிமிராமலிருந்த மதுராந்தகத் தேவர் இப்போது பொன்னியின் செல்வரை அண்ணாந்து பார்த்து ஏதோ சொல்வதற்குப் பிரயத்தனப்பட்டார். பொன்னியின் செல்வர் வந்தியத்தேவனைப் பார்த்துச் சமிக்ஞை செய்யவே அவ் வீரன் மதுராந்தகத் தேவர் பக்கத்தில் போய் நின்று கொண்டான். அவர் காதில் மட்டும் கேட்கும்படியான மெல்லிய குரலில், "நண்பா! சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய முதல் தேவாரத்தின் முதல் அடி என்ன?" என்று கேட்டான். இந்தச் சமயத்தில் இது என்ன கேள்வி என்ற வியப்புடன் மதுராந்தகர் "பித்தா! பிறைசூடி!" என்றார். வந்தியத்தேவன் கள்ளக் கோபத்துடன் "என்ன, ஐயா, என்னைப் பித்தன் என்கிறீர்? நீர் அல்லவோ பெண் பித்துப் பிடித்து அலைகிறீர்? அதோ, பாரும்! உமது தர்ம பத்தினி பூங்குழலி உம்மைப் பார்த்துச் சிரிப்பதை!" என்றான். இது என்ன? இந்த நல்ல சிநேகிதன் இப்படித் திடீரென்று வலுச் சண்டைக்கு வருகிறானே என்ற எண்ணத்துடன் மதுராந்தகர் பெண்மணிகள் வீற்றிருந்த இடத்தை நோக்கினார். உண்மையில், அப்போது பூங்குழலி இவர் பக்கம் பார்க்கவேயில்லை. பூங்குழலி, குந்தவை, வானதி, செம்பியன் மாதேவி, வானமாதேவி ஆகிய அரண்மனைப் பெண்மணிகள் யாவரும் அளவில்லாத ஆர்வம் கண்களில் ததும்பப் பொன்னியின் செல்வரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறுபடி மதுராந்தகர் பொன்னியின் செல்வரைப் பார்த்தபோது அவர் சோழ குலத்தின் புராதன மணிமகுடத்தைத் தமது கரங்களில் தாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

"தளபதி சின்னப் பழுவேட்டரையர் இன்னும் திரும்பி வரவில்லை. அதனால் என்ன? குறிப்பிட்ட வேளையில் முடிசூட்டு விழாவை நானே நடத்தி விடுகிறேன்! தந்தையே! விஜயாலய சோழர் முதல் நம் முன்னோர்கள் அணிந்து வந்த இந்த மணிமகுடத்தைத் தாங்கள் எனக்கு அளிக்க உவந்தீர்கள். சாமந்தர்கள், தளபதிகள், கோட்டத் தலைவர்கள், பொது மக்கள் அனைவரும் அதை அங்கீகரித்தார்கள். ஆகையால், இந்தக் கிரீடம் இப்போது என் உடைமை ஆகிவிட்டது. என் உடைமையை நான் என் இஷ்டம் போல் உபயோகிக்கும் உரிமையும் உண்டு அல்லவா? என்னை விட இந்தக் கிரீடத்தை அணியத் தகுந்தவர் இங்கே ஒருவர் இருக்கிறார். அவர் என்னை விடப் பிராயத்தில் மூத்தவர். இந்தச்

சோழ இராஜ்யத்துக்கு என்னை விட அதிக உரிமை அவருக்கு நியாயமாக இருந்தபோதிலும் அவர் அதைக் கோரவில்லை. நான் முடிசூட்டிக் கொண்டு சிங்காதனத்தில் அமர்வதைப் பார்த்து மகிழச் சித்தமாக இங்கு வந்திருக்கிறார். அவர் என் உயிரை ஒரு தடவை காப்பாற்றினார். என் உயிரினும் இனியவரான என் நண்பரைக் காப் பாற்றினார். இந்தச் சோழ குலத்துக்கு நேர்வதற்கு இருந்த பெரும் விபத்து நேரிடாமல் தடுத்தார். இப்படிப்பட்ட சிறப்பான காரியம் எதுவும் நான் இது வரையில இந் நாட்டுக்குச் செய்ய வில்லை. ஆகையால் இந்த மணிமகு டத்தை மகான் கண்டராதித்தரின் குமாரரும் என் சிறிய தந்தையுமான மதுராந்தகத் தேவரின் தலையில் சூட்டுகிறேன்!"

இவ்விதம் பொன்னியின் செல்வர் சொல்லிக் கொண்டே சக்கர வர்த்தியின் மறு பக்கத்தில் வீற் றிருந்த மதுராந்தகரின் அருகில் போய் அவர் சிரஸில் கிரீடத்தை வைத்தார்.

மகுடத்தை வைக்குங்கால் மதுராந் தகர் அதைத் தடுக்காமலிருக்கும் பொருட்டு வந்தியத்தேவன் முன் ஜாக்கிரதையாக அவர் பின்னால் நின்று தோள்கள் இரண்டையும் அமுக்கி இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் மதுராந்தகரோ அப்படி ஒன்றும் செய்ய முயலவில்லை. அவர் மெய்மறந்து தம் வசமிழந்து உண்மை யிலேயே பித்துப் பிடித்தவர் போல் நாலு புறமும் வெறிக்கப் பார்த்துக் கொண் டிருந்தார்.

மணிமகுடத்தைச் சூட்டியதும் பொன்னியின் செல்வர் "கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழ தேவர் வாழ்க!" என்று முழங்கினர். "சக்கர வர்த்தி உத்தமச் சோழர் வாழ்க! வாழ்க!" என்று வந்தியத்தேவன் பெருங்குரலில் கூவினான்.

இத்தனை நேரமும் பிரமித்துப் போய் நின்ற முதன் மந்திரி அநிருத்தர் முதலி யவர்கள் அனைவரும் இப்போது "கோப்பர கேசரி மதுராந்தக உத்தமச் சோழர் வாழ்க!" என்று முழங்கினார்கள்.

சுந்தர சோழச் சக்கரவர்த்தி உணர்ச்சி மிகுதியால் பேசும் சக்தியை அடியோடு இழந்திருந்தபடியால் தம் கையிலிருந்த பல நிற மலர்களை மதுராந்தக உத்தமச் சோழர் மீது தூவினார்.

அரண்மனைப் பெண்மணிகளும் சக்கரவர்த்தியைப் பின்பற்றி மதுராந்தகர் மீது மலர் மாரி பொழிந்தார்கள்.

மதுராந்தகர் சிறிது திகைப்பு நீங்கியதும் எழுந்து நேரே செம்பியன் மாதேவியிடம் சென்று கும்பிட்டு நின் றார். அந்த மூதாட்டியின் கண்களி லிருந்து கண்ணீர் அருவி போலப் பொங்கிப் பொழிந்து கொண்டிருந்தது.

"மகனே! இறைவனுடைய திருவுள்ளம் இவ்வாறு இருக்கிறது! நீயும் நானும் அதற்கு எதிராக நடப்பது எப்படிச் சாத்தியம்?" என்றார்.

பொன்னியின் செல்வர், சபையில் கூடியிருந்த மற்ற புலவர் பெருமக்கள், பட்டர்கள், பிக்ஷுக்கள் ஆகியவர்களைப் பார்த்து, "நீங்கள் இனி உங்கள் வாழ்த்துக் கவிதைகளை உசிதப்படி மாற்றிக் கொண்டு சொல்லுங்கள்!" என்றார்.

அவர்களும் அவசர அவசரமாக வாழ்த்துக் கவிகளை மாற்றி அமைத்துக் கொண்டு பாடத் தொடங்கினார்கள்.

மதுராந்தக உத்தமச் சோழருக்கு மணிமகுடம் சூட்டப்பட்ட சிறிது நேரத்துக்குள்ளே அந்தச் செய்தி தஞ்சை வீதிகளில் கூடியிருந்த மக்களி டையில் பரவி விட்டது. அது விரை வாகப் பரவுவதற்கு வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் பெரிதும் காரண மாக இருந்தார்கள். பொன்னியின் செல் வர் கட்டளைப்படி அவர்கள் வீதிகளில் ஆங்காங்கே ஆட்களை நிறுத்தியிருந்தார் கள். அவர்களிடமெல்லாம் அவசரமாகச் சென்று சொல்லி, "கோப்பர கேசரி உத்தமச் சோழ தேவர் வாழ்க!" என்று முழங்கச் செய்தார்கள். இளவரசர் அருள் மொழிவர்மர் தமக்கு அளிக்கப்பட்ட இராஜ்யத்தைத் தம் சிறிய தந்தை மதுராந்தகருக்கு அளித்து விட்டார் என்றும், கடற் கொள்ளைக்காரர்களை

அடக்குவதற்காகப் பெரிய கப்பல் படை சேர்த்துக் கொண்டு சீக்கிரம் புறப்படப் போகிறார் என்றும் வாய்மொழியான செய்தி மக்களிடையே விரைந்து பரவிக் கொண்டிருந்தது. சிலர் இதை உடனே நம்பினார்கள். பொன்னியின் செல்வரின் பெருங் குணத்துக்கு இது உகந்ததே என்று அவர்கள் கருதினார்கள். இன்னும் சிலர் "கையில் கிடைத்த பேரரசை யார்தான் இன்னொருவருக்குக் கொடுப்பார்கள்?" என்று ஐயுற்றார்கள். பதினாயிரக்கணக்கான ஏக காலத்தில் பலவாறு பேசிய குரல்களும், "வாழ்க! வாழ்க!" என்னும் முழக்கங்களும் சேர்ந்து புயற்காற்று அடிக்கும் போது அலை கடலில் எழும்பும் பேரொலியைப் போல் ஒலித்தன.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையின் மீது அமைத்த பொன்மயமான அம்பாரியில் அமர்ந்து மதுராந்தக உத்தமச் சோழர் பவனி கிளம்பியதும் எல்லாச் சந்தேகங்களும் மக்களுக்குத் தீர்ந்து விட்டன. யானையின் கழுத்தில் யானைப் பாகனுடைய பீடத்தில் அமர்ந்திருப்பவர் பொன்னியின் செல்வர் என்பதைக் கண்டதும் மக்களுடைய உற்சாகம் எல்லை கடந்ததாயிற்று. ''கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழர் வாழ்க!'' என்று மக்களின் குரல்கள் முழங்கின. ஆனால் அவர்களுடைய உள்ளங்களில் பொன்னியின் செல்வரின் செயற்கருஞ் செயலே குடிகொண்டிருந்தது. அதை எண்ணியதனால் அவர்களுடைய அகங்களைப் போல் முகங்களும் மலர்ந்திருந்தன. பொன்னியின் செல்வர் மணிமகுடம் சூட்டிக் கொண்டு பவனி வந்தால் மக்கள் எவ்வளவு குதூகலம் அடைந்திருப்பார்களோ, அதை விடப் பன்மடங்கு அதிகமான குதூகலத்தை இப்போது வெளியிட்டார்கள்.

இமயமலைச் சிகரத்தில் புலி இலச்சினையைப் பொறித்த கரிகால் பெருவளத்தானைப் பொன்னியின் செல்வர் மிஞ்சி விட்டார் என்றும், தியாக சிகரத்தில் இவர் தமது இலச்சினையை என்றும் அழியாதவண்ணம் பொறித்து விட்டார் என்றும் அறிஞர்கள் மகிழ்ந்தார்கள்.

சாதாரண மக்களோ, அப்படியெல்லாம் அலாதி அலங்காரங்களையும் உபமான உபமேயங்களையும் தேடிக் கொண்டிருக்கவில்லை. மதுராந்தகர் தலையில் மணிமகுடத்தைச் சூட்டி விட்டுப் பொன்னியின் செல்வர் பட்டத்து யானையை ஓட்டிக் கொண்டு செல்லும் காட்சி அவர்கள் உள்ளத்தைப் பரவசப்படுத்தி விட்டது. ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வாழ்த்திக் கொண்டும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டும் மலர்களைத் தூவிக் கொண்டும் மஞ்சள் நிற அட்சதையை வாரி இறைத்துக் கொண்டும் மக்கள் ஒரே கோலாகலத்தில் தங்களை மறந்து ஆழ்ந்திருந்தார்கள்.

இவ்விதம் குதூகலத்தினால் மெய்மறந்து கூத்தாடிக் கொண்டிருந்த மாபெரும் ஜனக் கூட்டத்தினிடையே பட்டத்து யானையைச் செலுத்திக் கொண்டு போவது எளிய காரியமாயில்லை. பொன்னியின் செல்வரும் அவசரப்படாமல் ஜனங்களின் குதூகலத்தைத் தாமும் பார்த்துக் களித்துக் கொண்டு, அங்கங்கே அறிமுகமான முகம் தென்பட்டபோதெல்லாம் ஏதேனும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டு, மெள்ள மெள்ள யானையைச் செலுத்திக் கொண்டு போனார். வீதிவலம் முடிந்து அரண்மனைக்குத் திரும்புவதற்குள் மாலை மயங்கி முன்னிரவு வந்து விட்டது. வானத்து விண்மீன்களுடன் வீதிகளில் ஏற்றிய தீபங்கள் போட்டியிட்டுப் பிரகாசித்தன. அரண்மனை மேலேயிருந்து மலர் மாரி பொழிந்தது. "யானைப்பாகா! யானைப்பாகா!" என்று ஓர் இனிய குரல் கேட்டது. பொன்னியின் செல்வர் அண்ணாந்து பார்த்த போது வானதியின் புன்னகை மலர்ந்த முகம் அங்கே தோன்றியது.

''பெண்ணே! அஞ்ச வேண்டாம். மதுராந்தக உத்தமச் சோழரின் தர்ம இராஜ்யத்தில் யானையும் புலியும் கலந்து உறவாடும்; பூனையும் கிளியும் கொஞ்சிக் குலாவிக் குதித்து மகிழும்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

(தொடரும்)



# புற்று நோய்க்கு தெய்வீக
# இயற்கை மூலிகை மருத்துவம்



நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்களும் வளருகின்றன. ஒவ்வொரு நிமிடமும் பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகி கொண்டே இருக்கின்றன. இதற்கு இயற்கையாகவே ஒரு கட்டுப்பாடு உள்ளது. ஆனால் சில செல்கள் கட்டுப்பாடின்றி உடலின் எந்த இடத்திலும் பல்கிப் பெருக வளர ஆரம்பிக்கும். கட்டுப்பாடு இல்லாமல் வளர்ச்சியடையும் செல்கள் ஒரு கட்டியாக மாறுகிறது. இதைத்தான் புற்றுநோய் என்கிறோம். எல்லா ரக புற்று நோய்களுக்கும் சில வகை பழக்க வழக்கங்களே காரணமாக இருக்கின்றன. புகையிலை போடுவதால் வாயில் புற்று நோய், சிகரெட் பிடித்தல் காரணமாக நுரையீரல், தொண்டை, உணவுக் குழாய், மூத்திரப்பையில் புற்று நோய், பொடி போடுவதால், மூக்கில் புற்று நோய், மது அருந்துவதால் காமாலை வந்தால் கல்லீரல், இரைப்பையில் புற்றுநோய் அதிக குழந்தைகளை பெறுதல், பல ஆண்களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றால் கர்ப்பப்பை புற்று நோய், ஏற்படுகின்றது. மேலும் நாம் உண்ணும் உணவு வகைகள் தயாரிப்பில் நிலங்களில் அதிகமான இரசாயன உரங்கள், மருந்துகள் சேர்ப்பதாலும், சுகாதாரமற்ற சுற்றுபுற சூழ்நிலைகளாலும், அவ்வப்போது நாம் உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளாலும் அதிகமான கோபம், பயம், மன உளைச்சல், பரபரப்பு அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல் போன்றவற்றின் காரணமாக தோன்றும் நரம்புத் தளர்ச்சியாலும் புற்றுநோய் வரலாம். ஒரு புற்று நோய் செல் பல்கி பெருகி புற்று நோய் கட்டியாக மாறுவதற்கு குறைந்தது 7 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

**புற்றுநோய் ஆரம்ப அறிகுறிகள்:** ஒவ்வொரு உறுப்புக்கும் எந்தவிதமான நோய் வந்தாலும் ஒரேவிதமான அறிகுறிகள் தான் தென்படுகின்றன. உதாரணமாக காச நோய், நிமோனியாக் காய்ச்சல் ஆகியன நுரையீரலைத்தாக்கும் போது இருமல், சளி, மூச்சு வாங்குதல், சளியில் இரத்தம் ஆகிய அறிகுறிகள் தென்படுகின்றன. நுரையீரலைப் புற்றுநோய் தாக்கும் போதும், இதே அறிகுறிகள்தான் இருக்கும். இதேபோன்று வயிற்றுப் புண்ணுக்கு இருக்கும் அறிகுறிகள்தான் இரைப்பையில் புற்றுநோய் வந்தால் இருக்கும். எனவே எந்த நோயின் அறிகுறிகளும் இரண்டு வாரத்திற்கு மேல் இருந்தால் உடனடி மருத்துவ ஆலோசனை அவசியம். எச்சில் துப்பும் போது ரத்தம் வந்தால் அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனெனில் புற்று நோய்க்கென தனிப்பட்ட அறிகுறிகள் கிடையாது. பொதுவான அறிகுறிகளுடன் புற்றுநோய் இருக்க வாய்ப்புகள் அதிகம்.

**புற்றுநோய்க்கு தெய்வீக மூலிகைகள்:** வேப்பிலை, வில்வம், துளசி, மாவிலை, அருகம்புல், அத்தி, வெற்றிலை, தும்பை, கீழாநெல்லி, நித்திய கல்யாணி, முருங்கை, நெல்லி, கரிசலாங்கண்ணி, வல்லாரை ஆகியவைகளை பொடி செய்து பின் சம அளவில் ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தான் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் உட்கொள்ளவேண்டும். இம் மூலிகைகளினால் முதலில் புற்று செல்கள் பெருகி வளர்ச்சி அடைவது தடுக்கப்படுகின்றது. பின்னர்புற்று செல்கள் உருவாகாமலும், கட்டிகள் உடைந்து மெதுவாக வெளியேற்றப்படுகின்றது. இந்த தன்மை மேற்கூறிய மூலிகைகளுக்கு உண்டு என்பது மறுக்கப்படாத உண்மையாகும்.

**புற்றுநோய்களைத் (தவிர்க்கும்) தடுக்கும் உணவு வகைகள்** புற்று நோயாளிகளுக்கு பச்சை காய்கறிகள் நல்லது. மஞ்சள் நிறத்திலும், பச்சை நிறத்திலும் உள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் புற்று நோயைத் தடுக்க கூடியவை. இவற்றில் வைட்டமின் A,C சத்துகள் அதிகம். வைட்டமின் A-வில் பீட்டாகரோட்டின் என்ற பொருள் உள்ளது. இது ஒரு ஆன்டி ஆக்சிடென்ட் புற்றுநோயை தடுக்கும் குணம் இதற்குண்டு. காரட், தக்காளி, மாம்பழம், பலாப்பழம், கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, எலுமிச்சை, நெல்லிக்காய், முட்டைகோஸ், பீட்ரூட் போன்றவற்றில்மேற்சொன்ன சத்துக்கள் அதிகமுள்ளன. இவற்றை அடிக்கடி உண்பவர்களுக்கு புற்றுநோய் வரவாய்ப்பில்லை. இதேபோல் நார்பொருள் நிறைந்த உணவுகளை சாப்பிட்டால் பெருங்குடல் தொடர்பான புற்றுநோய்கள் வருவது குறைகிறது. கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு, தேங்காய், நிலக்கடலை, அவரை, கத்திரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டைக்காய், பட்டாணி, வெங்காயம், பேரிச்சம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம். மேலும் முருங்கை கீரை, பொன்னாங்கண்ணி கீரை, மணத்தக்காளிகீரை, மஞ்சள், சீரகம், துளசி, கசகசா, வெள்ளைப்பூண்டு, ஏலக்காய் ஆகியவற்றிலும் புற்று நோயைத் தடுக்கின்ற தோதிப் பொருட்கள் அடங்கியுள்ளன. ஆகவே இவைகளை அடிக்கடி நமது உணவுகளில் தவறாமல் பயன்படுத்துவது நல்லது.



*தெய்வீக மூலிகை வைத்தியர்கள்*

தலைமை முகவரி : **Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்**

P.B. NO. 30, No. 3, திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் DT 635601 ✆:04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-6424285, 6427638.

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை 10.00-1.00 P.M. மாலை 5.00-7.00 P.M.

**குறிப்பு :** சென்னை, வேலூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**புத்தகம் :** டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய "எளிய முறையில் சிலர் அறிந்தும் தெய்வீக மூலிகைகள்" என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ. 70/- ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அரிய உண்மைகள் அடங்கிய "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ. 60/- தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7& 8 ந் தேதி – மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை "The South Indian Concerns Ltd." 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

9 ந் தேதி – பெங்களூர் : காலை 11 to 1 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374

18 & 19-ந் தேதி–புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை, South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆:5717126,5723651



# வேத வித்தகர் பெற்ற விருது!

நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னர் பஞ்சாபில் சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்த கங்கேஸ்வரானந்த். சின்ன அம்மை நோயின் தாக்கத்தால் தமது ஐந்தாவது வயதில் கண் பார்வையை இழந்து விடுகிறார். வேதங்கள் முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் அப்பொழுதிருந்தே எழ செவி வழி பாடங்களாக கற்றுக் கொள்கிறார். இருபத்திநான்கு வயதுக்குள் நன்கு தேர்ச்சி பெற்று தாம் உணர்ந்தவற்றைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதில் தன் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்தார். ஸ்வாமி குரு கங்கேஸ்வரானந்த்ஜி என அனைவராலும் அழைக்கப்பட்டு உலகின் பல நாடுகளிலும் சென்று சொற்பொழிவுகள் ஆற்றியுள்ள அவர், தனது நூற்றிப் பதினோராவது வயதில் மஹா சமாதி அடைந்தார்.

அன்னாரது நினைவைப் போற்றும் விதமாக 'ஸ்வாமி குரு கங்கேஸ்வரானந்த வேத ரத்னா புரஸ்கார்' எனும் பெயரில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தேசமெங்கிலும் உள்ள சமஸ்கிருத வேத வித்தகர்களின் தகுதி, சேவைக்கேற்ப விருதுகள் வழங்கி சிறப்புச் செய்து வருகின்றது பெங்களூர், பாரதிய வித்யாபவன் அமைப்பு.

கும்பகோணம், மேலக்காவேரியில் வசித்து வரும் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களுக்கு 1999ஆம் ஆண்டிற்கான 'குரு கங்கேஸ்வரானந்த் வேத ரத்னா புரஸ்கார்' தாமிரப் பத்திர விருதும், ஒரு லட்ச ரூபாய் வெகுமதியும் கிடைத்துள்ளன.

வேத பண்டிதக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவர், 1964 முதல் கும்பகோணம், வேத பாஷ்யக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருகின்றார். இந்தியாவின் பல முக்கிய நகரங்களிலும் இராமாயணம், மகாபாரதம், தேவி பாகவதம், ஸ்கந்தம் பற்றிய உபன்யாசங்களும் மற்றும் சௌந்தர்யலஹரி, உபநிஷத் ஆதி சங்கரரின் தத்துவங்கள் குறித்தும் உரை நிகழ்த்தியுள்ளார்.

''எனக்கு அப்போது வயது 24 இருக்கும். 1951ல் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் கும்பகோணம் விஜயம் செய்திருந்தார். நான் வேதம் படித்துவிட்டு ஆதி சங்கரரின் தத்துவங்கள் பயின்று கொண்டிருந்த நாட்கள். அன்று குடந்தை, சங்கர மடத்தில் அத்வைத் சபா ஆண்டு விழா நடந்து கொண்டிருந்தது. அத்தனைப் பெரும் கூட்டத்தில் மஹாப் பெரியவாள் முன்னிலையில் அப்பொழுது எனக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன். ஆதிசங்கரரின் தத்துவங்கள் பற்றி சமஸ்கிருதத்தில் பதினைந்து நிமிடங்கள் பேசினேன். என் பேச்சு முடிந்தவுடன் மஹா ஸ்வாமிகள் என் குருநாதரை அழைத்தார்.


''அந்தப் பையன் பேசியதை அப்படியே தமிழில் பேசச் சொல்லு!'' என அருளாணை இட்டார். என் குருநாதர் ஒரு நிமிடம் திகைத்துப் போய் விட்டார். ஏனெனில், சமஸ்கிருதத்தில் பேசிய தத்துவங்களைத் தவறின்றி மிகச் சரியாக தமிழில் பேசுவது சிரமம். அதற்குப் பெரும் புலமை வேண்டும். என் குருநாதரின் தயக்கத்தை உணர்ந்து கொண்ட ஸ்வாமிகள், "தமிழ்ல அப்படியே பேசச் சொல்லு. நான் சொல்றேன். அவனாலப் பேச முடியும்!" என்று கொஞ்சம் குரல் உயர்த்திக் கூறினார். அந்தச் சொற்கள் ஒரு அசரீரி வாக்கு போல என் செவிக்குள் பாய்ந்தது. எப்படித்தான் எனக்குள் அந்த உணர்வு வந்ததோ தெரியவில்லை. ஆதி சங்கரரின் தத்துவங்களை, அர்த்தம் மாறாமல் தமிழில் பேசி முடித்தபோது எனக்கே வியப்புத் தாங்கவில்லை'' என்கிறார் எழுபத்தைந்து வயதான எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள்.

**- ஸ்ரீ ரங்கம் திருநாவுக்கரசு**




உங்கள்
இல்லம்
ஒளி வீசப்
போகிறது.

இந்த இதழுடன்
அழகு
கொஞ்சும்



காமாட்சி
விளக்கு
அன்பளிப்பு.

இலவச இணைப்புகள்

காமாட்சியம்மன்
வண்ணப் படம்
திருவிளக்கு போற்றி
காமாட்சி போற்றி
கையடக்கப் புத்தகம்

தற்போது விற்பனையில்



"இவ்வளவு பெரிய 'ஹாட்-பேக்' என்னத்துக்கு எடுத்துக்கிட்டுப் போறீங்க?"

"அறிக்கைகளைக் கொண்டு போகத்தான். விவாதங்கள் எல்லாம் ரொம்ப சூடா இருக்கணும்னு தலைவர் சொல்லியிருக்காரே!"

கற்பனை : ஆதர்ஷ்
சித்திரம் : சேகர்



"ஏண்டி விமலா, உன் கணவர் பயந்து ஒளிஞ்சுக்கிட்டிருக்கார்...?"

"கோட்டை வாசல்ல இருக்கிற பீரங்கியைக் கண்டா பயமாயிருக்காம்!"



"தோற்றுப் போன மகளிர் அணி தலைவி மெகா சீரியல்ல நடிக்கறாங்களாமே!"

"அடுத்த தேர்தல்வரை மக்கள் பார்வையிலே அடிக்கடி படற மாதிரி இருக்கச் சொல்லி தலைமைக் கழகத்துல உத்தரவாம்."






"நீங்க ரொம்ப முன்னெச்சரிக்கைக்காரரா இருக்கலாம். அதுக்காக கவுன்சில் கூட்டத்துக்குப் போகும் போதெல்லாம், டாக்டர் நர்ஸைக் கூடவே கூட்டிக்கிட்டு வர்றது கொஞ்சம்கூட நல்லாயில்லே."

"அமைச்சர் என்ன தகராறு பண்றார்?"

"அவர் காருக்கு $3 x 4 \sqrt{(XxY)^2}$ அப்படிங்கிற நம்பர்தான் ராசியானதாம். நியூ நம்பர் மாத்தித் தரச் சொல்றார்."






## வட்டமேஜை

✉ விளை நிலங்களையெல்லாம், விஷ நிலங்களாக்கிவிட்டு, ஆட்களில்லா ஊரில் யாருக்காக 'சாகுபடி' செய்யப் போகிறார்கள்? மக்கள் சாகாதபடி முதலில் அரசு பாதுகாக்கட்டும். விஸ்கோஸ் விபரீதம் விழிப்பை ஏற்படுத்தட்டும்!

**திருவானைக்காவல், எஸ்.கௌரிலக்ஷ்மி**

✉ அம்மாக்கிட்டே பிடிச்சது அவங்களுக்கு எது வேண்டுமானாலும் இருக்கட்டும்! ஆனால் அந்த ஐந்து டீனேஜ் பெண்களுடைய அசத்தலான தோற்றமும் அட்டகாசமான புன்னகையும் எனக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சுப் போச்சு!

**பாஸ்டின் நகர், பி. காந்தி**

✉ "ம.தி.மு.க. என்ன செய்யப் போகிறது?" என்ற கேள்விக்கான பதில் வாய்விட்டுச் சிரிக்க வைத்தது.

**திருச்சி, முருகேசன்**

✉ விருந்து பற்றிய கட்டுரையில் அதில் கலந்து கொள்ளாத ராமதாஸ் படத்தை மறந்து வெளியிட்டு விட்டது ஏன்? ஒரு வேளை, விருந்தில் நீங்களும் கலந்து கொண்டு உண்ட மயக்கமா?

**சிதம்பரம், ஸ்ரீ வித்யா காளிதாஸ்**

✉ தேவாரத்தின் காதோர மீசையை வருடி, சவால் விடும் சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றிய 'அதிரடி' கார்ட்டூன் வெகுவாக ரசிக்க வைத்தது.

**போடி, பாலசுப்ரமணியன்**

# விருந்து மயக்கமா?

✉ 'ரிமோட்' பகுதியில், 'எல்லா முட்டாள்தனங்களுக்கும் வறுமையே மூலம்' என்று கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ள இயலாது. எல்லா முட்டாள்தனங்களுக்கும் கல்வி அறிவின்மையே, மூலம்' என்று வேண்டுமானால் கூறலாம்.

**திருப்பரங்குன்றம், டி.கே.சுப்பிரமணியன்**

✉ ரிமோட் பகுதியில் அமிதாப் பற்றி தகவல் தெரிவித்தவாறு அவர் இடது கையால் எழுதும் பழக்க உள்ளவரல்ல. 'கே.பி.சி.' நிகழ்ச்சியில் செக்கில் எவ்வளவு வேகமாக வலது கையால் கையொப்பமிடுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

**சேலம், ச. ஸ்ரீதரராவ்**

✉ 'எனக்குள் மட்டும்' பொன்னியின் செல்வன் எழுதிய கவிதை அருமை. நேர்த்தியான சுகம் கிடைத்தது.

**சேத்துப்பட்டு, இராம. பார்த்திபன்**

✉ 'நில், கவனி, வெற்றிகொள்' நிகழ்ச்சியில் தண்ணீர் சம்பந்தமான என் கேள்விக்கு டாக்டரும், மல்லிகாவும் பதில் தந்தார்கள். கேள்வி கேட்ட என் பெயர் விடுபட்டு போயுள்ளது.

**ஈரோடு, டி.சௌந்தரராஜன்**

✉ 'விஸ்கோஸ் விஷ விவசாயம்' இதில் கட்டுரையைக் கண்டோம். இன்னமும் ஐந்து ஆண்டுகளில் காலியாகப் போகும் கிராமங்கள் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். சின்ன திருத்தம். இன்னும் ஓராண்டுக்குள்ளேயே அந்த விபரீதம் நடக்கும்... மரக்கூழ் அட்டைத் தயாரிப்பில் வெளிவரும் ஒரு வித கருந்திரவம் பல ரசாயனப் பொருட்களின் நச்சுக் கலவை. இதை மூலப் பொருளாய்ப் பயன்படுத்தி 'லிக்னோ சல்பேட்' என்னும், சிமெண்ட் போன்ற பவுடரைத் தயாரித்து உபரியாகப் பல கோடி இலாபம் பார்த்து வருகிறார்கள். ஓசைப்படாமல், ஆலை வளாகத்திலேயே இந்த ஆலை ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த ஆலையிலிருந்து வெளியேறும் ஆலகால விஷத்தை விடக் கொடிய கழிவுப் பொருட்கள், பூமிக்கடியில் மறைவாய் புதைக்கப்பட்ட குழாய்கள் மூலம் ஆற்றில் விடப்படுகின்றன. சில ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு என்னும் போர்வையில் பல நூறு கிராமங்களையே நச்சுக்காடாய் மாற்றிச் சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**கோவை-1, மோகன்ராஜ்**



# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel : 237 6129.

E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com

## ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

| | | |
|---|---|---|
| ● காலை சிற்றுண்டி (150 பேருக்கு) | ரூ. | 1,000/- |
| ● மதிய உணவு | ரூ. | 2,000/- |
| ● இரவு சிற்றுண்டி | ரூ. | 1,000/- |
| ● மாலை சிற்றுண்டி | ரூ. | 1,000/- |
| ● ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை | ரூ. | 1,000/- |
| ● ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு) | ரூ. | 3,000/- |
| ● ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி) | ரூ. | 12,000/- |
| ● குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு | ரூ. | 2,00,000/- |

## -: விவேகானந்தர் தேசீய இயக்கம் :-



ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசீய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி, மத நல்லிணக்கம், மனித நேயம், சமய சமரசம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் 504 கிராமங்களில் சுமார் 17,500 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியூஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.

| | | |
|---|---|---|
| ஒரு மையத்தின் (கிராமத்தின்) ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு (பௌர்ணமி அன்று சிறப்பு விருந்து உட்பட) | ரூ. | 1,500/– |
| ஒரு மையத்தின் ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகை (12 மாதம் பௌர்ணமி சிறப்பு விருந்து உட்பட) | ரூ. | 18,000/– |

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

# விமானம் பாம், ரசகுல்லா!

ஆபிஸ் வேலையாகக் கோல்கத்தா சென்றிருந்த நான் சென்னைக்குத் திரும்பும் உற்சாகத்தில் அன்று மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு இருந்தேன். ரயில் கிளம்ப இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறதே, என்ன செய்யலாம் என்று யோசித்த அந்த வேளையில்தான் என் ஜாதகத்தில் கோளாறு தொடங்கியிருக்க வேண்டும்.

'கல்கத்தா வரைக்கும் போறீங்க. வழக்கமா வரமாதிரி கைய வீசிட்டு வராம, ஒரு ரச குல்லாவாவது வாங்கிட்டு வாங்க.'

மனைவி சொன்னது ஞாபகத்துக்கு வந்து அந்த சமயத்தில் என்னை உசுப்பிவிட்டது. டெஸ்பாட்ச் கணேசனிடம் என் ஆசையை அதற்கேயுரிய நாணத்துடன் வெளியிட்டேன். கணேசன் என்னோடு சென்னையில் வேலை பார்த்தவன்.

''குண்டு குண்டா ரசகுல்லாவோட கன்'னா வந்து நிக்கறேன் பாரு'' என்றான்.

'அரை கிலோ ஸ்வீட் டப்பா அளவுக்கு வாங்கிக் கொண்டு வரப் போகிறான் என்று புத்திசாலித்தனமாக அனுமானித்து அதற்கான இடத்தை என் சூட்கேசில் ஒதுக்கீடு பண்ணி என் பேக்கிங்கை முடித்துவிட்டு ரசகுல்லாவுக்காக வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தேன்.

முதலில் கையை வீசிக் கொண்டு ரூமுக்குள் நுழைந்த கணேசனைப் பார்த்து, "கணேசா, ரசகுல்லா என்ன ஆச்..." நான் முடிப்பதற்குள் அவனைத் தொடர்ந்து ஒரு சிறுவன் வந்தான். அவன் கையில் ஒரு பெரிய சட்டியை உறி மாதிரி ஒரு கயிற்றில் கட்டித் தூக்கிக் கொண்டு வந்தான்.

"இதோ வாக, நீ கேட்ட ஒரிஜினல் கோல்கத்தா ரசகுல்லா, குண்டு குண்டா நூறு ஐட்டம் சட்டி நிறைய ஜீராவுல ஊறிக்கிட்டே இருக்கு. ரொம்ப சீப்பா முடிச்சிட்டேன். வெறும் முந்நூறு ரூபாய்தான்."

'அடப்பாவி இதை எப்படி நான் எடுத்துக் கொண்டு போவது?' உன்னை யார் முந்திரிக் கொட்டை மாதிரி முந்நூறு ரூபாய்க்கு வாங்கச் சொன்னது?' இதெல்லாம் என் மனசுக்குள்ளேயே புதைந்துவிட்ட கேள்விகள்.



''ஏன் கவலைப் படற? இங்கேருந்து ஸ்டேஷனுக்கு டாக்சில போகப் போற. அதுவும் தனியாளா. சீட்டுல உன் பக்கத்துலேயே வச்சிப் பிடிச்சிக்கலாம். அங்கேருந்து ட்ரெயின்ல ஏசி டூ-டயர். சட்டியைக் கீழ வச்சி இந்த உறிச் கயிறை சீட்டுக்குக் கீழே இருக்கற கம்பில கட்டிட்டேன்னா அதுபாட்டுக்கு சமத்தா உன் கூடவே மெட்ராஸ் வரப் போகுது. நீ நிஜமாவே கோல்கத்தா ரசகுல்லா சாப்பிடணும்னா இந்த மாதிரி உறிச்சட்டில வாங்கித்தான் சாப்பிடணும் தெரியுமா? அப்பப்பா என்ன டேஸ்ட். என்ன டேஸ்ட். அது மட்டுமில்லை இவ்வளவு ஸ்வீட் வந்துருக்குன்னா கூடவே நல்ல செய்தியும் வரும் பாரு.''

வந்தது. கணேசன் அறையைவிட்டுப் போன அரை மணி

நேரத்துக்குள் வந்தது. ஆபீசிலிருந்து போன் செய்து அன்றைய ஹௌரா மெயில் ரத்து செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். 'பேஷ் - கிரகச்சாரம் ஆரம்பம்' என்று சொல்லிக் கொண்டேன். ஃப்ளைட்டில் சென்னை



செல்ல விசேஷ அனுமதி கொடுத்தார்கள். என்னை உடனே ஏர்போர்ட்டுக்குக் கிளம்பி வரச் சொன்னார்கள். 'ஃப்ளைட்டில் பயணமா?' என்று மனம் உற்சாகக்குதி போடத் தொடங்கியது. ஆனால் ரசகுல்லா இருந்த உறிச் சட்டியைப் பார்த்ததும் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. 'அட ராமா இதை என்ன செய்வது? சரி, ஆனது ஆகட்டும்' என்று சட்டியை ஒரு கையில் தூக்கிக் கொண்டு கிளம்பினேன்.

**வெ**ளியில் என்னைப் பார்த்த ரூம் பாய், ரிசப்ஷனிஸ்ட், டாக்சி டிரைவர் எல்லோரும் 'சாப், ரசகுல்லா...' என்று சொல்லி ஏகத்தாளமாகச் சிரித்தார்கள். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு ஒரு வழியாக விமான நிலையத்தை அடைந்தேன்.

அங்கே கோட்டும் சூட்டும் அணிந்த பலர் ஒரு கையில் செல்போனைப் பிடித்து ஸ்டாக் மார்க்கெட் பற்றி அளவளாவிக் கொண்டும், மறு கையில் ரசகுல்லா - உறிச் சட்டியை வைத்துக் கொண்டும் இருந்தார்கள். 'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி பாதுகாப்பு சோதனையை முடித்துக் கொண்டு டிபார்ச்சர் லௌஞ்சிற்குப் போன போதுதான் என் பாதுகாப்புக்கு முதல் சோதனை ஏற்பட்டது! சோதனையாக சென்னை ஃப்ளைட்டில் செல்லும் யாருடைய கையிலும் உறிச்சட்டியில்லை.

விமானத்தில் ஏற அழைப்பு வந்தபோது நடுங்கிக் கொண்டே போனேன்.

சட்டியைக் கையில் வைத்துக் கொண்டு திருதிருவென்று முழித்துக் கொண்டிருந்த என் மேல் பரிதாபப்பட்ட ஏர் ஹோஸ்டஸ் 'மே ஐ ஹெல்ப் யூ?' என்று கேட்டாள். 'நோ தேங்க்ஸ்' என்று அவளிடம் அசடு வழிந்தேன்.

சீட்டுக்கு மேல் இருக்கும் லக்கேஜ் ரேக்கில் வைக்கலாம் என்று அதைத் திறந்து பார்த்தேன். அதில் இடம் இல்லை. சட்டியைத் தூக்கிக் கொண்டு இன்னும் இரண்டு வரிசை தள்ளிப் போய் அங்கே சீட்டின் மேல் காலியாகி இருந்த லக்கேஜ் ரேக்கில் உறிச் சட்டியை வைத்து விட்டு சத்தம் போடாமல் என் சீட்டுக்கு வந்து உட்கார்ந்து கொண்டேன்.

நொடிக்கு ஒரு முறை திரும்பி சட்டியைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். யார் யாரோ வந்து அதே ரேக்கில் இன்னும் என்னென்னவோ வைத்தார்கள். கடைசி வரை ரசகுல்லா இருந்த லக்கேஜ் ரேக்கின் கதவு திறந்தே இருந்தது. விமானம் மெதுவாக நகரத் தொடங்கியதும் ஒரு ஏர் ஹோஸ்டஸ் வந்து 'பட்'டென்று லக்கேஜ் ரேக்கின் கதவை

**வி.ஆர்.**

அறைந்து சாத்தினாள். அந்தச் சப்தத்தோடு ஒரு மண் சட்டி உடைந்த சப்தத்தையும் கேட்டதாக எனக்கு ஒரு பிரமை. சே, சே! அப்படியெல்லாம் இருக்காது என்று மனத்தைத் தேற்றிக் கொண்டேன். மனம் தேறவில்லை. 'பிள்ளையாரப்பா! இந்த நூறு ரசகுல்லாவும் பத்திரமாக மெட்ராஸ் போய்ச் சேர்ந்தால்...' என்ன வேண்டுதல் என்று நான் யோசிப்பதற்குள் விமானம் வேகம் எடுத்து ரன் வேயில் ஓட ஆரம்பித்தது. விமானம் உயரே கிளம்பப் போவதால், டேக் ஆஃப் செய்யும் சமயத்தில் எல்லோரும், பணிப் பெண்கள் உள்பட, தத்தம் இருக்கைகளில் அமர்ந்து சீட் பெல்ட் அணிந்து கொள்ள வேண்டும் என்று விமானி அறிவித்தார்.

''ஹலோ எக்ஸ்கியூஸ் மி... ஹலோ ஹோஸ்டஸ்... ஹெல்ப்... ப்ளீஸ்... அர்ஜெண்ட்... வெரி அர்ஜெண்ட்...'' என்று பயங்கர சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். பளபளவென்று கோட்டும் சூட்டும் அதைவிடப் பளபளவென்று வழுக்கைத் தலையுமாக இருந்த ஒருவர்தான் கத்திக் கொண்டிருந்தார். முதலில் ஒரு மென்சிரிப்புடன் அவரை அலட்சியப் படுத்தினேன். ஆனால் பிறகுதான் பகீர் என்று அந்த உண்மை. உறைத்தது. அவர் உட்கார்ந்திருந்தது ரசகுல்லா - உறிச்சட்டி வைத்திருந்த லக்கேஜ் ரேக்கிற்கு நேர் கீழே!

''ஹலோ ப்ளீஸ் இட் இஸ் வெரி அர்ஜெண்ட்.. ப்ளீஸ் ஹரி அப்.. ஹலோ... சம்திங் இஸ் லீக்கிங்... ப்ளேனில் இருக்கும் இன்ஜின் ஆயில் ஒழுகுகிறது. சீக்கிரம் காப்பாற்றுங்கள் ஓடி வாருங்கள்.''

நடுங்கியபடி திரும்பிப் பார்த்தேன். மேலிருந்து ஒரு திரவம் சொட்டு சொட்டாகக் குறிபார்த்து அவர் வழுக்கைத் தலையில் சொட்டிக் கொண்டிருந்தது. ஐயையோ! அந்த ஹோஸ்டஸ் 'படார்' என்று கதவை அறைந்து சாத்தியபோது சட்டி உடைந்திருக்க வேண்டும். தன் மேல் விழுந்த திரவத்தை அவர் ருசித்துப் பார்த்தால் அது விமானத்தின் இன்ஜின் ஆயில் இல்லை. கோல்கத்தா ரசகுல்லா-ஜீரா என்று அவர் கண்டுபிடித்திருப்பார்.

அவருடைய அபயக்குரலுக்கு யாரும் செவிமடுக்கவில்லை. அவருக்கு அடுத்த சீட்டில், உட்கார்ந்தவர் ஒரே ஒரு நொடி, தாம் படித்துக் கொண்டிருந்த பேப்பரில் இருந்து தலையை நிமிர்த்தினார். பின் ஏதோ விநோத ஜந்துவைப் பார்ப்பது போல



அவரைப் பார்த்துவிட்டு மீண்டும் தன் வேலையில் மூழ்கினார். இப்போது என்ன செய்வது? விமானம் முழுதாக மேலே ஏறிப் பறக்கும் வரையில் யாரும் அவர்கள் இடத்தைவிட்டு எழுந்திருக்க மாட்டார்கள். அவர் கத்துவதைப் பார்க்க பரிதாபமாக இருந்தது உண்மைதான். ஆனால் என்ன செய்ய முடியும்? அவருடைய ஜாதகத்தில் உள்ள கிரகக் கோளாறு. தனக்கு உதவி செய்ய யாரும் வரமாட்டார்கள் என்ற விரக்தியான உண்மை அவருக்குத் தெரிந்தவுடன் தாமே சுயபாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கினார். கையில் கிடைத்த ஒரு புத்தகத்தைத் தலைக்கு மேல் குடை போல் பிடித்துக் கொண்டார்.

அப்போது பார்த்து ஜீரா அபிஷேகத்தின் அடுத்த கட்டம் அரங்கேறத் தொடங்கியது. ஒவ்வொரு சொட்டாகச் சொட்டிக் கொண்டிருந்த ஜீரா திடீரென்று குழாயைத் திறந்து விட்டதுபோல் ஒரு வேகத்துடன் சொட்ட - இல்லை கொட்ட ஆரம்பித்தது. அவர் குடை போல் பிடித்திருந்த புத்தகத்தில் பட்டு, ஜீரா நாலாபுறமும் சிதறி அக்கம் பக்கம் உட்கார்ந்தவர்களைப் பதம்பார்க்க ஆரம்பித்தது. முதலில் வழுக்கைத் தலையர் 'உதவி உதவி' என்று அலறியபோது, அவரை ஏதோ அடுத்த கிரகத்து ஆள் போல் பார்த்த அவரது பக்கத்துச் சீட்காரர், இப்போது தமது முகத்திலும், சட்டையிலும் ஜீரா தெறித்துக் கோலம் போட்டபோது 'காச் மூச்' என்று கத்தத் தொடங்கினார். அவருக்கு முன் சீட்டில், பின் சீட்டில் இருந்தவர்களும் வழுக்கைத் தலையரை நோக்கிக் கத்த ஆரம்பித்தார்கள்.

"யோவ், என்னய்யா என்னமோ என் தலையிலேந்து பீச்சிக்கிட்டு அடிக்கற மாதிரி கத்தறீங்க? மேலேருந்து கொட்டுது. என் தலையில படாம தடுத்துக்கிட்டு இருக்கேன். அது உங்க மேல பட்டா நான் என்ன பண்றது?"

நல்ல வேளை அவர் இப்போது தமிழில் பேசியதால் பக்கத்தில் கத்தியவர்களுக்குப் புரியவில்லை. எனக்கு மட்டும் புரிந்து அந்த விரக்தியிலும் சிரிப்பு வந்தது. அவரவர்கள் தங்கள் பாதுகாப்புக்காகப் பேப்பர் புத்தகம் இப்படி ஏதாவது எடுத்து தலைக்கு மேல், பக்கவாட்டில் என்று பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் கூத்தைப் பார்த்துக் கொண்டிருந்த என் பக்கத்து சீட்காரர் தம் புலமையை வெளிப்படுத்தினார்.

"மழை கூட பெய்யலையே! ஏன் இப்படி பிளேன் ஒழுகுது? பிளேன்ல பெட்ரோல் டேங்க் இந்தப் பக்கம்தான் இருக்கும். பெட்ரோல்தான் லீக்காகுதுன்னு நினைக்கறேன். இந்த ஏர்லைன்ஸ் பிளேன்களே இப்படித்தான். சரியா மெயின்டெனன்ஸ் பண்றதே கிடையாது எல்லாத்துலயும் ஊழல் வந்தாச்சு. இனிமே எப்படி நாடு உருப்படும்?"

தட்பவெப்பம், பொறியியல், பெட்ரோல் என்று ஆரம்பித்து அரசியலில் முடித்தார். இநதக் களேபரம் நடந்து கொண்டிருந்த போதே விமானம் நன்றாக மேலே ஏறி, பறக்கும் உயரத்தை அடைந்தது. அதன் பின் இரண்டு பணிப் பெண்கள் ஓடி வந்தார்கள். சொட்டும் திரவத்தால் 'பாதிக்கப்பட்டவர்களுக்காக டிஷ்யூ பேப்பர் தரப்பட்டது. கொஞ்ச நேரத்தில் ஃப்ளைட் இன்ஜினியர் ஓடி வந்தார். பைலட்டும் விமானத்தை ஆட்டோ பைலட்டில் போட்டுவிட்டு அந்த இடத்துக்கு வந்தார்.

இருவரும் அந்த இடத்தைக் கவனமாக ஆராய்ந்தார்கள். அவர்கள் இங்கிலீஷில் வேக வேகமாகப் பேசிக் கொண்டிருந்தது என் காதில் முழுதாக விழவில்லை. ஆனால் நடுநடுவே 'ஆயில் லீக்' 'வெரி ரிஸ்கி' 'பாம்' 'ஹை-ஜாக்' என்று சொன்னது மட்டும் காதில் தெளிவாக விழுந்தது. உள்ளே உடைந்த நிலையில் இருக்கும் அந்த உறிச் சட்டி இன்னும் எப்படியெல்லாம் இவர்களை ஆட்டி வைக்கப் போகிறதோ என்று பயந்தபடி உட்கார்ந்திருந்தேன்.

'நீங்கள் பயப்படும்படியாக ஆயில் லீக், பாம் அதெல்லாம் ஒன்றும் கிடையாது. இமே ஒழுகியது, நயம் கோல்கத்தா ரசகுல்லா ஜீராதான்' என்று சொல்ல ஆசைதான். ஆனால் உடனே நான்தான் இந்தக் களேபரத் துக்குக் காரணம் என்று கண்டுபிடித்துவிட்டால்... அந்த வழுக்கைத் தலையர் என்னைக் கொன்று அதே ஜீராவில் ஊறப் போட்டிருப்பார். பைலட்டும் அவரது சகாக்களும் ஏதோ அவசர ஆலோசனை நடத்தினார்கள்.

"விமான என்ஜினில் எதிர்பாராத விதமாகக் கோளாறு ஏற்பட்டுவிட்டதால் இப்போது விமானத்தை ஹைதராபாத்துக்குக் கொண்டு செல்கிறோம். யாரும் பயப்பட வேண்டாம். உங்கள் தலைக்கு மேல் இருக்கும் இடத்தில் ஆக்சிஜன் மாஸ்க் இருக்கிறது. காற்றழுத்தம் குறைந்தாலும் ஆபத்தில்லை. அதுபோக ஒரு வேளை கடல் அல்லது நீர் நிலையில் விழ நேர்ந்தால் இருக்கவே இருக்கிறது லைஃப் பெல்ட்."

அதுவரை பயப்படாத பயணிகளை 'யாரும் பயப்பட வேண்டாம்' என்று சொல்லி விஞ்ஞானபூர்வமாக பயமுறுத்தினார் விமானி.

ஹைதராபாத்தில் எங்களை அவசரம் அவசரமாக இறங்கச் சொன்னார்கள். பிறகு 'பாம் ஸ்குவாடை' வரவழைத்துப் பரிசோதனை செய்தார்கள் என்று கேள்விப் பட்டேன். 'யார் செய்த புண்ணியமோ, நல்ல வேளை, ஒரு பெரிய ஆபத்தில் இருந்து தப்பிவிட்டோம்' என்று அந்த வழுக்கைத் தலையர் என்னிடமே வந்து ஆதங்கப் பட்டார். தலையில் ஜீரா வழிந்த கறை இன்னும் தெளிவாகத் தெரிந்தது!

அலுத்து சலித்து மறுநாள் மதியம் சென்னையை அடைந்து வீட்டில் காலடி வைத்ததும் சகதர்மிணி கேட்ட முதல் கேள்வி இதுதான்.

"ரசகுல்லாவை மறந்திருப்பீங்களே?" ●

"அந்த அமைச்சர் சயின்டிஸ்ட் ஒருவரை உதவியாளரா வச்சுக்கிட்டிருக்காராமே! எதுக்கு?"

"விஞ்ஞானபூர்வமா ஊழல் செய்றதுக்காக இருக்கும்!"

- உ. ராஜாஜி



# காதல் வெட்டுக்கள்!

பெண்ணே!

உன்
பிறந்த நாள் ஒன்றில்
அருகில் கண்மூடி நின்ற
உன்
அம்மாவும் அறியாமல்
காந்திமதியம்மன் சன்னதியில்
நான்
கட்டிவிட்ட கடிகாரத்தை
கோவில் உண்டியலுக்கே
கொடுத்தாயாம்!

உன்னைப் பற்றிய
கவிதையை எழுதியதென்று
என்னிடம்
பிரியத்தோடு பறித்துப்போன
பேனா ஒன்றை
ஈரடுக்கு மேம்பாலத்திலிருந்து
இருப்புப் பாதைக்குக்
கொடுத்தாயாம்!

அடிக்கடி நானுன்னை
அணியச் சொல்லி
அடம்பிடிக்கும்
அந்த
சந்தன நிறத் தாவணியை
குளிக்கப் போகையில்
தாமிரபரணிக்குக் கொடுத்தாயாம்!

உன்னோடு வந்த
உறவினர்களை ஏமாற்றி
அவசர அவசரமாய்
ஆனிப் பொருட்காட்சியில்
வாங்கிக் கொடுத்த
வளையல்களை
உன் அண்ணன் மகளின்
பொம்மையின் கைகளில்
போடக் கொடுத்தாயாம்!

நான் கொடுத்ததையெல்லாம்
கொடையாக்கும்
வள்ளல் கண்மணியே!
நீயும் நானுமான
நினைவுகளை
நீ
யாரிடம் கொடுப்பாய்?

**நெல்லை ஜெயந்தா**



# மனசுல நிக்கணுமா?

திருவள்ளூர் என்.சி. ஸ்ரீதரன்

அன்றாட வாழ்க்கையில், பல தகவல்களை நினைவில் வைக்க வேண்டியிருக்கிறது. தொலைபேசி எண்கள், விலாசங்கள், எண்கள், குறிப்புகள், முக்கிய தேதிகள், விவரங்கள்... இப்படி நம்முடைய மூளையில் ஏற்றி, பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

படிக்கும் மாணவர்களாக இருந்தால் நிலைமை இன்னும் மோசம்! செய்யுள்கள், மேற்கோள்கள், சூத்திரங்கள், தேற்றங்கள், கோட்பாடுகள், விஞ்ஞானப் பெயர்கள்... என்று மனப்பாடம் செய்து நினைவுப் பெட்டிகளில் நிரந்தரமாக அடுக்கி வைக்க வேண்டியிருக்கிறது. பல சமயங்களில் மனப்பாடம் செய்வது நமது நினைவில் நிற்பதேயில்லை. அப்போதைக்குப் புரிந்தது போலிருக்கும். அப்புறம் சின்ன புகை மூட்டம் நேர்ந்து எல்லாமே அழிந்து போய் திணறலெடுக்கும்.

கலபமாக மனப்பாடம் செய்வது எப்படி? என்னென்ன செய்தால், மனப்பாடம் செய்தது அப்படியே பசுமையாக இருக்கும்?

எதையுமே புரிந்து வைத்துக்கொண்டு மனப்பாடம் செய்தால், நன்றாகப் பதியும். செய்யுளை அப்படியே மனப்பாடம் செய்வதை விட, அதன் பொருளைத் தெரிந்துகொண்டு மனப்பாடம் செய்யும்போது, சீக்கிரம் மண்டையில் ஏறும். எதையும் அப்படியே டப்பா உரு அடிக்கக்கூடாது.

புரியாத விஷயங்களைப் படிக்கும்போது, அதில் ஏதாவது ஒரு பகுதியாவது புரிகிறதா என்று பார்க்க வேண்டும். உதாரணமாக, கீழே குறிப்பிட்ட ஒரு எண்ணை நினைவில் வைக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

*5812151922226*

சில நிமிடம் இந்த எண்ணை நினைவில் வைத்துப் பாருங்கள். பிறகு இந்தப் பக்கத்தை மூடி வைத்து விட்டு, நினைவில் கொண்டு வர முடிகிறதா பாருங்கள். அநேகமாக கடினமாகத்தான் இருக்கும். ஏனென்றால் இந்த எண்களில் எந்த வித சுவாரசியமும் இல்லை. அர்த்தமும் இல்லை. ஆனால் அர்த்தமேயில்லாத இந்த எண்களுக்குள் இருக்கும் ஏதாவது ஒரு தொடர்போ அல்லது அர்த்தத்தையோ உங்களுக்குத் தெரியப்படுத்தினால், இதை எளிதாக உங்களால் நினைவில் வைக்க முடியும்.

முதல் எண் 5 உடன் 3-ஐக் கூட்டினால் 8 வருகிறது. எட்டுடன் நான்கைக் கூட்டினால் 12 வருகிறது. மீண்டும் 12உடன் 3ஐக் கூட்டினால் 15 வரும். 15 உடன் 4 ஐ கூட்டுங்கள் 19 வரும். இதுபோன்று அடுத்தடுத்து 3 ஐயும் நான்கையும் கூட்டிக் கொண்டே போனால் மேலே சொன்ன எண்ணை நன்றாக நினைவுக்குக் கொண்டு வரலாம். இந்த தொடர்பைப் புரிந்து கொண்டு நினைவில் வைத்துக் கொள்வதுதான் சாமர்த்தியம். இது போன்றுதான் நாம் படிக்கும் செய்யுள், சூத்திரங்கள் மற்றும் பல விஷயங்களை மனப்பாடம் செய்யும் முன் அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு குழந்தையின் பாடத்தில் 360ஐ விட 460 பெரியது என்று எழுத '460 > 360' என்று எழுத வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார் அக் குழந்தையின் தாயார். இதை நினைவில் வைத்துக் கொள்ள > என்ற குறியின் கூரான பகுதி எந்த எண்ணின் பக்கம் இருக்க வேண்டும் என்று குழந்தை நினைவில் வைக்க வேண்டும். இதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாத குழந்தை ஒற்றையா இரட்டையா என்று கேட்டு கூரான பகுதி 360ஐ நோக்கியா அல்லது 460ஐ நோக்கியா என்று முடிவு செய்து கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது. இதனால் அக்குழந்தை பலமுறை தவறான கணக்குப் போட்டு தன் தாயிடமிருந்து திட்டு வாங்கிக் கொண்டிருந்தது. ஒரு நிமிடத்தில் அந்தத் தாயார் அந்த > என்ற குறியின் அர்த்தத்தையும் அந்த நம்பர்களுக்குள் இருக்கும் தொடர்பையும் சொல்லிக் கொடுத்த பின்னர், அந்தக் குழந்தை இதை நன்றாகப் புரிந்து கொண்டு எளிதில் மனத்தில் வைத்துக் கொண்டது. குழந்தைகளுக்கு சில விஷயங்களை நினைவில் நிற்கா விட்டால் அதற்குக் காரணம் அது அந்தக் குழந்தைக்குப் புரியாததால் ஏற்படுவதா என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

**ம**னப்பாடம் செய்யும்போது அடுத்து கவனிக்க வேண்டியது, எவ்வளவு நேரம் மனப்பாடம் செய்ய வேண்டும் என்பதைத்தான். ஒரேயடியாக ஒரு நாளைக்கு இரண்டு மூன்று மணி நேரங்கள் மனப்பாடம் செய்வதைவிட தினமும் பதினைந்து அல்லது முப்பது நிமிடங்கள் மனப்பாடம் செய்வது நல்ல பலனைத் தரும் என்று மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். நமது முன்னோர்கள் வேதபாராயணம் செய்யும்போதும் இலக்கியங்களைக் கற்கும்போதும் இந்த அணுகுமுறையைத்தான் உபயோகித்தார்கள். திருக்குறள் அனைத்தையும் கற்க வேண்டுமா? தினமும் பதினைந்து நிமிடங்கள் ஒவ்வொரு குறளாக மனப்பாடம் செய்யுங்கள். அது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

ஒரு பாடத்தை மனப்பாடம்






செய்யும்போது அதைத் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டே இருப்பதைவிட, அதை மூடி வைத்துவிட்டு, படித்தது நினைவிலிருக்கிறதா என்று சொல்லிப்பார்ப்பது நல்ல பலனைத் தரும். படிக்கும் போதும், சொல்லிப் பார்க்கும் போதும் நாம் பேசும் சக்தியையும் கேட்கும் சக்தியையும் மட்டும்தான் உபயோகிக்கிறோம். ஆனால் இவற்றோடு நம்முடைய தசைகளின் சக்திகளையும் சேர்த்துப் பயன்படுத்தினால் நமது நினைவாற்றல் பெருகும். படிப்பதைச் சொல்லிப்பார்த்துவிட்டு, அதைப் புரிந்து கொண்டு எழுதியும் பார்க்கும்போது, நாம் நம்முடைய தசைகளின் சக்தியைப் பயன்படுத்துகிறோம். எனவேதான் ஒரு பாடத்தை எழுதிப்பார்க்கும்போது அது நமது நினைவில் பசுமையாக நிற்கிறது.

ஒரு பாடத்தை எந்த அளவிற்கு ஆழமாகவும் அதிகமாகவும் படிக்கிறோமோ அந்த அளவிற்கு அது நமது நினைவில் பதிகிறது. ஒரு பாடத்தைப் படிக்கும்போது, பலமுறை அதைப் படித்து நாம் வேறு வேலை ஏதும் இல்லாதபோது படித்ததை நினைவில் கொண்டு வந்து வைத்து மீண்டும் படித்துப் பார்த்தால், நாம் படித்தது நமது மனத்தில் பசுமையாக இருக்கும். நினைவுக்குக் கொண்டு வருவதும் மிகவும் எளிதாக இருக்கும்.

மனப்பாடம் செய்யும்போது நாம் கவனிக்க வேண்டிய மற்றொன்று, அந்தப் பாடத்தைப் பகுதியாகப் படிப்பதைவிட முழுமையாகப் படித்தால் நமது நினைவில் அது எளிதாகப் படியும். ஒரு செய்யுளைப் படிக்கும்போது, அந்தச் செய்யுளைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு பகுதியையும் முழுமையான ஒரு பகுதியாகப் பாவித்துப் படித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

மனப்பாடம் செய்யும்போது, நமக்கு அவசியமாக இருக்க வேண்டியது மனோதிடம். 'இதை என்னால் மனப்பாடம் செய்து நினைவில் கொள்ள முடியும்' என்று தைரியத்துடன் மனப்பாடம் செய்தால், கண்டிப்பாக பசுமையாகப் பதியும். ஒவ்வொரு நாளும் படுக்கப் போகும் முன் 'என்னுடைய நினைவாற்றல் தினமும் படிப்படியாக அதிகமாகிக் கொண்டே போகிறது' என்று பலமுறை சொல்லிவிட்டுப் படுக்கப் போங்கள். உங்களுடைய நினைவாற்றலின் மேல் உங்களுக்கே நம்பிக்கை ஏற்படும். நம்பிக்கை வையுங்கள். 'என்னுடைய ஞாபக மறதியைக் கொளுத்த வேண்டும்' என்று அதை நிந்தனை செய்யாதீர்கள்!

சில சமயங்களில் நாம் எந்தச் சூழ்நிலையில் ஒரு பாடத்தைப் படித்தோமோ, அதே சூழ்நிலையில் அது நமது நினைவுக்கு வரும். சில சமயங்களில் இந்த அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஓர் இடத்தில் ஏதோ ஒன்றை நினைத்திருப்பீர்கள். ஆனால் அது சட்டென்று மீண்டும் உங்களுடைய நினைவிற்கு வராது. நீங்கள் மீண்டும் அந்த இடத்திற்கே சென்று முயற்சி செய்தால் அது மீண்டும் உங்களுடைய நினைவுக்கு வரும்.

இதன் அடிப்படையில் தினமும் ஒரே இடத்தில் ஒரே டேபிளில் அமர்ந்து ஒழுங்காகப் படித்தால், முன்பு அதே இடத்தில் படித்தது நினைவில் நன்றாக வரும். உங்கள் குழந்தைகளுக்குப் படிப்பதற்கு என்று ஒரு இடம் ஒதுக்கியிருப்பதைப் போல படிப்பதற்கென்று ஓர் இடத்தை ஒதுக்கித் தாருங்கள். சிறிய இடமாக இருந்தாலும் பரவாயில்லை. இது உங்களுக்கு நல்ல பயனைத் தரும்.



மனைவி மதிய உணவு தயாரித்துக் கொண்டிருந்தாள். மாப்பிள்ளை வெளியூரில், மகள் கல்லூரிக்குப் போயிருந்தாள். நான் எட்டுமாதக் குழந்தை, என் பேத்தியை, மடியில் வைத்து வேடிக்கை காண்பித்தபடி விளையாடிக் கொண்டு வாசலில் அமர்ந்திருந்தேன்.

அப்போது, மிதி வண்டியில் வீதியில் சென்று கொண்டிருந்த அந்த இளைஞன் என்னைப் பார்த்த மாத்திரத்தில் வாசலுக்குச் சற்றுத் தள்ளி வண்டியை நிறுத்தி, ஸ்டேண்ட் போட்டான். மஞ்சள் சட்டையும், நீலநிற பேண்ட்டும் சற்றும் அதற்குப் பொருந்தாத சிவப்பு டையும் அணிந்திருந்தவன் என்னைப் பார்த்துச் சிரிக்கலாமா வேண்டாமா என்பதுபோல் ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு ஏதோ விலாசம் தேடுவதைப் போல் அக்கம் பக்கம் பார்த்தான். நிதானமாக சைக்கிள் கேரியரில் வைத்திருந்த பெரிய தோல்பையை எடுத்தான்.

அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே எனக்கு விளங்கிப் போனது, அவன் 'சேல்ஸ் ரெப்ரசண்டேடிவ்' என்பது. ஆள் கிடைக்காத அவனுக்கு நான் கண்ணில் பட்டிருக்கிறேன்.

எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. ஒரு நாள் கூட இந்த விற்பனையாளர்களின் தொல்லை ஓயவே மாட்டேன் என்கிறதே. வந்து கேட்கட்டும் அவன், கடுப்படித்து விரட்டுவோம் என்று முடிவு செய்தேன்.


என் முகக்குறிப்பை உணர்ந்தான் போலிருக்கிறது. என்னை ஒன்றும் கேட்கவில்லை. கனமான அந்தப் பையைத் தோளில் சுமந்தபடி, என் வீட்டை ஏற இறங்கப் பார்த்தான். அக்கம் பக்கத்து வீடுகளையும் நோட்டம் விட்டான்.

ஏதேனும் விசாரிக்கட்டும். ஒரு கை பார்த்துவிடுவது என்றிருந்தேன். ஏனோ அவன் என்னைப் பொருட்படுத்தவேயில்லை. வலது புறமாக இரண்டு மூன்று வீடுகள் தள்ளிச் சென்றான்.

உள்ளே சென்று விடலாமா? வெளியிலேயே இருப்போமா? குழம்பினேன். நான் கதவை மூடிவிட்டு உள்ளே சென்ற பின் இவன் அழைப்புமணியை விடாமல் அழுத்தினால் என்ன செய்வது? கோபம் கூடிவிடுமே என்று யோசித்தேன். கோடை வெப்பம்.. மின்விசிறி சுழன்றும் உள்ளே அனல் அடிக்கிறது என்றுதானே வெளியில் அமர்ந்திருக்கிறேன். இவர்கள் தொல்லை ஓயவில்லையே!

என்னை அவன் ஏதாவது கேட்டுத் தொலைத்திருந்தாலாவது 'வேண்டாம். போப்பா' என்று முடித்திருப்பேன். கேட்கவும் இல்லையே..? நாமாகக் கூப்பிட்டு எதுவும் வேண்டாம் என்று சொல்லிவிட

லாமா? அப்படி நான் கேட்டு.. அவன்... 'நான் ஒன்றும் உங்களைக் கேட்கவேயில்லையே' என்று கூறிவிட்டால்... அவமான மாகப் போய்விடுமே.



## புதுவை சந்திரஹரி

திரும்பி வந்து கொண்டிருந்தான் அவன். அந்த வீட்டில் ஒன்றும் விலை போகாத ஏமாற்றம் அவன் முகத்தில். ஏற் கெனவே களைத்து இருந்தவன் இப்போது கருகிப்போய் எண்ணெய் தடவிய உளுந்தா கக் காட்சியளித்தான். கைக்குட்டையால் அவன் முக வியர்வையை ஒற்றியெடுத்தும் கூட வியர்வை நெற்றியிலிருந்து, கன்னங் களின் வழியாக கொட்டிக் கொண்டிருந்தது.

என் பேத்தி அவனைப் பார்த்து, 'ஏய்..' என்று கை நீட்டி அழைக்க, தலை நிமிர்ந் தான். குழந்தையைப் பார்த்துச் சிரித்தான். அந்தக் களைப்பிலும் சற்று இதம் அவன் முகத்தில் மிளிர்ந்தது. நான் கண்டும் காணா ததுபோல் இருந்துவிட்டேன்.

பிறகு... அதையே சாக்காக வைத்து அவன் வந்து விட்டால்..? அவன் ஏனோ என்னை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. எதிர்வீட்டு அழைப்பு மணியை அடித்து உள்ளே நுழைந்தான்.

ஆய்ந்த கீரைக் காம்புகளை, வெளியே கொட்டுவதற்காக வந்த என் மனைவி "யார் வண்டிங்க அது?" என்று விசாரித்தாள்.

நான் பதில் கூறுமுன், ஏமாற்றத்தோடு எதிர்வீட்டிலிருந்து படியிறங்கி வெளியே வந்த அவனைப் பார்த்தவள், "ஓ...! இந்த ஆளுங்களா?... இத பாருங்க.. அவனை உள்ளே அழைச்சு ஏதாச்சும் வாங்கித் தொலைச்சு பணம் கொடுன்னு வந்து கேட்டீங் கன்னா எனக்குக் கெட்ட கோபம் வரும். ஆமா... டம்ளர் செட், நைட் லேம்ப், தட்டுங்க.. இன்னும்.. டீ கப்ன்னு வீடு நெறைய வாங்கிப் போட்டிருக்கீங்க.." எச்சரித்துவிட்டு உள்ளே போனாள்.

எனக்கு ஏற்கெனவே இருந்த எரிச்சலில் கோபம் தலைக்கேறியது.

'ஏண்டி... இப்ப என்ன நான் அவங்கிட்ட பேரம் பண்ணிக்கிட்டா இருக்கேன்? அறிவிருக்கா... வாயை மூடிக்கிட்டு உள்ளே போ'

- இரையலாம் என நினைத்தேன். விபரீதமாகக் கூடும். அடக்கிக் கொண்டேன்.

அந்த விற்பனைப் பிரதிநிதி இப்போது எதிர்வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் நுழைந் தான்.

கதவே திறக்கப்படவில்லையா? அல்லது கதவு துவாரத்து வழியாகவே பார்த்து விரட்டினார்களோ தெரியவில்லை... உடனேயே திரும்பினான்.

கனமான அந்தப் பெரிய பையை மீண்டும் சைக்கிள் கேரியரிலேயே வைத்து விட்டு ஒரு கையாலேயே கழுத்து டையை தளர்த்திக் கொண்டு, கொட்டிய வியர் வையை, கர்ச்சீப் எடுத்து துடைத்துக் கொண்டான்.

அவனைப் பார்க்க உண்மையிலேயே பாவமாக இருந்தது. பாவம்.. யார் பையனோ? எந்த ஊரோ? என்னென்ன பொறுப்புகள் உள்ளவனோ? சாப்பிட்டானோ இல் லையோ? அவனைப் பார்த்தால் நேற்றிரவு சாப்பிட்டிருப்பானோ என்பதுகூட

சந்தேகமாக இருந்தது.

கூப்பிட்டு, 'தண்ணி குடிக்கறியா' என்று கேட்போமா?

அதையே சாக்காக வைத்து, வியாபாரத்தை ஆரம்பித்து விட்டானென்றால்...

நான் வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

திரும்பிப் பார்த்தால் - அவனைக் காணோம்! வண்டியிருந்தது. எங்கே போனான். அக்கம் பக்கம் பார்த்தேன்.

பக்கத்து வீட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தான்.

ஐயோ... இவர்களும் ஆதரவு தரவில்லை போலிருக்கிறது.

அவனுக்கு என்ன சம்பளம் தந்துவிடப் போகிறார்கள்? ஒருமுறை ஒருவனிடம் கேட்டு அவன் கூறியது நினைவுக்கு வந்தது.



''புதிய அரசு வீராணம் நீரை விரைவில் சென்னைக்குக் கொண்டு வராவிட்டால் புரட்சி வெடிக்கும்னு எச்சரிக்கை செஞ்சிருக்காங்க!''

''யார்? எதிர்க்கட்சியினரா?''

''ஹூஹூம். பால்பண்ணை முதலாளிகள்!''

– புளியரை கணேசன்

''சம்பளம் ஆயிரம் ரூபா தான் ஸார்... அதிலேயே சாப்பிட்டு, ரூம் வாடகை கொடுத்து, வீட்டுக்கும் அனுப்பணுங்க... நான் திருநெல்வேலி. அப்பாக்கு உடம்பு சுகமில்லீங்க. அக்காவுக்கு இன்னும் கல்யாணம் ஆகலேங்க.. பொருள் விக்கறதிலே கமிஷன்தாங்க எங்களுக்கு. ஒரு மாசத்திலே குறைஞ்சது ஐந்நூறு விக்கணும். இல்லேன்னா சம்பளத்துலே கழிச்சுடுவாங்க. நெறைய வித்தாதாங்க ஏதாச்சும் அம்மா அப்பாவுக்கு அனுப்ப முடியும். நான் எம்.ஏ. இங்கிலீஷ்ங்க. வேற வேலை ஏதும் கிடைக்கலே...''

இவன் என்ன படித்தவனோ? திருமணமானவனோ... இல்லையோ. குழந்தை குட்டிக்காரனோ...எத்தனை அக்கா... தம்பி... தங்கைகளோ? என்னென்ன பிரச்னைகளோ?

இப்போது இடப்பக்கத்து வீட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தான்.

அடுத்து நான் ஒருவன்தான்... மாட்டிக் கொள்ளப் போகிறேன்.

வந்தவன் என்னையும் குழந்தையையும் பார்த்தான். என் பேத்தி மீண்டும், அவனைப் பார்த்துக் குதிக்கவே... அவன் மீண்டும் அதைப் பார்த்து புன்னகை செய்தான். வேதனை மண்டிய அவன் முகம் குழந்தையைப் பார்த்ததும் சிரிக்கக் கூடச் செய்தது!

அவன் கேரியரில் பையை வைத்தான். மிதிவண்டியின் ஸ்டாண்டை எடுத்தான். தள்ளிக் கொண்டு நகர ஆரம்பித்தான்.

என் மனம் உருகியது.

"தம்பி... இங்க வா'' - அழைத்தேன்.

''என்ன ஸார்?''

''வண்டிய ஸ்டேண்ட் போட்டுட்டு வாப்பா...''

வந்தான்.

''பையை எறக்கு. என்ன சேல்ஸ் பண்ணறே?''

அவன் முகத்தில் ஆச்சர்யம்.

''ஸார்... நைட் லேம்ப் ஸார்...''

''என்ன வெல?''

''எடுத்துக் காட்டறேன் பாருங்க ஸார். உங்களுக்குப் பிடிக்கும். கடையில இருநூத்து ஐம்பது ரூபா. நாங்க இருநூறுன்னு தர்றோம். ரெண்டு மூணு டிசைன்ஸ் இருக்கு ஸார்.. பாருங்க..''

எடுத்துக் காட்டினான்.

''இருக்கட்டும்பா... முதல்லே எடுத்ததே நல்லாத்தான் இருக்கு. ஒண்ணு கொடு.''

கொடுத்தான்.

''கொஞ்சம் குழந்தையைப் புடி. வர்றேன்.''

உள்ளே சென்று என் மனைவிக்குத் தெரியாமல் என் சேமிப்பிலிருந்து, பணம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தேன். நீர் பாட்டில் கொண்டு வந்து அவன் பருக நீரும் கொடுத்தேன். பேத்தியை அவனிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

என் பேத்தி என்ன புரிந்து கொண்டாளோ... தெரியவில்லை. என்னைப் பார்த்துச் சிரித்து, பிறகு, அவன் பக்கம் திரும்பி அவனையும் பார்த்துச் சிரித்து, கையை வேகமாக அசைத்து 'டா- டா' காண்பித்தாள்.

''தாங்க்யூ ஸார்'' என்று கும்பிட்ட அந்த இளைஞனின் கண்கள் கசிந்தன. ○

# அறிமுகம்!

ஜூலை 2ம் தேதி
முதல் 'ஆத்ரேயா'வின்
'ஸ்வாதி'

**ரெடிமேட் ரவிக்கைகள் பெட்டிகோட்ஸ் மற்றும்
நைட்டீஸ் தயாரிப்பாளர்கள் ஜூலை 2ம் தேதி முதல்
உங்களுக்காக பெருமையுடன் வழங்குகின்றார்கள்**

# 'ஸ்வாதி'

ரெடிமேட் ரவிக்கைகள் – பெட்டிகோட்ஸ்
'உங்கள் தோற்றத்தில் ஓர் அழகிய மாற்றம்
உடனடியாக
ஆத்ரேயா மற்றும்
ஸ்வாதி ரெடிமேட் ரவிக்கைகள்

| சைஸ் | ஆத்ரேயா விலை | ஸ்வாதி விலை |
|---|---|---|
| 30" | 90 | 70 |
| 32" | 95 | 70 |
| 34" | 105 | 70 |
| 36" | 110 | 75 |
| 38" | 110 | 75 |
| 40" | 115 | 75 |
| 42" | 115 | 75 |



**நைட்டீஸ்,
ரெடிமேட் ரவிக்கைகள்,
பெட்டிகோட்ஸ் –**

# ATHREYA ™

1. Jambulinga Street, (Entrance from Valluvar Kottam High Road), Nungambakkam,
Chennai - 600 034.
Phone: 822 6586 Fax No. 5360076. Tlx: 041-6753 RAJA IN . E.Mail: ols@md3.vsnl.net.in

ஆத்ரேயா ரெடிமேட் ரவிக்கைகள் கிடைக்கும் இடம்: EVE'S Park, 108, Bharathiyar St, Karaikal. Ph:20288
Ganesa Lakshmi Textiles - 146 - Long bazzar - Vellore

| *VISIT US AT www.athreyawoman.com* | **All major credit cards Accepted** |
|---|---|

Proprietrix : Mrs. Vasantha Rajagopalan

Sri Ragav

மஞ்சள் ஒளியைச் சிந்திக் கொண்டிருந்த அந்திக் கோவளம். துள்ளும் அலைகளின் அருகே ஓடிப் பிடித்தபடி ஒரு காதல் ஜோடி. கொஞ்சம் தள்ளி, அவர்களின் தனிமைக்கு அடையாளமாய் ஒரு பொலேரோ ஜீப். இங்கே 'சாக்லேட்' படத்தின் படப்பிடிப்பு என்று நம்பி வந்த நமக்கு ஏகாந்த ஏமாற்றம்! அதற்கான அறிகுறியே அங்கே இல்லை. இப்போது காதலனை முதுகில் உப்புமூட்டை ஏற்றிக் கொண்டு தத்தித் தத்தி நடந்து கொண்டிருந்தாள் அந்த நங்கை. அவர்களையே கேட்டு விடலாம் என்று அருகே நெருங்கியபோது "யோவ்... யாருய்யா அது... பீல்டுக்குள்ளே... கட்... கட்..." என்று அதீத டெசிபில்களில் அதிகார அதட்டல்! சப்தம் வந்த திக்கில் திரும்பியபோது, கேமிராவுடன் ஜீப்பில் ஒளிந்திருந்த 'சாக்லேட்' படத்தின் தயாரிப்பாளர் மாதேஷ்... இயக்குனர் வெங்கடேஷ். இன்னும் ஒன்றிரண்டு உதவி இயக்குனர்கள் நம்மை நோக்கி ஓடி வந்தனர்.

"என்ன சார்... சிலுவெட் ஷூட் பண்ற நேரத்துல குறுக்க வந்திட்டீங்க...! இன்னும் கொஞ்ச நேரம்தான் எபெக்ட் கிடைக்கும். இந்தப் பக்கம் வந்துடுங்க" என்று உரிமையோடு நம் கைகளைப் பிடித்து இழுத்துப் போய் ஜீப்பில் அமர வைத்தனர்.

இருளும், பகலும் கை குலுக்கிக் கொண்ட அந்த விசித்திர வெளிச்சத்தில் முகம் தெரியாத உருவங்களாய்க் காதல் ஜோடியின் ஓடிப்பிடித்தல் நீடித்தது.

"ஷாட் ஓகே, பேக் அப்!" என்று இயக்குனர் ரிலாக்ஸ் ஆனதும் கிழக்கு வானில் நீந்தியபடி பிறைநிலவு!

இன்னொரு முழு நிலவாக எதிர்ப்பட்டார் ஜெயா ரே. அறிமுகம் முடிந்த அடுத்த வினாடி, கைகளைக் குவித்து, நமக்கு குளிர்ச்சியாய் வணக்கம் சொன்னார்.


"பிரசாந்த்தை உப்பு மூட்டை தூக்கினீங்க போலிருக்கே?" உற்சாகமாய்த் தொடங்கியது உரையாடல்.

"எஸ்... குறைஞ்சது எழுபது கிலோ இருப்பார்னு நினைக்கிறேன்" – ஜெயா ரே!

"சார், இவங்க பிப்டி கேஜி தாஜ்மஹால்" என்று தலை துவட்டியபடி அங்கே வந்த பிரசாந்த் குறும்புடன் குறுக்கிட.... "தாங்க்யூ பிரசாந்த்" என்று கொங்கணி மொழியில் நன்றி கலந்த வெட்கத்தை வெளிப்படுத்தினார் அவந்திகா (இயற்பெயர்) அலயஸ் ஜெயா ரே.

"அம்மான்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும்... அதனால் அவங்க பெயரில் பாதியை எடுத்து குடும்பப் பெயரான 'ரே'யைச் சேர்த்து என்னை ஜெயா ரே ஆக்கியவர் மாதேஷ்" என்ற ஜெயா ரே படித்திருப்பது ஃபேஷன் டிசைனிங். "உலக அளவில் பெரிய டிசைனராக வர வேண்டும் என்பதுதான் என் லட்சியம். இந்தத் துறையில் விரைவான புகழ் கிடைக்க வேண்டுமானால், சினிமா நட்சத்திரங்களுக்கு டிசைன் செய்வதுதான் சரி என்று முடிவு செய்தேன். இதற்காக எங்கள் குடும்ப நண்பர்கள், மனிஷா கொய்ராலா, நானா படேகர் போன்றவர்களைச் சந்தித்து வாய்ப்புக் கேட்டேன். 'நீ சினிமாகாரர்களுக்கு உடைகள் டிசைன் செய்வதைவிட, சினிமாவிலேயே நடிக்கலாம்...' என்றார்கள். எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. 'உண்மையாகவா?' என்று அசடு போல் திரும்பக் கேட்டேன். 'போய்க் கண்ணாடியைப் பார்' என்றார்கள். ஏதோ நம்மை வம்பில் மாட்டி விடப் பார்க்கிறார்கள் என்று அப்போதும் உள்ளூர பயம்... அம்மாவிடம் 'நான் நடிக்கட்டுமா?' என்றேன். 'வீட்டில்தான் அது

# கோவளத்தில் கோவா நிலவு



உனக்குக் கை வந்த கலை ஆயிற்றே. அதை அப்படியே சினிமாவில் செய்தால் போதும்; நீ நம்பர் ஒன் நடிகை!' என்று என்கரேஜ் செய்தார்!

முதலில் ஹிந்தி விளம்பரப் படங்களுக்கு மாடலிங் செய்ய முடிவு செய்தேன். அப்போதுதான் மனிஷாவிடம் என் முகவரி வாங்கிக் கொண்டு என்னைச் சந்தித்தார் 'சாக்லேட்' படத்தின் தயாரிப்பாளர் மாதேஷ். 'தமிழில் நடிக்கிற எண்ணமே கிடையாது' என்றபோது "முதலில் கதையைக் கேளுங்கள். அதன் பிறகு எங்கள் பட நிறுவனம் குறித்து விசாரித்து விட்டு ஒப்புக் கொள்ளுங்கள்" என்றார். எனக்கு சென்னையில் தோழிகள் உண்டு. அவர்கள் துணையோடு துப்பறியத் தொடங்கினேன். 'ஜீன்ஸ்' படத்தில் ஐஸ்வர்யா ராயை நடிக்க வைத்ததில் தொடங்கி, சினிமாவை புரொஃபஷனலாகச் செய்பவர் மாதேஷ் என்று தெரிந்துகொண்டு கதையைக் கேட்டேன். சூப்பர்...! ஒப்புக்கொண்டேன்... இப்போது தமிழில் நிறைய வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு விட்டேன்" என்கிறார் ஜெயா ரே.

குஜராத்தி குடும்பத்தைச் சேர்ந்தவர் ஜெயா ரே. படித்தது மும்பை. குடியேறியது கோவா பனாஜியில். குஜராத்தி, ஹிந்தி மட்டுமில்லே கொங்கணி மொழியிலேயும் தூள் கிளப்புவேன். கோவாகாரங்க பேசுற கொங்கணியும் தமிழ் மாதிரி கேட்க ரொம்ப இனிமையா இருக்கும்..." என்று லயித்தவர் கோவாவின் நூற்றி ஐந்து கிலோ மீட்டர் கடற்கரையையும், அந்தச் சிற்றலைகளையும் பற்றி அரை மணி நேரம் ஆராய்ச்சி கட்டுரையே சமர்ப்பித்தார்.



# அமரர் கல்கி

# ஏழை மாணவர்களுக்கு உதவி:

# ரூ. 1,75,000

சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதைக் காட்டிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கு (2001 - 2002) ரூ. 25,000/-அதிகரித்து. மொத்தம் ரூ. 1,75,000/- உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது. உதவித் தொகைகள் பின் வருமாறு விநியோகமாகும்.

- ஒருவருக்கு ரூ. 2,000 வீதம் எட்டு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாண வர்களுக்கு ரூ. 16,000/-
- ஒருவருக்கு ரூ. 1,500 வீதம் இசை அல்லது நாட்டியம் பயிலும் நாலு மாணவர்களுக்கு ரூ. 6,000/-
- ஒருவருக்கு ரூ. 1,500 வீதம் 40 கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 60,000/-
- ஒருவருக்கு ரூ. 1000 வீதம் 66 மேல் நிலைப்பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ. 66,000/-
- ஒருவருக்கு ரூ. 750 வீதம் 36 உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ரூ. 27,000/-

---

"கோவாவை இவ்வளவு புகழ்ந்து தள்ளிவிட்டு, ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துட்டீங்களே" - என்றதும்

"ஓ...ஜீசஸ்! பனாஜிலே இருந்துகொண்டு அதை எப்படி மறக்க முடியும்! பனாஜி தேவாலயத்தில் இருக்கிற செய்ண்ட்பிரான்சிஸ் சேவியரோட உடலைத் தானே சொல்றீங்க. நூற்று ஐம்பது வருஷத்தைக் கடந்து இன்னும் அழியாமல் இருக்கு. அஞ்சு வருஷத்துக்கு ஒருமுறை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கிறாங்க. இந்து, முஸ்லீம் என்று ஜாதி, மத வேறுபாடு இல்லாமல் எல்லாரும் அந்தத் துறவியின் உடலை வந்து வணங்கிட்டுப் போறாங்க. நான் அம்மாவுடன் ஒருமுறை போய்ப் பார்த்திருக்கேன். அவர் தூங்குகிற மாதிரியே இருக்கும். சுதந்தரத்திற்குப் பிறகும் கோவாவை ஆட்சி செய்து கொண்டிருந்த போர்ச்சுகீசியர்கள், 'நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றால் இந்தப் புனித உடலை எங்ககிட்டே கொடுத்துடுங்கன்னு பிரதமர்

# நினைவு அறக்கட்டளை

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக் கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகையைப் பெற மாணவர்கள் விண்ணப்பிக்க லாம்.

* விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும். பார்வையற்ற மாணவர்களுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு உண்டு.
* தபால் மூலம் மட்டுமே மனுக்களை அனுப்ப லாம்.
* அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
* படிப்பில் சிறந்தவர்களாக விளங்கி, பெற் றோர் உதவியுடன் மட்டுமே கல்வியைத் தொடர முடியாத நிலையில் பொருளா தாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும்.
* மேற்கூறிய அனைத்தையும் உறுதிப்படுத்த கல்வி நிலையத்தின் முதல்வருடைய சான்றிதழை இணைக்கவும்.
* சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகலை முதல்வருடைய கையொப்பத்துடன் அனுப்பவும்.
* ஊனமுற்றவர்கள் மேற்படி சான்றிதழ்கள் தவிர, தங்கள் ஊனம் பற்றிய விவரத்தையும் முதல்வருடைய சான்றிதழாக அனுப்புதல் வேண்டும். இத்தகையோருக்கு முன்னுரிமை உண்டு.

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். தேவைப்படாத சான்றிதழ்களை அனுப்ப வேண்டாம்.

உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாண வர்களைத் தேர்ந்தெடுப்பதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்பு வதற்கில்லை.

**விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி : ஜூலை 31, 2001**

*விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :*

**நிர்வாக அறங்காவலர்,**
**கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,**
**நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.**

---

நேருகிட்டே கேட்டாங்களாம். 'முடியவே முடியாது... இது எங்களோட ஆன்மிகச் சொத்துக்களில் ஒன்று'ன்னு மறுத்துட்டாராம்..."


" '**சா**க்லேட்' படம் தவிர தமிழில் வேறு படங்களில் நடிக்கிறீர்களா?" என்று கடைசியாக, கடமைக்கு ஒரு கேள்வியைக் கேட்டதும்... ஒரு பகீர் பதில் வந்தது.

"சுகாசினி படத்துல நடிக்க வாய்ப்பு வந்தது. மறுத்துட்டேன். ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு படத்துல நடிச்சா பணம் கிடைக்கும்... ஆனால் தரம் குறைஞ்சுடும்னு நினைக்கிறேன். அதனாலே 'சாக்லேட்' முடிஞ்ச பிறகு வேண்டுமானால் நடிக்கிறேன்னு அடிச்சு சொல்லிட்டேன்.... நான் செஞ்சது சரியா? தவறா?" என்று நம்மையே பேட்டி எடுக்க ஆரம்பித்து விட்டார் ஜெயா ரே!

சந்திப்பு : **விஷ்வல்தாசன்**

# ஓடுபவளே நில்லு





**போ**லீஸ் கமிஷனர் அலுவலகம்.

அரையிருட்டான ஓர் அறைக்குள் ஸ்டூல் ஒன்றின் மேல் வருண் கொஞ்சம் அசௌகரியமாய் உட்கார்ந்திருக்க அவனைச் சுற்றிலும் அரைவட்டமாய் போலீஸ் அதிகாரிகள். பிரதானமாய் போலீஸ் கமிஷனர் சக்கரபாணி. அவருக்குக் கொஞ்சம் தள்ளி, இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன், லாயர் மனோன்மணி, கலவர முகமாய் பார்வதா.

வருணின் சட்டையும் பனியனும் கழற்றப்பட்டிருந்தன. வெற்று மார்பை மூடிக் கொள்ளும் முயற்சியில் அவனுடைய இரண்டு கைகளும் பெருக்கல் குறி போட்டிருந்தன.

கமிஷனர் சக்கரபாணி தன் கையில் வைத்திருந்த எண்ணெய் மினுமினுப்போடு கூடிய லாட்டியால் வருணின் வலது தோள் பட்டையைத் தட்டினார்.

"நீ உண்மையைப் பேச வேண்டிய நேரம் இது. பொய் பேசினா கையில் இருக்கிற இந்த லாட்டிக்குப் பிடிக்காது. இந்த லாட்டியால் அடிச்சா, அது எலும்பு வரைக்கும் போய், தட்டிப் பார்க்கும். ஒத்திகை பார்க்கலாமா?"

"வே... வே... வேண்டாம்... ஸார்..." வருணின் தலை கலக்கத்தில் ஆடியது.

"அப்படீன்னா நீ உண்மையைப் பேசியாகணும். பத்து லட்ச ரூபாயை உனக்குக் கொடுத்தது



யாரு...?"

"த... தயானந்த் ஸார்."

"எதுக்காக கொடுத்தார்...?"

வருண் சில விநாடிகள் தயங்கி, பின் காய்ந்து போன உதடுகளை ஈரமாக்கிக் கொண்டு முந்தைய இரவு நடந்த எல்லா சம்பவங்களையும் சொல்லி முடித்தான். கமிஷனர் சக்கரபாணியின் பார்வை இப்போது பக்கவாட்டில் திரும்பி பர்வதாவின் மேல் நிலைத்தது.

"இவன் சொல்றதெல்லாம் உண்மையா?"

"உண்மைதான் ஸார். தன் மனைவி வைசாலியோட மரணத்துக்கு கீர்த்திவாசன் தான் காரணமாயிருக்கணும்னு தயானந்த ஸார் தீர்மானமாய் நினைச்சார். அவரைப் பழிவாங்க கூலிப்படை ஆட்களை நியமிச்சா போலீஸில் மாட்டிக்குவோம்னு நினைச்சு வருண்கிட்டே அந்தப் பொறுப்பைக் கொடுத்தார். ஆனா வருண் அந்தப் பொறுப்பை ஏத்துக்கலை. அந்த வேலையே வேண்டாம்னு சொல்லிட்டுக் கிளம்பினார். தயானந்த் ஸார், வருணை விடலை. கீர்த்திவாசனைத் தீர்த்துக் கட்டற வேலையை நான் பார்த்துக்கிறேன். அவன் என்னோட மனைவியைக் கொலை செய்தது உண்மையா இல்லையான்னு மாத்திரம் கண்டுபிடிச்சுச் சொல்லுன்னு கேட்டுக்கிட்டார். வருண் ஒத்துக்கவே, பத்து லட்சம் கொடுத்தார்..."

கமிஷனர் கேலியாய்ப் புன்னகை செய்தார்.

"இது ஒரு சாதாரண வேலை. இந்த வேலைக்குப் போய் பத்து லட்சமா...? வருண் அந்த வேலையை ஒழுங்காகச் செய்வானா மாட்டானான்னு தெரியாத நிலைமையில் எப்படி அவ்வளவு பணம் கொடுத்தார்...?"

"தயானந்த் ஸாருக்கு பணம் ஒரு பிரச்னையே கிடையாது ஸார். தன்னோட நோக்கம் நிறைவேறுறதுக்காக எவ்வளவு பணத்தை வேணும்னாலும் செலவழிப்பார். தன்னோட மனைவியின் கொலை விஷயத்தில் போலீஸார் சரியாய்ச் செயல்படாமல், கீர்த்திவாசனைக் காப்பாற்றுவதற்காக அவரிடமிருந்து ஒரு பெரிய தொகையை உயர் அதிகாரிகள் வாங்கிக் கொண்டு விட்டதாக தயானந்த் ஸார் நினைச்சார். சட்டம் கீர்த்திவாசனைக் கண்டுகொள்ளாமல் விட்டாலும் அவரை தாம் தண்டிக்க வேண்டும் என்று தயானந்த் ஸார் நினைத்தார். அதுக்காக வருணை ஏற்பாடு செய்தார். ஆனால் வருண், கடைசி வரைக்கும் கீர்த்திவாசனைக் கொலை செய்ய




ராஜேஷ் குமார்

ஒத்துக்கவேயில்லை. கீர்த்திவாசன் உண்மையிலேயே கொலையாளியா இல்லையான்னு கண்டுபிடிக்க மட்டுமே ஒத்துக்கிட்டார். அதுவும் அரை மனத்தோடு."

"சரி....! வருணுக்கு, தயானந்த் பணம் கொடுத்த விஷயம் வேற யார் யாருக்கெல்லாம் தெரியும்?"

"எங்க மூணு பேரைத் தவிர வேற யாருக்கும் தெரியாது..."

"அதாவது... தயானந்த், நீ, வருண் உங்க மூணு பேருக்கு மட்டும்."

"எஸ்... ஸார்...."

"தயானந்த் இப்போ உயிரோடு இல்லை...! பணம் பத்து லட்சம் வருண்கிட்டே இருக்கிற விஷயம் உனக்கு மட்டுமே தெரியும். இந்த நிலைமையில் அந்தப் பத்து லட்சம் பணம் எப்படிக் காணாமே போயிருக்கும்...?"

பர்வதா துணுக்குற்றுப் போய் கமிஷனரைப் பார்த்தாள்.

"என்னை நீங்க சந்தேகப்படறீங்களா ஸார்...?"

"ஒய் நாட்...?"

"ஸ... ஸார்..." பர்வதா விழிகள் விரிய திகைத்துக் கொண்டிருக்கும்போதே அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் தள்ளி நின்றிருந்த இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன் இரண்டடி எட்டிப் போட்டு கமிஷனர்க்கு முன்பாய் வந்து நின்றார்.

''ஸார்.... தயானந்த் கொலை செய்யப்பட்ட இந்த விவகாரத்தில் இன்னொரு பெண்ணுக்கும் தொடர்பு இருக்கலாம்னு நான் நினைக்கிறேன் ஸார்...''

''யார்...''

''யமுனா ஸார்...! ரிடையர்ட் ஜட்ஜ் சிவப்ரகாசத்தின் மருமகள். லீலாகிருஷ்ணனின் மர்டருக்கும் தயானந்த் மர்டருக்கும் ஏதோ ஒரு லிங்க் இருக்கு ஸார்."

"எப்படிச் சொல்றீங்க...?"

''லீலாகிருஷ்ணனும் யமுனாவும் ஆரம்பக் காலத்தில் தயானந்துக்கு சொந்தமான தயா பட்டன் ஃபேக்டரியில் வேலை பார்த்திருக்காங்க. லீலாகிருஷ்ணன் அங்கே சூப்பர்வைஸர். யமுனா அதே கம்பெனியில் பேக்கிங் செக்ஷனில் வேலை பார்த்துக்கிட்டு இருந்திருக்கா. கம்பெனியில் வேலை பார்த்துக்கிட்டிருக்கும்போதே லீலாகிருஷ்ணனும் யமுனாவும் ஒருத்தரையொருத்தர் விரும்பியிருக்காங்க."

"ந்நோ..." என்றாள் பக்கத்தில் நின்றிருந்த லாயர் மனோன்மணி.

எல்லோருடைய பார்வையும் அவள் மேல் நிலைத்தது. மனோன்மணி சற்றே குரலை உயர்த்தியபடி பேசினாள்.

''ஸார்...! இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன், தேவையில்லாமே யமுனாவோட பேரையும் தயானந்த் கொலை விவகாரத்துக்குள் இழுக்கிறார். யமுனாவும் லீலாகிருஷ்ணனும் காதலர்கள் கிடையாது. லீலாகிருஷ்ணன் யமுனாவை விரும்பியிருக்கலாம். ஆனால் யமுனா லீலாகிருஷ்ணனைக் காதலிக்கவேயில்லை... இன்ஸ்பெக்டர் தேவையில்லாமே யமுனாவோட பேரை எதுக்காக தயானந்த் கொலை விவகாரத்தில் இழுக்கிறார்னு தெரியலை. யமுனா அப்பாவிப் பெண். மரியாதையும் பாரம்பரிய அந்தஸ்தும் உள்ள குடும்பத்துல வாழ்க்கைப்பட்டிருக்கா. அவளை போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் இழுத்து அவமானப் படுத்துவதாலே இன்ஸ்பெக்டருக்கு என்ன சந்தோஷம் கிடைக்குமோ தெரியலை...?"

பால்பாண்டியன் மனோன்மணியை ஒரு சின்னப் புன்னகையோடு கையமர்த்தினார்.

''யமுனா ஒரு நல்ல குடும்பத்துக்கு வாழ்க்கைப்பட்டிருக்கலாம். ஆனா அவ நல்ல பெண் கிடையாது. லீலாகிருஷ்ண

---

*''சபையில் எதிர்க்கட்சிகளுடன் 'மோதல் போக்கு அணுகுமுறையை' கைவிடத் தீர்மானிச்சுட்டோம்...!''*

*''ஏன் இந்த திடீர் முடிவு...?''*

*''என்னங்க பண்றது... எங்க கட்சி சார்பா போட்டியிட்ட 'குண்டர்கள்... ரவுடிகள்... பயில்வான்கள்' அத்தனை பேரும் தோத்துப் போயிட்டாங்களே...!''*

*– கே.ஜி.எஸ். கோவிந்தன்*



ளைப் பற்றி அவகிட்ட ஆரம்பத்துல நான் விசாரிக்கும் போது அவனைத் தெரியவே தெரியாதுன்னு சொன்னா. அதுக்கப்புறம் உங்ககிட்ட தெரியும்னு ஒத்துக்கிட்டா! லீலாகிருஷ்ணனுக்குத் தன் கைப்பட காதல் கடிதங்களையும் வாழ்த்து அட்டைகளையும் அனுப்பியிருக்கா. கேட்டதுக்கு, தன்னோட கையெழுத்து கிடையாதுன்னு சொன்னா. பட், கிராஃபாலஜிஸ்ட் கடிதங்களில் இருக்கிற கையெழுத்து, யமுனாவோட கையெழுத்துதான்னு தீர்மானமாய்ச் சொல்லிட்டாங்க. இவ்வளவு பொய் பேசற யமுனா, எப்படி நல்ல பெண்ணாக இருக்க முடியும். அவகிட்டே ஏதோ தப்பு இருக்கு. சிவப்பு பனித்துளி என்கிற வார்த்தைக்கு என்ன அர்த்தம்னு நிச்சயமாய் அவளுக்குத் தெரியும். லீலா கிருஷ்ணன், தயானந்த் இந்த இரண்டு பேரும் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டிருக்காங்க. இந்த இரண்டு கொலைகளுக்குப் பின்னாடி யமுனாவுக்கும் வருணுக்கும் நிச்சயமாய்ப் பெரிய அளவில் சம்பந்தம் இருக்கும். இப்போ, வருணை போலீஸ் லாக்கப்புக்குள்ளே வெச்சு விசாரணை பண்ற மாதிரி யமுனாவையும் லாக்கப்புக்கு கூட்டிட்டு வந்து, விசாரணை பண்ணினா எல்லா உண்மைகளும் வெளியே வந்துவிடும்...''

''ஸார்...! திஸ் ஈஸ் வெரி...'' வேகமாய் கோபமாய்ப் பேச முயன்ற லாயர் மனோன்மணியைக் கையமர்த்தினார் கமிஷனர்.

''ஊக்... மிஸ் மனோன்மணி! யமுனாவுக்காக நீங்க வக்காலத்து வாங்கிப் பேச, இது ஒண்ணும் கோர்ட் கிடையாது. யமுனாவைக் கைது பண்ணி, குற்றவாளிக் கூண்டில் நாங்க நிறுத்தும் போது நீங்க யமுனாவுக்காக மணிக்கணக்கில் வாதாடலாம். இப்போதைக்கு, நீங்க பேசாமே இருக்கிறது நல்லது.''

''ஸார்...! நான் லாயர் மட்டும் கிடையாது. மனித உரிமை கமிஷனில் மெம்பரும் கூட. யமுனா போன்ற குடும்பப் பெண்களைச் சட்டம் அணுகும் போது அதில் முரட்டுத்தனம் இருக்கக் கூடாது.''

பால்பாண்டியன் சிரித்தார்.

''நீங்க நினைக்கிற மாதிரி யமுனா ஒரு குடும்பப் பெண் கிடையாது. அவ ஒரு கோடாரிக் காம்பு. இந்த மாதிரியான பெண்களுக்கு ஆங்கிலத்தில் 'ப்ளாக் ப்யூட்டி'ன்னு சொல்வாங்க.''



***''வரவர எதுக்குத்தான் கட்-அவுட் வைக்கறதுன்னு விவஸ்தையே இல்லாம போச்சு!''***

***''ஏன் என்னாச்சு?''***

***'''எல்.கே.ஜி.யில் சீட் பெற்ற எழிலரசி'யேன்னு யாரோ வீதி முன்னாடி கட்அவுட் வச்சிருக்காங்க!''***

***– சோ. சுரேஷ் ஆதித்யா***

''ஸார்...''

''நோ மோர் வேர்ட்ஸ் ப்ளீஸ். இனி நீங்க ஒரு வார்த்தை பேசினாலும் இந்த ரூமை விட்டு வெளியேற்ற வேண்டி வரும்.... ப்ளீஸ் கீப் கொய்ட்'' கமிஷனர் உரத்த குரலில் மனோன்மணியை எச்சரித்து விட்டு, வருணின் பக்கம் திரும்பினார்.

''அந்த சிவப்புப் பனித்துளி இப்போ உன்கிட்ட இருக்கா... யமுனாகிட்டே இருக்கா...?''

வருணின் கண்களில் திகில் ஸ்லோ மோஷனில் பரவி உறைந்தது. ''அது என்னான்னே எனக்குத் தெரியாது ஸார்...''

''நிஜமா உனக்குத் தெரியாது...?''

''தெரியாது ஸார்...''

''சரி... உனக்குத் தெரியாது. யமுனாவுக்குத் தெரியுமா...?''

''ஸ.... ஸார்.... அது வந்து... அந்தப் பொண்ணுக்குத் தெரியுமா தெரியாதான்னு எனக்குத் தெரியாது ஸார். அந்தப் பொண்ணை நான் பார்த்தது கூட கிடையாது.''

''பால் பாண்டியன்...!''

''ஸார்...!''

''இவன் வாயிலிருந்து உண்மையை வரவழைக்க முடியாதுன்னு நினைக்கிறேன். நீங்க அந்த யமுனாவை அரெஸ்ட் பண்ணிக் கொண்டாந்துடுங்க. போலீஸுக்குப் பயப்படறவங்கதான் உண்மையைச் சொல்வாங்க. இவன் ஒரு கிரிமினல். ஏற்கெனவே போலீஸையும் ஜெயிலையும் பார்த்தவன். அந்தப்

பொண்ணை இப்பவே போய் அரெஸ்ட் பண்ணிக் கொண்டாங்க. பத்து நிமிஷத்துக்குள்ளே எல்லா உண்மைகளையும் வாங்கிடலாம்..."

"எஸ்... ஸார்..." பால்பாண்டியன் நெற்றியில் சல்யூட் பதித்து இரண்டடி பின்வாங்க, லாயர் மனோன்மணி பதறிக் கொண்டு கமிஷனருக்கு முன்பாய் வந்து நின்றாள்.

"ஸார்..! இந்த நடவடிக்கை தேன்கூட்டில்



• படம்: பாவை. ஜிடி. ரமேஷ் குமார்

## திடீர்ப் பரிசுப் போட்டி – 13

### ஓ! பாப்பா கொஞ்சம் நில்லு!

அப்படி என்ன அவசர ஜோலி இந்தப் பாப்பாவுக்கு? டிரஸ் கூட போடாமல், பத்துப் படியேறி... என்ன செய்யப் போகிறாள்?(ன்) சுவாரசியமாக கற்பனை செய்து அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள். ரசனையான யூகத்துக்கு ரூ.100/- சர்வ நிச்சயம்.

ஆசிரியர் தீர்ப்புதான் ஃபைனல்

கல்லை எறிவதற்குச் சமமான நடவடிக்கை. யமுனாவை, போலீஸ் லாக்கப்புக்குக் கொண்டுட்டு வர்ற முயற்சியில் நீங்க கொஞ்சம் நிதானம் காட்டறது நல்லது..."

"நத்திங் டூயிங்..! இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன், அந்தப் பொண்ணு விஷயத்தில் நிறையவே நிதானத்தையும் பொறுமையையும் கடைபிடிச்சிருக்கார். அவர் அப்படி பொறுமையா இருக்கப் போய்த்தான் தயானந்த் கொலை செய்யப்பட்டிருக்கார். இனியும் பொறுமையா இருக்க முடியாது. பால்பாண்டியன்! நீங்க புறப்படுங்க..."

"எஸ்... ஸார்..." பால்பாண்டியன் தலையில் இருந்த தொப்பியைத் திருத்திக் கொண்டு புயல் வேகத்தில் புறப்பட்டார்.

"அம்மா... யமுனா...!"

சிவப்ரகாசம் குரல் கொடுக்க, சமையலறையில் வேலையாய் இருந்த யமுனா, அந்த வேலையை அப்படியே விட்டு விட்டு வெளியே வந்தாள்.

சிவப்ரகாசமும் திலகவதியும் ஹால் சோபாவுக்குச் சாய்ந்திருந்தார்கள்.

"மாமா..."

திலகவதி கேட்டாள். "வேலைக்காரி இருக்கும் போது நீ ஏம்மா சமையற்கட்டுல புகுந்துக்கிட்டுக் கஷ்டப்படறே...?"

"அது வந்து அத்தே... சௌம்யா பீட்ரூட் அல்வா கேட்டா. அதான்..."

"அவ ஒரு தீனிப் பண்டாரம். அவ எதையாவது கேட்டான்னா நீ உடனே வேதவாக்கா எடுத்துக்கிட்டு, செஞ்சு தர்றதாலதான், சௌம்யா முழுச் சோம்பேறியாயிட்டா. புருஷன் வீட்டுக்குப் போய் எப்படித்தான் குப்பை கொட்டப் போறாளோ தெரியலை..."

"கழுத்துல தாலி ஏறினா, எல்லாம் சரியாயிடும் அத்தே..."

"நீ சொல்றே... பார்க்கலாம்."

சோபாவுக்கு எதிரில் டீபாயின் மேல் இருந்த டெலிபோன் 'திடும்' என விழித்துக் கொண்டு கத்தியது.

சிவப்ரகாசம் ரிஸீவரை எடுத்துச் செவிமடுத்துவிட்டு யமுனாவிடம் நீட்டினார்.

"போன் உனக்குத்தாம்மா. உன் ஃப்ரண்ட் சரளா பேசறா..."

யமுனா உள்ளுக்குள் பரவிய நடுக்கத்தை மறைத்துக் கொண்டு ரிஸீவரை வாங்கி காதுக்குப் பொருத்தி "ஹலோ..." என்றாள்.

மறுமுனையில் சரளா பதற்றக் குரல் கொடுத்தாள்.

"யமுனா...! லாயர் மனோம்மணி எனக்கு ஃபோன் பண்ணியிருந்தாங்க...! உன்னை அரெஸ்ட் பண்ண போலீஸ் வந்துக்கிட்டு இருக்காங்களாம்..."

(தொடரும்)




# கல்கி-60

மினுமினு வைர விழா
கொண்டாட்டங்கள்...

5.8.01 இதழிலிருந்து...
கோலாகல ஆரம்பம்!


படித்து, பாதுகாக்க ஒரு
பொக்கிஷம் -

## அமரர் கல்கி
எழுதிய


# சிவகாமியின் சபதம்

வாசகர்கள் பங்கேற்க
விதவிதமான போட்டிகள்!
பரிசுகள்!
எல்லாமே ஸ்பெஷல்!!


# நடக்குமென்பார் நடக்கும்!



**மேஷம்:** உங்க திறமை, புத்தி சாலித்தனமெல்லாம் வெளிப் படப் போகுது. ஒரே வாரத் தில் முகத்துல 'பளிச்'மின்னும். இந்த மின்னலால மத்தவங்களைக் கவர்ந்து உங்க திட்டங்களை நிறைவேற்றப் போறீங்க. அரசு பணியாளர்கள் சிலருக்குப் பதவி, பட்டம் தேடி வரும். பெண்களுக்குக் கொண்டாட்டத் துக்குப் பஞ்சமில்லை. நினைச்சதை முடிச் சிடுவீங்க. அப்படியே குடும்பத்துல கொஞ்சம் கவனம் வையுங்க. செலவு எகிறும். பர்ஸ் பத் திரம். எப்ப என்னாகுமோன்னு அமைச்சர்கள் பயந்துட்டு இருக்கற மாதிரி மனசுல அப்பப்ப பயம் வந்து மிரட்டும். பயப்படாதீங்க. எல்லாம் சரியாயிடும்.



**ரிஷபம்:** நீங்களே ஆச்சர்யப் படும்படி வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு கலக்கலுக்குப் பஞ்சமில்லை. நடுராத்திரி பன்னிரண்டு மணிக்கு ஹார்ன் அடிச்சு டென்ஷன் பண் ணும் தண்ணீர் லாரி மாதிரி எரிச்சல் ஏற் படுத்தும் சம்பவங்கள் இந்த வாரம் கொஞ்சம் அதிகமாகவே நடக்கலாம். பொறுமையைக் கடைபிடியுங்க. பேச்சில சூடான வார்த்தை களைத் தவிர்த்திடுங்க. மின்சாரம், இயந்திரங் கள், எரிபொருள்களில் வேலை பார்க்கிறவங்க ஜாக்கிரதையா இருக்கணும். உஷார்!




**மிதுனம்:** பல வழிகள்ல இருந் தும் இதுவரை எதிர்ப்பு ஏற்படுத்தி வந்தவங்க இப்ப ஜூட்டாயிடு வாங்க. கணவன் மனைவிக்குள்ள இருந்த ட்ஷூம் ட்ஷூம் இனி இருக்காது. குடும்பத்துல மகிழ்ச்சி மயிலாட்டம் ஆடும். ஃபிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்ல கோப்பையைக் கைப்பற்றின பயஸ், பூபதி பார்ட்னர்ஷிப் மாதிரி கூட்டாகத் தொழில் பண்ணறவங்களுக்கு வெற்றி கிட்டும். இருந்தாலும் உழைப்புக்கும் அலைச்சலுக்கும் பஞ்சமிருக்காது. 'அழைக்குது அமெரிக்கா' மாதிரியான போட் டியில திடீர்னு உங்களுக்குப் பரிசு வந்து உற்சாகப்படுத்த சான்ஸ் இருக்கு. குடும்பத்துல எதிர்பாராத செலவுகள் தேடி வரும். ஜாக்கிரதை.



**கடகம்:** நெற்றி நிறைய விபூதி யைப் பூசிட்டு கழுத்துல மாலை யோட இல்லாட்டியும் கூட பக்தி பக்கம் மனசு தானா இழுக்கும் இந்த வாரம். ஆண்டவனை வேண்டிகிட்டு 'அரோ கரா' போட்டால் பிரச்னைகள் மாயமாயிடும். செலவு சென்னை குடிநீர் லாரி வேகமாகப் போகும். கலைத் துறையைச் சேர்ந்தவங் களுக்குச் சின்ன சின்னப் பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். பக்குவமா சமாளிப்பது அவசியம். கொடுக்கல் வாங்கல் விஷயத்துல எச்சரிக்கையா இருங்க. குடும்பத்துல ஒற்றுமை குலையற மாதிரி ஏதாவது நடக்கும். ஜாக் கிரதையாச் செயல்படுங்க.



**சிம்மம்:** நல்ல ராசியெல்லாம் உங்களையே லுக் விடறதால யோகம்தான் போங்க. உங்க திட் டங்கள் எண்ணங்கள் எல்லாம் நடக் கப் போகுது. அரசியல்வாதிகளுக்குச் சால் வைகள், துண்டுகள் குவியும். பாராட்டுக்கும் குறைவில்லை. சிலருக்கு 'மெகா டூர்' வாய்ப் பிருக்கு. 'தெண்டச்சோறு'ன்னு திட்டு வாங் கிட்டு இருந்தவங்களுக்கு வேலை வாய்ப்பு வந்து டோரைத் தட்டும். சந்தோஷக் கடல்ல மூழ்கிற மாதிரி இனிமையான சம்பவங்கள் குடும்பத்துல நடக்கும். சிலருக்குப் பதவிகள் பட்டங்கள் தேடி வரலாம். எதுலயும் கொஞ் சம் யோசிச்சு செயல்பட்டா பிரச்னைகள்ல இருந்து தப்பலாம்.




**கன்னி:** உருப்படியான இலாகா கிடைக்காம நொந்து போய் இருந்த

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு நல்ல இலாகா கிடைத்த மாதிரி புதிய பதவிகள் பட்டங்கள் தேடி வரப் போகுது. எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. ஜாலி, சுற்றல். ஃபங்ஷன், பார்ட்டின்னு போக வாய்ப்பிருக்கு. நிலக்கரி ஊழல் வழக்குல பல்டி அடிச்ச சாட்சி மாதிரி யாரு எப்ப வேணா எந்த பக்கம் வேணாலும் மாறலாம். வீட்ல சுபகாரியங்கள் நடக்க சந்தர்ப்பம் கூடி வரும்.




வெற்றிகரமான 470வது நிகழ்ச்சியைத் தாண்டியிருக்கும் நையாண்டி தர்பார் யூகிசேதுவுக்கு (மிதுனம்) திடீர்ப் பரிசு வருமாமே!



**துலாம்:** ஈரோடு, நெய்வேலியில இருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வந்து குடிநீர் பிரச்னையைச் சமாளிச்ச மாதிரி பிரச்னைகளை ஈஸியா சமாளிச்சுடுவீங்க. பல வழிகள்ல இருந்து வர்ற பண நடமாட்டத்தால மனசுல தெம்பு பிறக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு வழி இருக்கு. உடனே லாட்டரி கடை பக்கம் ஓடிடாதீங்க. எதிலயும் பதற்றம், அவசரம் வேண்டாம். நிதானம் அவசியம்.



**விருச்சிகம்:** திடீர் திடீர்னு ஊழல் புகார் வர்ற மாதிரி உங்க புகழைக் கெடுக்கற மாதிரியான சம்பவங்கள் நிகழும். எச்சரிக்கையா நடந்துக்கங்க. குடும்பத்துல பிரச்னைக்குக் கேட்கவே வேண்டாம். சின்ன விஷயத்துக்குக் கூட கணவன் மனைவிக்குள்ள பிரச்னை வரலாம். வாயை அடக்குறது நல்லது. பண பிரச்னை கோபத்தை உண்டாக்கும். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருங்க. எந்த வேலை செய்தாலும் அதில முழு ஈடுபாட்டோடு இருந்தாதான் மேலதிகாரிங்க திட்டுகள்ல இருந்து தப்பிக்கலாம். உஷார்.



**தனுசு:** உங்க திறமை, சாமர்த்தியம் எல்லாம் இப்ப வெளிப்படப் போகுது. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்பு ஓடோடி வரப் போகுது. கணவன் மனைவிக்குள்ள இருந்த 'முறை'ப்புகள் இப்ப மாயமாயிடும். பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு யோகம்தான். சந்தோஷ விசேஷங்கள் வீட்ல நடக்க வாய்ப்பிருக்கு. காஷ்மீர்ல வன்முறையை ஏவுற அண்டை நாடு மாதிரி அக்கம் பக்கத்தாரால் சின்னச் சின்னத் தொல்லைகள் வரலாம். சாமர்த்தியமா சமாளிங்க.



**மகரம்:** புத்திசாலித்தனமா ராணுவ ஆட்சியாளர் முஷாரப் பாக் அதிபரான மாதிரி உங்க சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் வெளிப்படும். அரசியல்வாதிகளுக்குப் பாராட்டு அதிகமாகும். பொறியியல், சட்டம், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு மகிழ்ச்சியான நிலை ஏற்படும். 'வருமா வராதா'ன்னு ஏங்கிட்டிருந்த நல்ல தகவல் இப்ப வந்து வயித்துல பால் வார்க்கும். வீண் செலவுகள் எகிறும். சிக்கனம் அவசியம்.



**கும்பம்:** எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றி பெறுவீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டும் புகழும் கூடும். புதையல் கிடைச்ச மாதிரி பணம் பல இடங்கள்ல இருந்து வந்து பாக்கெட்டை நிரப்பும். சட்டம், இராணுவம், காவல் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. பலூன்ல உலகம் சுற்ற நினைக்கிற வெளிநாட்டுப் பணக்காரர் மாதிரி, துணிச்சலான காரியங்கள்ல சிலர் இறங்கி வெற்றி பெற வாய்ப்பிருக்கு. அலைச்சலைத் தவிர்த்திடுங்க. உடல் உபாதைகள் வரலாம்.



**மீனம்:** 'யாரு இவங்களா?'ன்னு ஆச்சர்யப்படும்படி அழகா தெரிவீங்க. நண்பர்கள் உறவினர்கள் எல்லாம் ஓடோடி வந்து உதவுவாங்க. இந்த 'உதவிகள்'ல நீங்க புல்லரிச்சுப் போவீங்க. குடும்பத்துல மகிழ்ச்சி தாண்டவமாடும். பண விஷயத்துக்குப் பிரச்னையில்லை. கம்ப்யூட்டர், விஞ்ஞானம், இரசாயனம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு இது யோக காலம். அலைச்சல் அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது. அதனால உடல் நலன் கெடும். கவனம்! வெளிநாடு அல்லது வெளியூர்ல இருந்து நல்ல தகவல் வந்து சேரும்.

**அக்னிசர்மா பக்கம்**



# 18 குறையொன்

பகவானுக்கு அர்ச்சனை செய்யப்படும் புஷ்பம் ரொம்ப சுமிதமாக இருக்க வேண்டும். வாசனையுள்ள புஷ்பமாக இருக்க வேண்டும். வாசனையில்லாத புஷ்பத்தை பகவானுடைய திருவடியிலே அர்ச்சனை பண்ணக் கூடாது. வாசனையுள்ள புஷ்பத்தையும் பகவானுடைய திருவடியிலே சேர்க்கிறபோது பார்த்துச் சேர்க்க வேண்டும். எடுத்தெடுத்து அவன் முகத்திலேயும் நேத்திரத்திலேயும் விக்ரஹத்திலே படும்படியாகப் போடக்கூடாது. முகத்தையே மறைக்கும்படியாகவும் சேர்க்கக் கூடாது. திருவடியிலே போய் விழும்படியாகச் சேர்க்க வேண்டும்.

புஷ்பத்தை எடுத்து இரண்டு விரல்களை முயல் காது மாதிரி நீட்டிச் சேர்த்து வைத்துக் கொண்டு, அதனிடையே புஷ்பத்தை எடுத்துப் போட வேண்டும். புஷ்பத்தை மூர்த்தி மேல் சேர்க்கிறபோதே ஐந்து விரல்களும் சேர்ந்துவிட வேண்டும்.

இப்படிப் பார்த்துப் பார்த்து அர்ச்சனை பண்ணவில்லையானால் தெய்வம் அந்த பிம்பத்தை விட்டு ஓடிப் போய் விடுமாம் – 'இவர் அர்ச்சனையை முடிக்கட்டும்; அப்புறம் வரலாம்' என்று போய்விடுமாம்! தெய்வத்துக்கு நாம் அர்ச்சனை பண்ணுவது அவனை ஓட்டுவதற்காகவா! எதையும் கிரமமாகப் பண்ண வேண்டுமேயொழிய, மாற்றிப் பண்ணினால் அது பலனைக் கொடுக்காது.

கிரமங்களையெல்லாம் மகான்களிடத்திலே அடிபணிந்து சிச்ருஷை பண்ணி, தெரிந்து கொள்ள வேண்டுமேயொழிய, வெறுமே புத்தகத்தைப் பார்த்து எதைத் தெரிந்து கொள்ள முடியும்! பெரியவர்களிடத்தில் பழகிப் பழகித்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

'விஷ்ணவே நம:' என்று அர்ச்சனை பண்ணுகிறபோது இந்தக் கிரமங்கள்படி அர்ச்சனை பண்ண வேண்டும். அதோடு, அவன் குணங்கள் பதினான்கையும் நினைத்துக் கொண்டு அர்ச்சனை பண்ண வேண்டும்! அப்படி அவன் உகந்து ஏற்கும்படியாக அர்ச்சனை பண்ணினால், மீதி 998 நாமாக்களைச் சொன்னாலும் பரவாயில்லை, சொல்லாவிட்டாலும் பரவாயில்லை. முதல் நாமாவிலேயே அவன் சந்தோஷப்பட்டு விடுகிறான். நம்மிடத்திலே ப்ரீதி ஏற்பட்டுவிடுகிறது பகவானுக்கு.

அப்படி அவனுக்குப் ப்ரீதி ஏற்படும்படியாக நாம் பண்ணவேண்டுமேயொழிய, 'நாம் காலம்பூராவும் பண்ணிக் கொண்டேயிருக்கிறோம். ஆனால் பலனே ஏற்படவில்

# மில்லை

லையே என்றால்... அவன் உகக்காமல் நாம் பண்ணி என்ன பயன்? என்ன லாபம்?

இதைத்தான் ஆசார்யர்கள் கற்றுத் தருகிறார்கள்; வேதமும் சொல்கிறது, ஆழ்வார்களும் சொல்கிறார்கள்.

தொண்டர் குலத்தில் நின்று, 'நாராயணனே நரனே! நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நம்பி!' என்று பாடுகிறார்கள் – அப்பாவும் பெண்ணும் – பெரியாழ்வாரும் – ஆண்டாளும் ஒரே விஷயத்தையே நமக்குச் சொல்லிக் காண்பிக் கிறார்கள் – இவர்கள் சொல்வதையே நாம் தஞ்சமாகக் கொள்ள வேண்டும்.

வேதம் எதைச் சொல்கிறதோ அதைத் தான் இதிகாச – புராணங்கள் காட்டித் தருகின்றன. வேதத்தில் ஒரு மூன்று பதத் துக்காகவே இந்த சஹஸ்ரநாமம் எழுந்தது.

யாராயிருந்தாலும் சரி, அந்த எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லக்கூடியவர்களாயிருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு பகவான், யக்ஞயாகாதிகளெல்லாம் பண்ணினால் என்ன பலன் கொடுப்பானோ, அதே பலனைக் கொடுக்கிறேன் என்கிறான் – இது வேதத்திலேயே இருக்கிறது. உபசாரமாகச் சொல்லப்படும் வார்த்தை இல்லை இது. பகவானுடைய திருநாமத்தைச் சொல்கிறவர்களுக்கு ஒரு குறையும் இல்லை என்று சொல்வார்கள்.

வேதத்தில் பல யக்ஞங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் நாம் பண்ணிவிட முடியாது. அந்த யக்ஞமெல்லாம் பண்ண வேண்டாம் என்று வேதமே சொல்லிவிட்டது! 'திருநாமத்தைச் சொல்லுங்கள். பகவானுடைய திருநாமத்தை, உகந்து சந்தோஷமாகச் சொல்லுங்கள்... யக்ஞனம் பண்ணினால் எத்தனை சந்தோஷத்தை பகவான் அடைவானோ அந்த சந்தோஷத்தை அடைந்து, பலனைக் கொடுக்கிறான்' என்று நம்மைப் பார்த்துச் சொல்கிறது வேதம். அகிஞ்சர்களான – பெரிய கர்மாவெல்லாம் பண்ண முடியாத நம்மைப் பார்த்து வேதம் சொல்கிறது.

மகான்களான வசிஷ்டாதிகள் கூட, யக்ஞ – யாகாதிகளோடு பகவான் திருநாமத்தைச் சொல்லி அவனுடைய பெருமைகளைப் பேசியிருக்கிறார்கள். ஆகையினாலே, நாம சங்கீர்த்தனம் என்பது மிகவும் முக்கியம். பகவான் நாமா எதைச் சொன்னாலும் அதிலே பரமாத்மா சந்துஷ்டி அடைகிறான்.

வேத விதிமான மஹரிஷிகளெல்லாம் ஆங்காங்கு கானம் பண்ணிய உத்தமமான திருநாமங்கள் சஹஸ்ரநாமத்திலே சேர்த்து கோக்கப்பட்டிருக்கிறது – இந்தத் திருநாமங்கள் யாவுமே விசேஷமான திருநாமங்கள் – மொத்தம் உபநிஷத் அர்த்தம். கர்ம காண்டத்தைப் பார்த்தாலும் அது மொத்தமும் சஹஸ்ரநாமத்திலே அடங்கியிருக்கிறது;

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பிரும்ம காண்டமும் பூரணமாய் அமைந்திருக்கிறது. இரண்டும் சேர்ந்து கர்ம பிரும்ம மீமாம்ஸையாகவே இந்த சஹஸ்ரநாமமானது அமைந்திருக்கிறது. அதனால்தான் உயர்ந்த மகான்களெல்லாம் கூட இது பகவத் கீதைக்குத் துல்லியமானது என்று கொண்டாடுகிறார்கள். இன்னும் ஒரு படி உயர்வு என்னவென்றால், பகவத் கீதை பகவான் சொன்னது; சஹஸ்ரநாமமோ பகவான் கேட்டது! அதனால் பகவத் அடியாரான பீஷ்மரால் சொல்லப்பட்ட சஹஸ்ரநாமத்துக்கு ஏற்றம் அதிகம் - பகவான் வாக்கைக் காட்டிலும் அவன் அடியார் வாக்குக்கு பலம் அதிகமானதனாலே கீதையைக் காட்டிலும் சஹஸ்ரநாமம் உயர்ந்தது என்று எல்லோரும் கொண்டாடுகிறார்கள்.

சஹஸ்ரநாமத்தில் விச்வம் விஷ்ணு வஷட்கார: என்று மூன்று திருநாமங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்... வஷட்கார - வஷட்காரேண வஜ்ரேண - வஷட்காரமானது வஜ்ராயுதம் போன்றது - அந்த சப்தத்திலே பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான் என்று பார்த்தோம்.

சர்வமும் தன்னுடைய வசத்திலே வைத்துக் கொண்டிருப்பவன் பரமாத்மா.

வசி வதான்ய : - ஆளவந்தார் சுலோகத்தில் வசி என்று ஒரு பெயர் பகவானுக்கு; வதான்யா என்று இன்னொரு பெயரும் சொல்லப்பட்டிருக்கிறது.

வசி என்றால் எல்லாவற்றையும் தன்னிடத்தில் உடையவன். வதான்ய : என்றால் வள்ளல் என்று அர்த்தம். எல்லாவற்றையும் தன்னுடைய அதீனத்திலே வைத்துக் கொண்டிருக்கிறான் பகவான். வைத்துக் கொண்டு கொடை வள்ளலாய் அவ்வப்போது வழங்குகிறான்.

இன்னொரு இடத்திலே வேதம் சொல்கிறது வஷட்கார: என்றால் என்னவென்று நினைக்கிறீர்கள்...?

'வஷட்கார சப்தத்தினால் காயத்ரி சொல்லப்படுகிறது' என்கிறது வேதம். அந்த காயத்ரியிலே, எல்லாம் வசமாகியிருக்கிறது. அந்த காயத்ரியிலே இல்லாததே கிடையாது!

ஆகையினாலே வசட் சப்தத்தினாலே சொல்லப்படக்கூடியவன், காயத்ரியினால் சொல்லப்படக்கூடியவன் எம்பெருமான் விஷ்ணு என்று வலியுறுத்துகிறார்கள் மகான்கள். இந்த காயத்ரியே உயர்ந்ததான சஹஸ்ரநாமத்திலே ஆரம்ப மந்திரமாக அமைந்திருக்கிறது.

பிரும்ம வித்துக்களுடைய பலம் எது

## அருள்வாக்கு

**சா**தாரணமாக ஒரு தப்புச் செய்த போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அது ஓர் அழுக்கு மாதிரி உங்கள் மனசையே உறுத்துகிறது. உடனே இந்த அழுக்கை யாரும் தெரிந்து கொண்டுவிடக்கூடாது என்று அதை மூடி மறைக்கத் தோன்றுகிறது. நியாயமாக, தவறுதல் உண்டானவுடன் பிரார்த்தனை பண்ணினால், அந்தப் பிரார்த்தனையே சோப்பைப் போல் அந்தத் தப்பை அகற்றிவிடும். அப்படிச் செய்யாமல் தப்பை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் மூட வேண்டும் என்கிறபோது, பொய் சொல்ல வேண்டியதாகிறது. அழுக்கைத் தேய்த்துக் கழுவாமல், மூடி மூடி வைத்தால் சீழ் பிடித்துச் சிரங்காகிவிடும். அது மாதிரி, தப்பை மூடியவுடன் அது பொய் என்ற சிரங்காக

வென்றால் காயத்ரிதான். காயத்ரியினால் எதையும் சாதிக்கலாம். காயத்ரியை ஜபிக்காமல் மீதி மந்திரங்களையெல்லாம் ஜபித்தால் பிரயோசனமே ஏற்படாது.

த்ரிகால சந்தியாவந்தனம் பண்ணாத ஒருவருக்கு மீதி கர்மாக்களைப் பண்ணக்கூடிய யோக்யதையே கிடையாது. ஏனென்றால் அப்படி சந்தியாவந்தனம் செய்வதால் தான் அவனுக்குச் சுத்தி ஏற்படுகிறது. சுத்தி இல்லையானால், நாம் பண்ணக்கூடிய கர்மாவானது பலனைத் தரவே தராது.

சந்தியாவந்தனத்தின் போது ஜபிக்கப்படும் காயத்ரியினாலே சுத்தி ஏற்படுகிறது நமக்கு.

யார் சுஸ்வரமாக அந்த உயர்ந்த காயத்ரியை உச்சாரணம் பண்ணுகிறார்களோ, அப்படிப்பட்டவர்களை அது ரக்ஷணம் பண்ணுவதாலேதான் அதற்கு காயத்ரி என்றே பெயர்.

ஸாம வேதத்தில், புருஷ சூக்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு காயத்ரிதான் முன்னே இருக்கிறது. காயத்ரியை கானம் பண்ணித்தான் புருஷ சூக்தத்தை கானம் பண்ணுவார்கள். புருஷ சூக்தத்தை கானம் பண்ணுங்கள் என்று ஸாம வேதிகளைக் கேட்டோமானால், காயத்ரியைச் சொல்லித் தான் ஆரம்பிப்பார்கள்.

எல்லாவற்றுக்கு முன்பு இருப்பது இந்த காயத்ரி. அது விசேஷ சப்த ராசியுடன் அமைந்திருக்கிறது. அந்த சப்தத்தை சிரவ

ஆகிவிடுகிறது. உள்ளத்தை ரொம்பவும் கெடுக்கிற பயங்கரமான சிரங்கு பொய்தான்.



எதனால் தப்பை மறைக்கப் பார்க்கிறோம்? ஒன்று, நம்மை மற்றவர் நல்லவன் என்றே நினைக்க வேண்டும் என்ற பொய் எண்ணத்தினால்; அல்லது இன்னொருத்தரிடம் பயத்தினால் மறைக்கப் பார்க்கிறோம். பொய் என்பது சிரங்கு என்றால் பயம் என்பது சொறி மாதிரி.

பெரியவர்களிடமெல்லாம் உங்களுக்கு நிறைந்த மரியாதையும் மதிப்பும் இருக்கத்தான் வேண்டும். ஆனாலும் அர்த்தமில்லாத பயம் கூடாது. பயம் உள்ளத் தூய்மையைக் கெடுக்கிற அழுக்கு. தப்பு செய்தால், கூட, அதை உணர்ந்து, பணிவுடன் உள்ளபடி பெரியவர்களிடம் சொல்ல வேண்டுமே ஒழிய, பொய்யால் மூடி மறைக்கக் கூடாது. தப்பு செய்தது போதாது என்று, பொய்யும் சொன்னோம் என்பது வெளிப்பட்டு நமக்கு மேலும் அவமானம், கஷ்டம்தான் ஏற்படும். உள்ளபடி சொன்னால் பெரியவர்கள் மன்னித்து விடுவார்கள். மன்னிக்காமல் அவர்கள் தண்டித்தாலும் பரவாயில்லை. அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. 'நாம் தப்பு செய்தோம்; அதனால் அதற்குரிய தண்டனையைப் பெறுகிறோம்' என்று தைரியத்துடன் தண்டனையை ஏற்க வேண்டும். தைரியம், சத்தியம் இவை எல்லாம் மன அழுக்கைப் போக்குகிற சோப், சீயக்காய் மாதிரி.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

னம் பண்ணினால் மனனம் பண்ணினால், உயர்ந்த பலனை நாம் அடைய முடியும்.

**பி**ரும்ம என்றும் காயத்ரிக்குப் பெயர். தைத்ரீய உபநிஷத் சொல்கிறது – 'எவனொருவன் பிரும்ம வித்தாக இருக்கிறானோ, அவன் உயர்ந்ததை அடைகிறான்.'

'உயர்ந்தது' என்றால் பரமாத்மா என்று அர்த்தம்.

தசோபநிஷத் பாஷ்யத்திலே பிரும்ம சப்தத்துக்குப் பலபொருள் சொல்லப்பட்டிருக்கிறது.

பரமாத்மா – பரபிரும்மம் என்பது ஒரு பொருள். பரம் என்றால் பிரும்மம்; பிரும்மம் என்றால் பரம்! – பிரும்ம வித்தானவன், பிரும்மத்தை அடைகிறவன் என்று அர்த்தம்.

பிரும்ம வித்தானவன் பரமாகிற பிரும்மத்தை அடைகிறான்.

பிரும்மம் என்றாலே காயத்ரிதான். காயத்ரியை எவன் நன்கு உணர்கிறானோ, அதனுடைய பொருளை எவன் உணர்கிறானோ, எவன் அதைப் பொருள் உணர்ந்து நன்கு தியானம் பண்ணுகிறானோ, அவன் உயர்ந்த எம்பெருமானை அடைகிறான்.

எப்படி 'விஷ்ணுவே யக்ஞம், யக்ஞமே விஷ்ணு' என்றோமோ அதே மாதிரி பிரும்ம வர்சஸ்தான் காயத்ரி. காயத்ரிதான் பிரும்ம வர்சஸ்!

காயத்ரி ஜபிக்கக்கூடியவர் இருமுக மண்டலத்திலே பிரும்ம வர்சஸ் இருக்கும். பிரும்ம வர்சஸ் கொட்டுகிறது பாருங்கள் என்பார்கள்!

பிரும்ம வர்சஸ் எங்கே தெரியும்...? இரண்டு புருவங்களுக்கு மத்தியிலே– நடுவிலே பிரும்மவர்சஸ்ஸானது இருக்கும். விசேஷ சாந்நித்யத்தோடு அந்த புருவ மத்தியிலே இருக்கும் அது. காயத்ரியை ஜபிக்க ஜபிக்க, அந்த உரு ஏற ஏற, அகத்தின் அந்த அழகு முகத்திலே தெரியும்!

அகத்திலே இருக்கக்கூடிய காயத்ரியால் ரூபம் காந்தியுறப்பெற்றவர் வருகிறார்... அப்படிப்பட்டவர்கள் வருகிறார்கள் என்று சொன்னால், தன்னளவிலே உட்கார்ந்திருப்பவர்களெல்லாம் தங்களையறியாமல் எழுந்து நிற்பார்கள்! பார்த்தவுடனே விழுந்து சேவிக்க நினைப்பார்கள்.

'நான் வருகிறேன். நீங்களெல்லாரும் எழுந்திருங்கள், விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ணுங்கள்' என்று சொல்லிக் கொண்டே ஒருத்தர் வந்தால், அவரிடத்திலே பிரும்ம வர்ச்சஸ் இருக்குமா!

பகவான் கிருஷ்ணன் எழுந்தருளிய போது – ஹஸ்தினாபுரம் சபைக்கு நூதனமாக அவர் சென்ற போது யாரும் எழுந்திருக்கக் கூடாது என்று உத்தரவு போட்டார்களாம். ஆனால், என்ன ஆயிற்று தெரியுமோ...?

(வளரும்)

# முரளிக்குச் சிக்கி ரோஜாவுக்கு முக்தி



பதினாறாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டை ஆண்ட முதலாம் பிரான்ஸிஸ் என்ற மன்னன் ஒரு போரில் தோல்வியுற்று, சகலத்தையும் பறி கொடுத்தான். ஆனால் எதிரியிடம் சிறைப்பட்டுக் கௌரவத்தை இழக்கவில்லை. 'All is lost save honour' என்று தன் தாய்க்குக் கடிதம் எழுதினான்.

சௌகார் ஜானகிக்கு நேர்மாறான அனுபவம். 'எல்லாம் கிடைத்தது. கௌரவம் தான் போய்விட்டது' என்று காரசாரமாகக் கமல் மீது கோபித்தார். (ஜெயா – 'வெள்ளித்



திரை') காரணம், 'ஹே ராம்' படத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட பங்குதான்.

"பதின்மூன்று நாள் ஷூட்டிங் நடந்தது. எல்லாரும் கலகலப்பாகப் பழகினோம். பேசிய ஊதியம் பைசா குறையாமல் கிடைத்தது. டைட்டிலில் பெயர் போட்டார்கள்" என்றார்.

பின்னே என்ன குறை?

"ஒரே ஒரு சீனில், ரொம்பக் கோடியில், கதவுக்குப் பின்னால் நின்றுகொண்டு நான் எட்டிப் பார்க்கிறேன். அவ்வளவேதான். கமலைக் கேட்டேன். "நிறைய வெட்டும்படி இருந்தது. அதில் நீங்கள் நடித்த பாகங்களும் போய்விட்டன" என்றார். சீனியர் ஆர்ட்டிஸ்டான எனக்கு மிகவும் அவமானமாகி விட்டது. அதுவும், ஹார்ட் அட்டாக் வந்து ஆபரேஷன் செய்துகொண்டு தேறி வந்த சமயத்தில் இப்படி ஒரு ஷாக். மன உறுதியினால் உயிர் பிழைத்தேன். என் ரசிகர்களுக்கும் ரொம்பக் கோபம். இப்படி அவமானப்பட்டு விட்டதால், இனி எந்தப் படத்திலும் நடிப்பதில்லை என்று தீர்மானித்து விட்டேன்" என்று வெடிக்கும் சீற்றத்தை அடக்கிக் கொண்டு பேசினார் சௌ-காரம்.

கணவனின் கொடுமை தாள முடியாமல் போனால் விவாகரத்து செய்யப் பெண்கள் தைரியமாக முன் வர வேண்டும் என்பது சௌகாரின் அட்வைஸ். தன் வாழ்க்கையையே உதாரணமாகக் காட்டி, "இப்போது நான் சந்தோஷமாக இருக்கிறேன். Happiness is what you have inside you" என்று அழுத்தமாகச் சொன்னார்.

மேட்டூர் அணையைத் திறந்துவிட்ட மாதிரி வருகிறது பேச்சு வெள்ளம் – அருமையான ஆங்கிலமும் கலந்து எனினும், உடல் நலக் குறைவு காரணமாக அவர் இடதும் வலதுமாக இழுத்து இழுத்து நடப்பதைப் பார்க்கும்போதுதான் கஷ்டமாக இருக்கிறது.

கர்னாடக சங்கீதம் என்று ஒன்று இருக்கிறது என்பதை அவ்வப்போது நமக்கு நினைவூட்டி வரும் விஜய் டி.விக்குப்



பொன்னாடை போர்த்த வேண்டும். ஃபினாரென்ஸ் நைட்டிங்கேல் சொன்னது போல : Begin not with a programme, but with a deed.

எங்கே நடந்ததோ, எப்போது நடந்ததோ, ஏதாவதொரு கச்சேரியை ஒளிபரப்பிப் புண்ணியம் தேடிக் கொள்கிறார்கள்.





மார்கழி மாதம் நடத்திய 'மகோத்சவ' நிகழ்ச்சியைக் கொஞ்ச நாள் முன்பு மறுஒளிபரப்பு செய்தார்கள். சென்ற வாரம் 'நாதப் பிரம்மம்' சார்பில் நடந்த ஸ்ரீமதியின் கச்சேரியைக் காட்டினார்கள். (மிருதங்கம் வாசித்தவர் அழகான கட்டுக் குடுமியுடன் காட்சியளித்ததால் நிகழ்ச்சி நடந்த இடம் சிதம்பரம் என்று ஊகிக்க முடிந்தது.)

ஸ்ரீமதிக்குக் கொஞ்சம் கனமான சாரீரம். ஆனாலும், பூர்விகல்யாணி ஆலாபனையும், 'ஞானமு' கீர்த்தனையில் 'பரமாத்முடு ஜீவாத்முடு' சரணத்தை நிரவல் செய்த விதமும் ரசிக்கும்படி அமைந்திருந்தன. பெரிய மூக்குக் கண்ணாடி அணிந்த சின்ன பையன் வயலினில் அசத்தினான்.

'சொன்னால்தான் காதலா' படத்தில் முரளிக்கும் ரோஜாவுக்கும் உச்சக்கட்ட உரசல்கள் எக்கச்சக்கமாக இருக்கின்றன. 'சொன்னால்தான் காதலா' பாட்டிலும் அப்படியே. இருந்தாலும் இயக்குனர் ராஜேந்தருக்குத் திருப்தி இல்லை. Always aiming at perfection. முரளி - ரோஜா காதலின் சக்தியைத் தூக்கிக் காட்ட ஆசை.

எனவே அவர்கள் உரசும் போதெல்லாம் பின்னணியில் குபீர் குபீரென்று நெருப்புப் பந்துகள் பறப்பதைக் காட்டியிருக்கிறார். முரளிக்குச் 'சிக்கி' என்றும் ரோஜாவுக்கு 'முக்கி' என்றும் பெயர் சூட்டியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

"ரொம்ப சந்தோஷமா" இருக்குதுங்க. எங்க கஷ்டம் தீர்ந்ததுங்க' என்று நெய்வேலி தண்ணீரின் வருகை குறித்து மன நிறைவுடன் சொல்லும் மக்களைக் காட்டுகிறது ஜெயா.

காலிக் குடங்களுடன் சாலை நடுவே உட்கார்ந்து மறியல் செய்யும் ஜனங்களைக் காட்டுகிறது ஸன்.

அவர்கள் மீது தப்பில்லை. 'Truth is the most valuable thing we have. Let us economise it' என்று மார்க் ட்வெயின் சொன்னதைக் காப்பாற்றுகிறார்கள்.

"இனிமேல் யாரையும் வாத்து மடையன் என்று இகழக் கூடாது. ஏனென்றால் வாத்து வளர்ப்பவர்கள் நல்ல வருமானத்துக்கு வழி செய்து கொண்டிருக்கும் புத்திசாலிகள்" என்று சொன்ன கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியரொருவர் 'பொதிகை'யில் விளக்கினார். ஆடு, மாடு, கோழி முதலியன வளர்ப்பது குறித்து இந்தத் தொடரில் நல்ல யோசனை சொல்லித் தருகிறார்கள்.

மூன்று ஆண் வாத்தும் ஏழு பெண் வாத்தும் வளர்த்தால் எல்லாச் செலவுகளும் போக லாபம் ஈட்டலாம் என்று இந்தப் பேராசிரியர் சொன்னார்.

A suggestion to our cricket board: 'டக்' எடுப்பதில் சாதனை புரிந்து வரும் அஜித் அகர்கர் ஒரு வாத்துப் பண்ணை தொடங்க ஏன் நிதியுதவி செய்யக் கூடாது?

வினோத்

❒ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
ஜே. ராஜகோபாலன்,
12B, Type II குடியிருப்பு,
பிளாக் 25, நெய்வேலி – 607 803

● கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர்.

? கல்கியின் பலம் 'சத்தியம், நடுநிலை, நேர்மை' என்றால், பிடிக்காதவர்களைத் தூற்றும் போது இதெல்லாம் அடிபட்டுப் போகிறதே..?

! நமக்குப் பிடிக்காதவர்கள் என்று யாருமே கிடையாது; பிடிக்காத செயல்கள் மட்டுமே உண்டு! தூற்றுவதே கிடையாது. கண்டிப்பது உண்டு.

● ரு. கணேசன், பனங்கோட்டூர்.

? முந்தைய ஆட்சியில் சட்டம் தன் கடமையைச் செய்தபோது குதூகலித்தவர்கள், இப்போது சட்டம் தன் கடமையைச் செய்யும்போது மட்டும் குமுறுவது ஏன்..?

! ஜெயலலிதாவுக்கு எதிரான வலிமையான வழக்குகள் ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு அரசியல் தலையீட்டால் திட்டமிட்டு வலு விழந்து போகுமாறு செய்யப்படுகின்றன. அதே நேரத்தில் கடந்த கால ஆட்சி மீது ஜெ சுமத்தும் வலிமையற்ற குற்றச் சாட்டுகள், மகாபாதகங்கள்போல் ஒரு மாயத் தோற்றம் உருவாக்கப்படுகிறது. இதுதான் சட்டம் செயல்படும் விதம் என்றால் குமுறலுக்குக் காரணம் இருக்கவே செய்கிறது.

! சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர மத்திய அரசிடம் மானியம் கேட்டதுபோல், வட்டி தள்ளுபடிக்கு உலக வங்கியிடம் கடன் கேட்கக் கூடும், தமிழக முதல்வர்!

● கல்லார் ரஹ்மத், நாகை-1.

? மூப்பனார் ஏன் காமராஜரைப் போல மக்களைக் கவர முடியவில்லை...?

! கொள்கையில் உறுதி இல்லாததால்.

● சின்னஞ்சிறுகோபு, மயிலாடுதுறை.

? இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் கார்டூனிஸ்ட்ஸ் அமைப்பு வழங்கிய 'வாழ்நாள் சாதனையாளர் விருது' பெற்றிருக்கும் ஓவியர் கோபுலு பற்றி...?

! வரையப்படும் கதாபாத்திரம் அல்லது நபரின் பண்பை, மிகச் சில கோடுகள் உபயோகித்தே முழுசாக வெளிப்படுத்தக் கூடியவர். அச்சில் வார்த்ததுபோல் எல்லா கதைகளுக்கும் ஒரே முகத்தைச் சித்திரமாக்கும் இன்றைய அவசர யுகத்தில் தனித்து ஒளிரும் கைத்திறனாளர். விருதுக்கு முற்றிலும் தகுதியானவர்.


● பி.பி. சந்திரசேகரன், கரூர்.

? அ.தி.மு.க. அமைச்சர்கள், பத்திரிகை நிருபர்களைக் கண்டாலே ஓடி விடுகிறார்களே... ஏன்?

! சர்வாதிகாரத்துக்குத் தலை வணங்குவதால்.

# ஜெ.வுக்குத் தமிழக அரசே பொது மன்னிப்பு வழங்கலாமா..?


• கல்தா காலம்!


• நோக்க

● ப.கந்தசாமி, திருச்செங்கோடு.

? சாதிக்க வேண்டும் என்று நினைக்கும் இளைஞன் முதலில் சிந்திக்க வேண்டிய விஷயம்...?

! எதை சாதிக்க வேண்டும் அல்லது என்ன சாதிக்க வேண்டும் என்பதை!

● ஜான் பாஸ்கர், சென்னை – 23.

? '310 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி என்றால் கஜானா காலி என்று சொல்லுவது டாலியாகவில்லை' என்று சு.சுவாமி கேட்கிறாரே..?

● எஸ். மாலதி, முசிறி.

? 'புதுமைப்பித்தனின் நோக்கம் இலக்கியம்; கல்கியின் நோக்கம் வாசகப் பரப்பு' என்று பிரபஞ்சன் ஒரு பேட்டியில் வரையறுத்திருப்பது ஏற்புடையதா...?

! முதல் நோக்கம் அப்படியாயினும் இரண்டாவதாக புதுமைப்பித்தனுக்கு வாசகர் பரப்பும் கல்கிக்கு இலக்கிய அந்தஸ்தும்

கிடைத்துள்ளன என்பதுதான் அவர்களுடைய எழுத்தின் சிறப்பு.

● ஜே. ராஜகோபாலன், நெய்வேலி. ❒

? 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது' என்று




• 'காரண'கர்த்தா!



• ...கடந்து...!



• வாழ்நாள் சாதனை!



• பிழைப்பு கருதி...!

கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் கூறியிருந்தும், நீங்கள் மீண்டும் ஜெயலலிதா முதல்வர் ஆனதை எதிர்ப்பது ஏன்...?

! 'கடமையைச் செய்; பிரதிபலனை எதிர்பாராதே' என்று சொன்னதும் அதே கிருஷ்ணபரமாத்மாதான் என்பதால்.

● சா. சொக்கலிங்க ஆதித்தன், ரோஸ்மியாபுரம். ✱

? ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு

✱ ரூ. 25/- பரிசு பெறுபவர்:
சா. சொக்கலிங்க ஆதித்தன்,
ரோஸ்மியாபுரம்,
நெல்லை மாவட்டம், 627 109.

உணவுப் பொருட்களின் விலை ஏறிக் கொண்டே போகிறதே...?

! உணவுப் பொருட்கள் மட்டும் அல்ல... பால் விலையும் பயங்கரமாக ஏறப்போகுது. பட், எல்லாத்தையும் விட காஸ்ட்லி தண்ணி தான். நெய்வேலி தண்ணி, லிட்டருக்கு மூணு ரூபாய்; ஈரோடு தண்ணி லிட்டருக்கு ஏழு ரூபாய்! வரி செலுத்தறவங்கதான் கொடுக்கப் போறாங்க!

● சி. மகேஷ், சென்னை – 26.

? சிவகந்தர் தாஸ்...?

! பாஸ்!

● எஸ். அப்துல்லா அஹ்மது, நாகூர்–2.

? ஒரு நாடு முன்னேற யாருடைய பங்கு அதிகம் தேவை...?

! நல்லாட்சி, நன்மக்கள், நன்நெறி.

● மா. சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

? 'ஜெயலலிதாவுக்குத் துணை நிற்போம்' என்கிறாரே ஏ.சி. ஷண்முகம்?

! அவர் என்ன செய்வாரு...? என்ஜினியரிங் கல்லூரிகள் நடத்தறாரு, பிழைப்பு ஓடணுமில்லே.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? இந்திய கிரிக்கெட் அணியிலிருந்து சிறிது காலம் கங்கூலியை விலக்கி வைத்தால் என்ன...? ஜிம்பாப்வேயிலும் சொதப்பல் தொடர்கிறதே?

! போகிற போக்கைப் பார்த்தால், இந்திய கிரிக்கெட்டிலிருந்து இந்திய கிரிக்கெட் அணியையே விலக்கி வைக்கும் நிலை ஏற்படும் போலிருக்கிறதே!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? ஜெயலலிதாவுக்குத் தமிழக அரசே பொது மன்னிப்பு வழங்கலாமா சார்...?

! வழங்கலாமே! ஹிந்து பத்திரிகை கலபமான யோசனை 'ஜெ'க்கு எடுத்துக் கூறியிருக்கிறது. சாக்கடையில் 'கங்காஸ்நானம்' செய்துவிட்டு சகல பாபங்களையும் தொலைத்துத் தலை முழுகிவிடலாம்!

# 'பார்த்திபன்

அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபதம்' நாம் அறிவோம். 'பார்த்திபன் கனவும்' வெகு பிரசித்தம். ஆனால் பார்த்திபன் சபதம் தெரியுமா?... சென்னையில் தி.நகர் ராமராவ் கலா மண்டபத்துக்கு ஜூன் பதினேழாம் தேதி மாலை வந்தவர்கள் பார்த்திபன் சபதத்தைப் பார்த்தார்கள்; கேட்டார்கள்; பரவசத்தில் கைதட்டினார்கள்!

கல்கி - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து நடத்தும் இளைஞர் திருவிழாவில், 'மனித நேயம்' என்ற தலைப்பில் ஆறாவது கருத்தரங்கம். "இப்போது முதல் அசைவம் சாப்பிடவே மாட்டேன்." என்று சபதம் செய்தார் சிறப்புரையாற்ற வந்திருந்த பார்த்திபன்!

அரங்கமே கைதட்டி ஆர்ப்பரித்தது. நெகிழ்ந்து போன பார்த்திபன், "இதை நான் கைதட்டல் பெற வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. மனப்பூர்வமாகத்தான் சொல்கிறேன்." என்று கூறவும், மறுபடி கைத்தட்டல்.



• பார்த்திபன்



• கண. சிற்சபேசன்

"இரண்டாண்டுகளுக்கு முன்புகூட, பிராணிகளைத் துடிக்கத் துடிக்கக் கொன்று, தயாரிக்கப்படும் அசைவ உணவைச் சாப்பிடக் கூடாது என நினைத்தேன். அதற்காக, வீட்டிற்குச் சில ஆட்டுக் குட்டிகளையும், கோழிக் குஞ்சுகளையும் வாங்கிக் கொண்டு வந்து, வளர்த்தேன். அவற்றுடன் நெருங்கிப் பழகினால், அவற்றின் மீது ஏற்படும் அன்பு, அசைவம் சாப்பிடுவதைத் தடை செய்து விடும் என்று கருதினேன். ஆனாலும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மீண்டும் அசைவம் சாப்பிட ஆரம்பித்து விட்டேன். இன்றைய நிகழ்ச்சியில், மனித நேயம் பற்றிப் பேச வரும்போதே இப்படி ஒரு கேள்வி வரும் என்று எதிர்பார்த்தேன் எதிர்பார்த்தபடியே கேள்வி வந்தது. இதை ஒரு உந்துதலாய்க் கொண்டு, அசைவம் சாப்பிடுவதை நிறுத்திவிட முடிவு செய்திருக்கிறேன். இன்று என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாள்" என்று உணர்ச்சி மேலிடப்



• பவித்ரா




பேசினார் பார்த்திபன்.

உணர்ச்சி ததும்பிய பார்த்திபனின் சிறப்புரை முடிந்து, நேயர்களின் கேள்வி பதில் நேரம் பற்றிய அறிவிப்பு செய்யப்பட்டவுடன் முதலில் வந்து சேர்ந்த கேள்வி : *சக மனிதர்களிடம் காண்பிக்கப்படுவது மட்டும்தான் மனித நேயமா? மனித நேயமும், கருணை மனமும் கொண்ட நீங்கள் துடிதுடிக்க சாகடிக்கப்பட்டு, தயாரிக்கப்படும் அசைவ உணவை எப்படிச் சாப்பிடுகிறீர்கள்?*

பார்த்திபன் தமது உரையினிடையே தாம் அசைவ உணவு பழக்கமுடையவர் என்பதை யதேச்சையாக வெளிப்படுத்த, கல்கி வாசகி பாரதி சந்திரமௌலி இந்தக் கேள்வியைத் துடிப்புடன் எழுப்ப, கேள்வி வாசிக்கப்பட்டபோதே கைதட்டி விட்டனர் பார்வையாளர்கள்.

அந்தக் கேள்விதான் பார்த்திபன் சபதத்துக்குக் காரணமாயிற்று. பார்த்திபன் சபதம், அரங்கில் ஏற்படுத்திய பரபரப்பு அடங்கும்முன் லட்சுமணன், என்ற வாசகர் மேடை ஏறி வந்து, பார்த்திபன் காட்டிய (புதிய) பாதையில் தானும் அந்த சபதத்தை ஏற்பதாகக் கூறினார். அவரைத் தொடர்ந்து, சபதம்

• மேடையில்







# சபதம்!'



நில்,
கவனி,
வெற்றிகொள்!

ஏற்றார் வாசகி சாந்தி.

மேடையில் இருந்த குத்து விளக்கை, உலகெங்கும் மனித நேயம் மலர்ந்தோங்க, பிரார்த்தித்து, கணெ. சிற்சபேசன், பார்த்திபன், கல்கி ராஜேந்திரன், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி ஆகிய நால்வரும் ஏற்றிய கணம் முதலே ஒவ்வொரு நிமிடமும் நெகிழ்வு, நகைச்சுவை, விறுவிறுப்பு, பரபரப்பு என விழா களை கட்டிவிட்டது.

"மகாபாரதப் போர் முதல் கார்கில் போர்வரை இந்த பூமி எத்தனை யுத்தங்களைக் கண்டிருக்கிறது. இத்தனை போர்களுக்குப் பிறகும் இந்த உலகம் அழிந்து போய்விட வில்லை. ரத்த ஆறுகள் ஓடியும் இந்த வையகம் காணாமல் போய்விடவில்லை. அணு குண்டுகள்கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. இவற்றுக்கெல்லாம் காரணம் மனிதனுக் குள்ளே மறைந்து கிடக்கும் மிக அற்புதமான விஷயம் - மனித நேயம்!

அன்பு, காதல், கருணை இவை அனைத்தையும் கலந்து, சுயநலம் துளியும் இல்லாமல், எதையும் எதிர்பார்க்காமல், இதய சுத்தியுடன் உதவி வாழ்வதுதான் மனித நேயம்.

"அண்மையில் ஒரு பாலத்தின் மேல் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது, வாகனங்கள், பாலத்தில் ஏற்படுத்திய அதிர்வு களை உணர முடிந்தது. பாலத்தின் அதிர்வு, அதன் பலவீனத்துக்கு அடையாளமாயிற்றே என்று என் மனம் எண்ணியது. ஆனால் இஞ்சினியர் ஒருவரைக் கேட்டபோது, பாலத்துக்கு அதிர்வுகள் மிகவும் அவசியம்.

**"தலைவர் கிலுகிலுப்பையை ஆட்டிக் கிட்டே இருக்காரே... ஏன்?"**

**"ஒரு தாயின் பரிவோடு ஆட்சி நடத் தணும்னு சொன்னதைத் தப்பாய்ப் புரிஞ்சுக் கிட்டாரு!"**

***- தஞ்சை தாமு***



அதிர்வுதான் பாலத்தை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது என்றார். அதுபோல, மனிதன் மனிதனாக இருக்க வேண்டும் என்றாலும், நம் மனத்தில் மனித நேயம் என்ற அதிர்வு அவசியம்தானே" என்று வரவேற்புரையி லேயே ஒரு மினி சொற்பொழிவை உள்ளடக்கி வழங்கினார் முரளி.

'நகைச்சுவை'யைத் தன் பலமாகக் கொண்ட ஆயிரம் மேடை கண்ட அபூர்வ மனிதரான கணெ. சிற்சபேசனின் பேச்சில் சிரிக்கவும், சிந்திக்கவும் செய்த விஷயங்கள் ஏராளம்.

"தமிழில் ஏற்கனவே, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, வெண்பா என்று நாலு வகை 'பா'க்கள் உண்டு. இப்போது ஐந்தாவதுபா- மைசூர்பா' என்று கலகலப்பாய் ஆரம்பித்தார் சிற்சபேசன். மனித நேயம் என்பது ரொம்ப சிம்பிள். கரையணும். மனசு, மைசூர்பா மாதிரி கரையணும்.

"மனிதனுக்குப் புறம்பானவற்றைச் செதுக்கி எடுத்து நீக்கிவிட்டால், மனிதன் வந்துவிடு கிறான். மனித நேயம் அங்கே வந்துவிடுகிறது.

"நல்ல விஷயங்களை நிறைய படிக்க வேண்டும். அப்போதுதான் அவன் மனம் தூய்மை அடையும். கசடுகளைச் செதுக்கி யெறிதல் சாத்தியமாகும். தாயுமானவரும், திருவள்ளுவரும் அதைத்தான் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள்.

"டாயன்பீ என்ற உலகப் புகழ்பெற்ற சரித்திர ஆசிரியர் சொல்கிறார் : 'இன்று உலகம் இருக்கிற சிக்கலான சூழ்நிலையில் இந்திய வழியைத் தவிர வேறு வழி தெரிய வில்லை. இந்திய வழி என்பது அசோகர், ராமகிருஷ்ண பரமஹம்சர், காந்தி காட்டிய வழியான அஹிம்சை, அதாவது மனித நேயம்தான்.

"முதல் தடவை வெற்றி பெறுகிறபோது தலையைத் தாழ்த்து. இரண்டாம் முறை வெற்றி பெறுகிறபோது கழுத்தை வளை. மூன்றாம் முறை வெற்றி பெறுகிற போது இடுப்புவரை வளைந்துவிடு" என்றார் கன்ஃபூஷியஸ். பணிய வேண்டும். தாழ்ந்து போக வேண்டும். ஒருவன் தாழத்தாழ அவன் மேலே மேலே உயருகிறான். இந்தப் பணிவை அடிமைத்தனம் என்று தவறாக நினைத்துக் கொண்டு விடாதீர்கள். பணிவு, மனித நேயம் வளர்க்கும்.

"கிரேக்க இலக்கியத்தில் டிராஜடிதான் அதிகம். சோகம் மனத்தைக் கரைத்து

தூய்மைப்படுத்தும் - பிறர்க்கு இரங்குவதால் நாம் உயர்கிறோம். சீதை கஷ்டப்படும்போது நாம் இரங்கினால் நமக்குள்ளே ஒரு கோதை பூக்கிறாள். ராவணின் வீழ்ச்சிக்கு இரங்கினால் ஒரு மனிதன் பிறக்கிறான்.

மனித நேயம் என்பது, முதலில் நாம் நம்மை நேசித்து, மனிதப் பண்புகளை வளர்த்துக் கொண்டு, அதன் மூலம் மற்ற மனிதர்களை, உயிர்களை நேசிப்பதுதான்'' என்று பேசி முடித்தார் கண. சிற்சபேசன்.

பார்த்திபன் டைரக்டோரியல் டச்சுடன் தமது உரையை ஆரம்பித்தார். மைக் அருகில் வந்தவர், சட்டென்று குத்துவிளக்கு அருகில் சென்று, அதன் திரிகளை விரல்களால் தூண்டி, சுடருக்கு வெளிச்சம் கூட்டிவிட்டு, மறுபடி மைக் அருகில் வந்தார். ''விளக்கு, எண்ணெய், திரி எல்லாமே இருந்தாலும், விளக்கை இலேசாகத் தூண்டி விட வேண்டும். மனித நேயமும் அப்படித் தான். நம் எல்லாருடைய மனதிலும் இருக்கிற ஒரு மிகச் சரியான உணர்வு. அதைத் தூண்டி விட வேண்டும்; அவ்வளவுதான்'' என்று அவர் விளக்கியதும் ஏக கைதட்டல்.

தமது 'புதிய பாதை' திரைப்படத்தில் இடம் பெற்ற வசனமொன்றை நினைவுகூர்ந்து பேசினார் பார்த்திபன் : "ஒரு நாள் இந்தப் படத்துக்கு மாலைபோட்டு, கொடி ஏத்தி மிட்டாய் கொடுத்துட்டுப் போயிட்டாங்க. இந்த போட்டோ மாத்திரம் அனாதையாக் கிடந்தது. இது யாருன்னு கேட்டபோது 'காந்தி தாத்தா'ன்னு சொன்னாங்க. நமக்குத்தான் அப்பன் இல்லையே. தாத்தாவாவது இருந்து விட்டுப் போகட்டுமே என்று அந்தப் படத்தை வீட்டுல கொண்டு வந்து மாட்டி வெச்சேன்." - மிகப் பிரபலமாகிவிட்ட இந்த வசனத்தைப் பார்த்திபன் ஞாபகப்படுத்த, மீண்டும் அரங்கு கைதட்டலில் அதிர்ந்தது.

"அந்தக் காட்சிக்கு, தியேட்டரிலும் இதே போலத்தான் கைதட்டல் கிடைத்து" என்றார் பார்த்திபன். "இதனால் என்ன புரிகிறது? காந்தி பற்றி நமக்கெல்லாம் சரியான ஓர் உணர்வு இன்றைக்கும் இருக்கிறது.

"என்னுடைய புதிய பாதை படத்தைப் பார்த்துவிட்டு, ஏராளமான ரசிகர்கள் எனக்கு உருவானார்கள். பட ரிலீசுக்குத் தோரணம் கட்டுவது, இனிப்பு விநியோகிப்பது போன்ற வற்றுக்கு மட்டுமே இவர்களைப் பயன்படுத்து வது தவறு. இவர்களின் சக்தியை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் ரசிகர் மன்றங்களை மனித நேய மன்றங்களாக அமைத்தேன். அவர்கள் பல்வேறு நற்பணிகள் செய்து வரு கிறார்கள். அண்மையில்கூட ராசிபுரம் மனித நேய மன்றத்தின் நூறு இளைஞர்கள், கைக்காசு போட்டு, ஐந்து மாணவர்களின் படிப்புச் செலவுக்கு உதவிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்." என்றார் பார்த்திபன்.



"எல்லாரும் பேசி முடிச்சாச்சு... தலைவர் எதுக்கு இன்னமும் வெயிட் பண்றார்?"

''அவர் கணக்குபடி இன்னும் ரெண்டு பொன்னாடை வரணுமாம்!''

- அம்பை தேவா

''உயிருடன் இருப்பது, உயிர்ப்புடன் இருப்பது என்று இரண்டு விஷயங்கள் உண்டு. தன் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களுக்கு உதவி செய்யாதவன், தன் பிணத்தைத் தானே சுமக்கிறானாம். பிறருக்கு உதவுபவன்தான் உயிர்ப்புடன் வாழ்கிறானாம். நாம் அனை வரும் உயிர்ப்புடன் வாழ்வோம்'' என்று பார்த்திபன் தன் சிறப்புரையை முடித்தபோது அரங்கம் உண்மையில் நெகிழ்ந்து போயி ருந்தது.

நேயர்களிடமிருந்து மடமடவென்று கேள்விகள் வந்து குவியத் தொடங்கின. அதற்கு முன்னதாக வந்தது ஒரு நன்கொடை. பார்த்திபனின் மனித நேயப் பணிகளைப் பாராட்டி வாசகர் ராமகிருஷ்ணன் அளித்த ரூபாய் ஆயிரத்து ஒன்று!

**கேள்வி பதில்களின் தொகுப்பு :**

''பணிந்து போவதுதான் மனித நேயம் என்று சொன்னீர்கள். ஆனால், இன்று பணிவு என்பது கோழைத்தனமாகவும், ஏமாளித்தன மாகவும் அர்த்தப் படுத்தப்படுகிறதே என்று கண. சிற்சபேசனிடம் கேட்டார் டி. அலமேலு. அதற்கு அவரது பதில் : ''பணிவுடன் இருப்பவன் மேன் (மனிதன்) என்றால், அது பற்றிய விமர்சனங்களை ஒதுக்கிவிட்டு, தன்



டைரக்டர் என்பதால், அதிக பட்சம், திறமையானவர்களுக்கு, அஸிஸ்டென்ட் டைரக்டராக வாய்ப்பு தரலாம். ஆனால் பல பேருடைய பசியைத் தீர்க்க, போக்க முடியும்."

''மனித நேயம் எல்லார் மனத்திலும் அடித் தளத்தில் இருக்கிறது. அதை வெளிக் கொண்டு வருவதற்கு உங்கள் அறிவுரை என்ன?'' (கேட்டார் பானுமதி)

கண. சிற்சபேசன் பதில் சொன்னார். "நீங்கள் நீங்களாகவே இருங்கள். தன்னாலேயே மனித நேயம் வெளிப்படுகிறபோது அதற்குத் தடை போடாதீர்கள். உங்கள் மனசாட்சி, மனித நேயம் பேசுகிறபோது காது கொடுத்துக் கேளுங்கள். அதுபோதும்."

திருமாறனின் கேள்வி : ''வறுமையில் இருப்பவரால் எப்படி உதவி செய்ய முடியும்?"

பார்த்திபன் : "உதவ வேண்டும் என்ற எண்ணம்தான் முக்கியம். அது இருந்தால், எவ்வகையில் உதவ முடியுமோ அப்படி உதவிட முடியும். எண்ணம் நல்லதாக இருந்தால், எல்லாம் நல்லதாக முடியும்.

மனித நேயம் பற்றி ஒரு புது விளக்கம் தந்து தெம்பூட்டினார் கல்கி ராஜேந்திரன், தமது நன்றியுரையில் : "மனித நேயம் என்பது உதவி செய்யும் குணம் மட்டுமில்லை. அடுத்தவர்க்கு உதவுவது நட்பு. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட, குஜராத் மக்களுக்கு உதவுவது இரக்கம். மனித நேயம் இதற்கெல்லாம் மேம்பட்ட ஒன்று. ஒட்டுறவு, ஒத்துழைப்பு இவையனைத்துக்கும் மேலாக தேசபக்தி என்பது ஒருவனுக்கு இருக்குமானால் மனித நேயம் இயல்பாகவே மலர்ந்துவிடும்."

வழியில் தொடர்ந்து பணிவுடன் செல்கிறவன் சூப்பர் மேன்."

"மனித நேயத்தை வியாபாரமாக்கிவரும் ஆசிரமங்கள், தொண்டு நிறுவனங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று பலர் மனத்திலும் எழுகிற எண்ணத்தையே கேள்வியாக்கினார் எஸ். ரவிச்சந்திரன். பார்த்திபனின் பதில் :

''சேவை என்ற பெயரில் கமிஷன் அடித்தாலும், அதையும் மீறி சில நற்பணிகள் நடக்கிறதில்லையா? நான் எப்போதும், முதலில் நல்லவனாக நடியுங்கள். பின் தானாகவே நல்லவனாகிவிடுவீர்கள் என்று சொல்லுவதுண்டு. முழு தகுதியில்லாத போதும், கிடைக்கிற பாராட்டு, நாளடைவில் அவர்களை நல்லவர்களாக மாற்றி, தகுதி படைத்தவர்களாக்கிவிடும் என்று நம்புவோமாக."

அடுத்த கேள்வியும் பார்த்திபனுக்கு. ''பசிக்கு உணவு அளிப்பதுதான் மனித நேயமா? திறமைக்கு ஊக்கம் தருவது மனித நேயமில்லையா?" - கேட்டவர் சாம்சன்.

"பசி என்பது மிகக் கொடுமையானது. அதை முதலில் போக்க வேண்டியது நமது கடமை, திறமைக்கு ஊக்கம் தருவது நிச்சயமாக மனித நேயம்தான். நான் ஒரு

தொகுப்பு : **கௌதம்ராம்**
படங்கள் : **யோகா**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



## வர்த்தமானன் பதிப்பகம்

வழங்கும்

### மாபெரும் முன்வெளியீட்டுத் திட்டம்

சலுகை, சலுகை மேல் சலுகை, தவணை முறை ஆதிய அனைத்தும் உண்டு.

ஆழ்வார்களின் அமுதப் பாடல்களான

# நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

மூலமும் விளக்கவுரையுமாக - 9 தொகுதிகள்

(4,500 பக்கங்களில்)

| | |
|---|---|
| விலை | ரூ. 1000.00 |
| வர்த்தமானன் அறக்கட்டளையினரின் உதவித்தொகை | ரூ. 250.00 |
| | ரூ. 750.00 |
| முன்வெளியீட்டுச் சலுகை | ரூ. 150.00 |
| **சலுகை விலை** | **ரூ. 600.00** |

'மயர்வற மதிநலம் அருளப் பெற்ற' ஆழ்வார்களால் திருமாலின் சிறப்பியல்புகளைக் குறித்துப் பாடப்பட்ட தெய்வப் பனுவல் தான் **'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்'** ஆகும். திருமாலின் உயர் நலங்களில் ஆழ்ந்தவரால் பாக்களாகப் பாடப் பட்டமையாலும், தெய்வத் தொடர்புடைமையாலும் இது திவ்வியப் பிரபந்தம் எனப்படுகிறது.

இந்நூலிற்கு உரைவகுத்த டாக்டர் இரா. வ.கமலக்கண்ணன் வித்துவான், பி.லிட், எம். ஏ (சிறப்புநிலை) பி.எட், பி.எச்.டி, முதலிய பட்டங் களைப் பெற்றவர். பல ஆண்டுகளாக மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், பின்னர் தலைமையாசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். இவரின் 'உலகப் பெருங்கவிஞர் கம்பர்' என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுத்து வரும் பேரகராதிக்கு 'முதலாழ்வார் பாசுரங்கள் முந்நூறுக்கும்' இவர் 'சொல்லடைவு' அமைத்துக் கொடுத்துள்ளார். திருமலை திருப்பதி தேவஸ்தான மாத வெளியீடான 'சப்தகிரி'யில் இவரது வைணவ சமயம் பற்றிய கட்டுரைகள் பல இடம் பெற்று வருகின்றன. 'ஆலய தரிசனம்' மாத இதழிலும் இவரது கட்டுரைகள் வெளிவருகின்றன.

இப்படியாக எழுத்தாற்றல் அனுபவமும், சென்னை வானொலியில் சமய இலக்கியப் பேருரைகள், பல வைணவ மாநாடுகளில் சிறப்புரையாற்றிய அனுபவமும், 40 ஆண்டுகளாக இவர் சேகரித்து வைத்த ஆய்வுச் செய்திகளுடன், சம்பிரதாய நூல்களை வல்லார் வாய்க் கேட்டும் பெற்ற அனுபவ அறிவும் சேர்ந்து உருவானது தான் இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்த விளக்க உரை.

**4000 பாடல்களுக்கும் விளக்கவுரை மற்றும் சிறப்புரையும் என்று அமைக்கப்பட்ட இந்நூலின் தொடக்கத்தில், உரையாசிரியர் எழுதிய ''நூலினைப்பற்றிய செய்திகள்'' என்னும் பகுதி விரிவான முன்னுரையாக, நூலிற்கு முத்தாய்ப்பாய் அமைகிறது.**

**தபாலில் பெற**

சலுகை விலையான ரூ.600 இல் ரூ.300 (M.O / DD) மட்டும் 7.7.2001 க்குள் அனுப்பிப் பதிவு செய்து கொள்க. 6.8.2001 லிருந்து பணம் வந்த வரிசைப்படி 9 தொகுதி களும் V.P.P.யில் அனுப்படும். மீதித் தொகை ரூ.300, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.50 சேர்த்து ரூ.350 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**நேரில் பெற**

எமது அலுவலகத்தில் ரூ. 300 மட்டும் செலுத்தி (7.7.2001 க்குள்) முன் பதிவு செய்து ரசீது பெற்றுக் கொள்க. ரசீதில் குறித்த தேதியில் மீதித் தொகை ரூ.300 மட்டும் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

**முகவரி: வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ், 141, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. (பனகல் பார்க் அருகில்) ✆ : 8142377 .**

முக்கிய குறிப்பு : Cheque (Local உட்பட) ஏற்கப்படமாட்டாது M.O./DD அனுப்புவோருக்கு நூல்கள் தபாலில்தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. ஒரே தடவையில் சலுகை விலையினைச் செலுத்துவோர்க்குச் சிறப்புச் சலுகை எதுவும் கிடையாது.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

